IDHAYANILA
February 2013 Vol 3 Issue 10 Rs:15 /- Annual subscription Rs:180



ஒவ்வொரு இல்லமும் ஒரு கோவில். தாய்தான் அதில் தெய்வம் - ஆனால் இங்கு தெய்வங்கள் பூஜிக்கப்படுவதில்லை!

அம்மாவின் இறுதி ஊர்வலத்திற்கு வந்திருந்த உறவினர் கூட்டம் கல்லெறிபட்ட காக்கைக் கூட்டமாய் சிதறி ஓடின. அம்மா ஒன்றும் நிறைய சொத்தோ பணமோ சேர்த்துவைக்கவில்லையே. அப்படி ஏதேனும் இருந்திருந்தால் மூன்றாம் நாள் காரியம் வரையாவது உறவுகள் நின்றிருக்கும்.

இந்த ஓட்டுவீட்டில் நாலைந்து அலுமினியப் பாத்திரங்களோடு இருபத்தி நான்கு வயது நிரம்பிய பெண்ணையும் அல்லவா விட்டுவிட்டு போயிருக்கிறார்.

பிறகெப்படி சொந்தங்கள் நிற்கும்? நின்றால் எங்கே தங்கள் தோளில் பாரத்தை ஏற்றிவைத்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு. வந்தவர்கள் சொல்லிக் கொள்ளாமல் கிளம்ப, சித்தியும் சித்தப்பாவும் மட்டும் பின்தங்கினர்.

■ சொ.கலைவாணிசொக்கலிங்கம்



# நிழல் தேடும் மரங்கள்

வராந்தாவின் தூணோடு தூணாய் இறுகிப்போய் அமர்ந்திருந்தாள் வைதேகி. இடைவிடாமல் அழுததில் பளிங்கு முகம் கன்றிப் போயிருந்தது.

நேற்றுவரை இந்த வராந்தாவின் ஓரத்தில் படுத்திருந்த அன்னை இன்று இல்லை. இனி எப்போதுமே வரப்போவதும் இல்லை. இந்த வீட்டில் இனி அவளுக்கென்று யாருமில்லை. தனியே படுத்து... தனியே எழுந்து நடமாடி... நினைப்பே பயமுறுத்தியது.

இறுதிவரை அம்மாவோடு போராடிய நைந்துபோன தையல் மிஷினை கழற்றிக் கொண்டிருந்தார் சித்தப்பா. எதற்காக இதைக் கழற்றுகிறார் எனக் கேட்கவும் தோன்றாமல் நிலைத்த பார்வையோடு இருந்தவளிடம்,

பழசுதானேம்மா. இதைக் கழற்றி வித்தால் வெட்டியான் செலவுக்கு கொடுத்த காசு தேறுமான்னு பார்க்கணும் என்றார்.

அப்போதும் வைதேகியிடம் அசைவில்லை. பார்வையில் ஏளனமும் வெறுப்பும் கூடின. இதையே சம்மதமாக எடுத்துக்கொண்டு அவர் தன் வேலையில் மும்முரமாக, அடுத்த வீட்டு சுந்தரிப்பாட்டி வேகமாக வந்து தடுத்தாள்.

''ஐயா! இதையுமா விக்கணும்? பாவம்யா. பொம்பளப்புள்ள. இது நாலு துணிய தைச்சு அது வயித்துப்பாட்டை பாத்துக்குமே. இதை வெச்சிடுங்கய்யா. அது வயித்தில அடிச்சிடாதீங்க''

''ஏய் கிழவி! இது எங்க குடும்ப விஷயம். இதுல நீ ஏன் தலையிடுற?'' என்றார் சித்தி.

''எதும்மா குடும்ப விசயம்? கூடப்பொறந்த அண்ணன் பொஞ்சாதி சாவுக்கு வந்து வெட்டியான் செலவு செய்ததற்கு எரியுற வீட்டில் அபுடுங்கின வரைக்கும் லாபம்னு புடுங்குறீங்களே. இதுவா குடும்ப விஷயம்?''

''ஏம்பாட்டி! அண்ணனே இல்லன்னு ஆகிட்டார். அப்புறம் எப்படி நான் செலவு பண்ணுறது? ஏதோ சாவுசமாச்சாரம் வராம இருந்தா நல்லா இருக்காதேன்னு வந்தோம். அதுக்காக எல்லாச் செலவையும் ஒத்துக்க முடியுமா?''

''அதுக்கு சொல்லலய்யா. தாயும் இல்லாம தகப்பனும் இல்லாம அநாதையா நிக்கிற புள்ளய யாரும் கூட்டிட்டு போகமாட்டேனுட்டீங்க. அப்புறம் அந்தப் புள்ள வயித்துக்கு என்னய்யா பண்ணும்?



தாயோட சேர்ந்து தையல் கத்துகிட்டு துணி தெச்சிக் கொடுத்து பொழப்ப ஓட்டுது. அதுல போய் கைவெச்சா எப்படிய்யா?'' பாட்டியும் விடாமல் போராட சித்தியின் கோபம் எல்லை மீறியது.

''இதுக்குத்தான் இந்த கருமாந்திரத்துக்கெல்லாம் வரவேண்டாம்னு சொன்னேன். என்னவோ பெத்து வளர்த்த ஆத்தாளே போயிட்ட மாதிரி அலறியடிச்சிட்டு வந்தீங்க. இப்படிக் கண்டவங்கக்கிட்டயும் பேச்சுக் கேட்கவா என்னையும் கூட்டிட்டு வந்தீங்க?

எழுந்து வாங்க. இன்னிக்கு எட்டு நூறு ரூபா தண்டம் அழணும்னு இருந்திருக்கு. வாங்க போலாம். ''பாட்டி! நீங்க எதையும் தடுக்காதீங்க. யார் யாருக்கு என்ன வேணுமோ எடுத்திட்டுப் போகட்டும். விட்டுடுங்க''

''இல்ல கண்ணு. அது உன் ஆத்தா நீ பொறந்ததுல இருந்த உட்கார்ந்த மிஷினும்மா. அவ கண்ணை மூடுறவரைக்கும் அதுதான் உங்களுக்கு சோறு போட்டுது. அதைப்போய்...''

''போகட்டும் பாட்டி. அம்மா வாழ்ந்த வரை யார்கிட்டயும் ஒத்தரூபா கடன் வாங்கினதில்ல. செத்தபிறகு ஏன் கடனாளியாகணும்? இந்த மிஷின் போனாப் போகட்டும். நீங்க எடுத்திட்டு போங்க'' என்றதும் கழற்றியதை எல்லாம் மளமளவென ஒரு கோணிப்பையில் போட்டு மூட்டையாய் கட்டிக்கொண்டு அடுத்த பத்தாவது நிமிடம் மனைவியோடு மாயமானார் சித்தப்பா.

வீடு முழுக்க வெறுமையாகிவிட அதுவரை நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பொங்கியது. தாயோடு தன் வாழ்வும் முடிந்து போனால் நன்றாய் இருக்குமே என்று தோன்ற நெஞ்சுவிம்மியது. சுந்தரி பாட்டி ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள்.

''ஆத்தி! இப்படி அழாதம்மா. ரெண்டு நாளா அழுதது போதாதா?

''கபாலியை போலீஸ் ஏன் பிடிச்சிட்டுப் போகுது...?''

''ஏன் பிடிச்சிட்டுப் போகக் கூடாது?''

''போலீசுக்கு மாமூல் வர்ற மாதிரி அவன் என்ன தப்பும் செய்யலையாம்...''

-ஜி.வி.மனோ, தூத்துக்குடி.



அழாத கண்ணு''

''காலம்பூரா என்னைத் தனியா அழவெச்சிட்டு போயிட்டாங்களே பாட்டி. நானும் அம்மாவோடயே போயிருக்க...''

''அடிராசாத்தி! இப்படியெல்லாம் பேசக்கூடாதும்மா. நான் இருக்கேனே உனக்கு. உன் அப்பன் உன்னை கையில கொடுத்திட்டு ஓடி போனப்போ உன் அம்மாவுக்கு நான்தான் துணையா இருந்தேன். இப்ப உனக்கு இருக்கமாட்டேனா? அழாதே கண்ணு முகமெல்லாம் வீங்கிப் போச்சே'' கண்ணீரைத் துடைத்தாள் பாட்டி.

''ஏன் பாட்டி எந்தச் சொந்தமும் என்னை ஒத்துக்கல? வயசுப்பொண்ணு எப்படி தனியா இருப்பான்னு ஏன் பாட்டி யாருமே வருத்தப்படல? இதுதான் சொந்தமா? இப்படிப்பட்ட சொந்தங்கள் தன்னை ஒதுக்கிட்டதா எத்தனை நாள் அம்மா அழுதிருக்காங்க?

இப்படிப்பட்ட சொந்தங்கள் தேவையா பாட்டி? பணம் இருந்தால் தான் சொந்தபந்தங்கள் எல்லாம் கூட வருமா? குமுறினாள் வைதேகி.

''எல்லாம் காலத்துக்கு ஏத்தாப்போல மாறிப்போச்சம்மா. பணம் பணம்னு பணத்தின் பின்னே தானே எல்லாரும் ஓடுறாங்க. பணத்துக்கு இருக்கிற மதிப்பு மனுஷங்களுக்கு எங்கே இருக்கு?

இதையெல்லாம் பேசினா துக்கம்தான் மிஞ்சும். தாயி! நீ தலையை உலர்த்திக்க. நான் போய் உனக்கு குடிக்க சூடா காபி கொண்டு வர்றேன்''. என்றவாறு பாட்டி வெளியே சென்றாள்.

மீண்டும் தனிமை சூழ்ந்துவிட, எழுந்து சுவரில் மாட்டியிருந்த அன்னையின் புகைப்படத்தை நெருங்கினாள். அம்மாவை வற்புறுத்தி எடுத்த படம் அது. அம்மா கொஞ்சம் சங்கோஜமாய் சிரித்த முகத்தோடு அற்புத அழகோடு இருந்தாள்.

இது சமீபத்தில் எடுத்த படம் தான். இதிலேயே அம்மா இத்தனை அழகு என்றால் இளவயதில் இதைவிட அதி அழகோடு தான் இருந்திருப்பாள். பிறகேன் அம்மாவை விட்டுட்டு ஓடினான் அம்மாவின் கணவன்.

ஏனோ அவனை அப்பா என்று சொல்லவோ மரியாதை கொடுக்கவோ தோன்றுவதில்லை. எப்படித்தோன்றும்? தாலிகட்டியவளுக்கு குழந்தையைக் கொடுத்துவிட்டு எவளுடனோ ஓடிப்போனவனை எப்படி மதிக்கத் தோன்றும்?



அப்பா என்று சொல்ல மனம் வருமா? பிறக்கக் காரணமாய் இருந்தால் மட்டும் அப்பாவாகி விட முடியுமா? தன்னை வைத்துக் கொண்டு இந்தக் கொடிய உலகில் வாழ அம்மா எத்தனை போராடியிருப்பாள்?

கட்டியவளையும் பெற்றபிள்ளையையும் தவிக்க விட்டுட்டு அவன் எங்கே எவளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறானோ? அம்மா. கடைசிவரை அவனது பெயரையும் சொல்லவில்லை. அவன் புகைப்படமும் வீட்டில் இல்லை.

அம்மாவின் பெயர் முதல் எழுத்தையே தனது இனிஷியலாக்கிக் கொண்டாள் வைதேகி. தன் இறுதி மூச்சு வரை தன்னை விட்டுப் போன கணவனை எண்ணி அம்மா ஒருநாளும் கண்ணீர் விட்டதில்லை.

தன்னை மணந்து ஒரு குழந்தைக்கும் தகப்பனாகிய பிறகு இன்னொரு பெண்மீது மோகம் கொண்டு ஓடியவனை எண்ணி நான் ஏன் அழவேண்டும் என்ற வைராக்கியம்.

சுந்தரிப்பாட்டி அடிக்கடி சொல்வாள். ''உன் அப்பன் போகும்போது நீ ரெண்டுமாசக் குழந்தை. உன் அம்மாவோட சொந்தக்காரங்க எல்லாம் வந்து இந்தப்புள்ள வேண்டாம் உனக்கு. அவனே போனபிறகு அவன் பிள்ளை எதுக்கு?

அநாதை ஆசிரமத்தில கொண்டுப்போய் போட்டுடு. உனக்கு வேற ஒரு பையனைப் பார்த்து கட்டிவைக்கிறோம். புள்ளையோடு இருந்தா எவனும் கட்டிக்க மாட்டான்னு சொன்னாங்க.

ஆனா உன் அம்மா அசைஞ்சு கொடுக்கலையே. அந்த ஆளு செய்த தப்புக்கு நான் ஏன் என் பிள்ளையை தண்டிக்கணும்? இது என் பிள்ளை. பத்து மாசம் அரும்பாடுபட்டு நான் சுமந்து பெத்த பிள்ளை. இதை தூக்கிப்போட என்னால முடியாது.

நீங்க செய்து வைத்த ஒரு கல்யாணமே போதும். இனி இந்த மாதிரி பேசிகிட்டு இங்க யாரும் வரவேண்டாம். எனக்கு எம் பிள்ளை மட்டும் போதும். இவளுக்காக மட்டுமே வாழுவேன்னு சொல்லிட்டா.

அப்படி போன சொந்தம்தான். அப்புறம் நீ ஆளாகி நின்னப்பக்கூட வரல. உன் அம்மா ஒத்தையாவே நின்னு உன்னை வளர்த்தா'' என பெருமூச்சு விடும்போதெல்லாம் தன் அன்னையின் மீது அளவு கடந்த அன்பும் மதிப்பும் பெருமையும் உண்டாகும். ஆனால் அத்தனை கம்பீரமாய் இருந்த அம்மாவை எப்படி அந்த எமன் உடனே எடுத்துக்கொண்டான். நோய் என்று படுக்கவில்லை. மருத்துவமனை சென்றதில்லை.

உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் கனடா நாட்டில் உள்ள மாண்ட்ரியல் என்ற இடத்தில் உள்ளது. இது 55 ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

ஜி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி



வயிற்றுவலி என்று ஒரு நாள் தான் துடித்தாள். வெகு நேரம் அல்லது வெகுநாட்களாக மறைத்தாளோ என்னவோ! மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போதே உயிர்போயிற்று.

நிம்மதியாக... நிம்மதியாக கண்ணை மூடியிருப்பாளா? இருக்காது. பெண்ணைத் தனியே விட்டுப்போகிறோமே என்ற தவிப்பில் தான் போயிருப்பாள். கண்களில் நீர் நிறைந்து தாயின் புகைப்படத்தை மறைத்தது.

எத்தனை அழுதும் இந்தக் கண்ணீர் இன்னும் வற்றவில்லையே. ஆயாசமாய் தூணில் சாய்ந்த நேரம் சுந்தரிப்பாட்டி கையில் செம்போடு வந்தாள்.

''கண்ணு! கருப்பு கட்டி சுக்கு எல்லாம் தட்டிப்போட்டு கருப்பு காப்பி கொண்டாந்திருக்கேன். சூடா இருக்கு குடிம்மா.''

''எனக்கு இப்ப எதுவும் வேணாம் பாட்டி''

''வயசுப்புள்ள வயித்தக் காயப்போடக் கூடாது. ரெண்டு நாளா சாப்பிடாம கிடக்கியே. முதல்ல இதைக்குடி. மதியத்துக்கு சாதம் கொண்டாரேன்.'' என்றவாறே சூடான காபியை டம்ளரில் ஊற்றி நீட்டினாள்.

வைதேகியின் கண்கள் மீண்டும் கசிந்தன. ''பாட்டி! உங்களுக்கும் எங்களுக்கும் என்ன பாட்டி உறவு? உங்களுக்கு மட்டும் எப்படி எங்க மேல இவ்வளவு அன்பு? காிசனம்?''

''ஏழை எளியதுங்க கிட்டதாம்மா அன்பும் கொட்டிக் கிடக்கு. நானும் புள்ளை குட்டி இல்லாதவதான். உன் ஆத்தாளை எம்பொண்ணாத்தான் நினைச்சேன். நீ ஒவ்வொரு முறை பாட்டின்னு கூப்பிடும் போதுஎம்பேத்தியாத்தான் நினைக்கிறேன். இந்த உறவு போதும்மா எனக்கு. மனசு நிறைவா இருக்கும்மா. என் காலம் வரைக்கும் உனக்கு துணையா இருப்பேன். அதுக்கு பிறகு என்னாகுமோ?'' பாட்டியின் கண்கள் கலங்கியது.

''அப்படியெல்லாம் பேசாதீங்க பாட்டி. எனக்கு உங்களை விட்டா வேறு யாருமே இல்லை''

''ஏன் இல்லை. அதான் நாங்க இருக்கோமே'' என்றவாறு உள்ளே நுழைந்தாள் கங்கா அத்தை. கூடவே மாமாவும்.

''என்ன இருந்தாலும் நீ என் அண்ணன் பொண்ணு. உன்னை அம்போன்னு விட்டுட்டு போக முடியுமா? அதான் மனசு கேட்காம திரும்பி வந்துட்டோம். சொல்லுங்க'' என்றவாறு கணவனை இடித்தாள்.

அவர் என்ன சொல்லுவார். 'வீட்ல போயி குளிச்சுக்கலாம். இங்க இன்னும் கொஞ்ச நேரம் நின்னாலும் இந்த தரித்திரத்தை நம்ம தலையில் கட்டிவிடுவார்கள். வாங்க போகலாம் என அழைத்துச் சென்றவளின் காதில் இந்த ஓட்டு வீடு உன் அண்ணன் சொத்து. இன்னும் அவர் பெயரில்தான் இருக்கிறது என்று யாரோ ஓதி விட இதோ திரும்பி ஓடிவந்திருக்கிறாள்' என்று சொல்ல முடியுமா?

எதற்கு வம்பென்று அமைதியாய் அவர் நின்று கொண்ட. ''இவர் எப்போதும் இப்படித்தான். வாயைத் திறக்கவே மாட்டார். அம்மா!தேவகி...'' என்ற அத்தையிடம்,

''தேவகி இல்ல வைதேகி'' என்றாள் பாட்டி.

''சரி எதுவோ ஒன்னு. ஆயி அப்பன் இல்லாம இந்த ஒத்த வீட்ல தனியா எப்படி இருப்ப. அதனால நான் சொல்ற மாதிரி செய்யிறியா. இனிமே நீ இங்கே இருக்க வேண்டாம்.''

பாட்டி மலர்ந்தார்.'' ஆத்தா மகமாயி! இந்த ஒரு சொந்தமாவது இந்தப் புள்ளைய கூட்டிட்டுப் போக ஒத்துக்கிச்சே. உனக்கு ரொம்ப புண்ணியமாப் போகும்மா.''

''அவசரப்படாதீங்க. நான் என்ன புள்ளகுட்டி இல்லாதவளா? எனக்கும் நாலுபுள்ள இருக்கு. அதுகள வளர்க்கவே நான் படாதபாடு பட்டுட்டு இருக்கேன். இதில இவளை கூட்டிட்டு போய் நான் என்ன பண்ணுறது?''

''பின்னே எப்படிம்மா?''

''சொல்றேன். குரோம்பேட்டையில என் நாத்தனார் வீட்டுப் பக்கத்தில ஒரு முதியோர் இல்லம் இருக்கு. போன முறை நான் என் நாத்தனார் வீட்டுக்கு போயிருந்தப்ப அதை நடத்துற ஆள் ஏதாவது பொறுப்பான பொண்ணா இருந்தா சொல்லுங்க. நம்ம இல்லத்துல வேலைக்கு ஆள் தேவைப்படுது. சாப்பாடு தங்குற இடம் எல்லாம் போக நல்ல சம்பளமும்

தர்றேன்னு சொல்லிட்டு இருந்திச்சு.

அது இப்பதான் ஞாபகம் வந்தது. அதான் பஸ்ஸை விட்டுட்டு ஓடிவந்தேன். வைதேகி! அது நல்ல பெரிய ஆசிரமம். அங்க உனக்கு பாதுகாப்பாவும் இருக்கும். ஆறுதலாவும் இருக்கும். அங்கேயே தங்கிக்கலாம். நான் என் நாத்தனார் கிட்ட சொல்லி உன்னைச் சேத்து விடுறேன். வர்றியா?'' என்றாள் அத்தை.

பாட்டி வைதேகியைப் பார்க்க, வைதேகி யோசித்தாள். ''முதியோர் இல்லம் என்றால்... நம் அன்னை வயதில்... அதைவிட மூத்தவர்கள் கூட இருக்கலாம். பிள்ளைகளால் அநாதைகள் ஆக்கப்பட்டவர்கள். பாசத்திற்கும் அன்பிற்கும் ஆறுதலான வார்த்தைகளுக்கும் ஏங்கும் முதிய ஜீவன்கள். கிட்டதட்ட தன்னுடைய நிலையும் அதுதானே. போனால் என்ன?

எப்படியும் சுந்தரிபாட்டிக்கு பிறகு தனக்கு யாரும் கிடையாது. அதனால் உண்ண உறங்க இடமும் பாதுகாப்பும் கிடைத்தாலே போதுமே. தன் தாயை எப்படியெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கனவு கண்டாளோ. அதே போல் அங்கிருப்பவர்களைப் பார்த்துக் கொள்ளலாமே. தனிமை பயமும் எதிர்கால இருட்டும் கிடையாது. முழு மனதோடு தலை அசைத்தாள் வைதேகி.

உடனே அத்தை போன் போட்டு அவள் நாத்தனாரிடம் பேசி வேலைக்கு ஏறபாடு செய்து உடனே சேரும்படிச் சொன்னாள்.

''இல்ல அத்தே! நாளைக்கு அம்மாவோட காரியம் அது முடிஞ்சதும் நானே போய் வேலையில சேர்த்துக்கிறேன். அட்ரஸ் கொடுத்தாப் போதும். நான் கண்டுபிடிச்சு போயிக்கொள்வேன்'' என்றாள்.

''அட்ரஸ் ஒன்னும் பெரிய விஷயமில்ல. தாம்பரத்தில இறங்கி ஒரு ஆட்டோ பிடிச்சு ராம மூர்த்தி முதியோர் இல்லம்னு சொல்லு. கொண்டு போய் இறக்கிடுவான். ஆமா! நீ அங்கே போனப்புறம் இந்த வீடு சும்மாதானே பூட்டிக்கிடக்கும். அது நல்லதில்லையே! அதனால்'' என அத்தை இழுக்கும்போதே வைதேகிக்கு புரிந்து போயிற்று.

எச்சில் கையில் காக்கா கூட விரட்ட மாட்டாள் அத்தை. இன்று என்ன ரொம்ப அக்கறையாய் வந்து வேலைக்கு ஏற்பாடு செய்கிறாளே என்று யோசித்தால் இப்போதல்லவா விடை கிடைத்திருக்கிறது. இந்த வீடு கிடைக்கும் என்ற நப்பாசை தோன்றியது.

அதை மறைக்க விரும்பாமல். ''அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் அத்தை. இது வாடகை வீடுதானே. நான் போனால் அடுத்த



ஆளு வந்துவிடும்'' என்றாள்.

அத்தை திகைத்துப் போனாள். '' என்ன வாடகை வீடா இது என் அண்ணனின் வீடு தானே.''

'' அது அப்போ! நான் பிறக்கும் முன்பே உங்கள் அண்ணன் வித்துச் சாப்பிட்டு விட்டார். இந்த சுந்தரிபாட்டிதான் இப்போ இந்த வீட்டு ஓனர். இவங்க தயவாலதான் இத்தனை வருஷம் இந்த வீட்ல இருந்தோம். இனிமேலாவது பாட்டிக்கு நல்ல வாடகை கிடைக்கும். இல்ல பாட்டி''

அத்தை முகம் சுருங்கிப் போனது. ஏமாற்றமாய் எழுந்தாள். ''சரி வாங்க. இழவு வீட்டுக்கு வந்திட்டு சொல்லாமத்தான் போகணும்'' என்றவாறு விடுவிடுவென வெளியேறினாள்.

பசுபதி மாமா எழுந்தார். முகமெல்லாம் புன்னகையோடு. ''உன் அத்தை சொன்ன இடம் நல்ல இடம்மா. தைரியமா வேலைக்குப் போ. அங்க பக்கத்துலதான் என் தங்கச்சி வீடு இருக்கு. வரும் போது உன்னைப் பார்க்கிறேன். இந்தாம்மா செலவுக்கு வெச்சுக்க'' என்று இரண்டு ஐம்பது ரூபாய் தாளை அவளிடம் கொடுத்துவிட்டு வேகமாய் வெளியேறினார்.

''ஏங்கண்ணு! கண்டிப்பா அந்த வேலைக்கு போகணுமா?''

''போகணும் பாட்டி. மிச்ச காலத்தை ஓட்டணுமில்ல'' அப்போது சொன்னவளை வேதனையாய்ப் பார்த்தாள் சுந்தரி பாட்டி.

''கொஞ்சநாள் இங்கேயே இரும்மா. எவ்வதா ஒருத்தனைப் பார்த்து தானே...''

''வேண்டாம் பாட்டி. நீங்க எங்களுக்கு செய்த உதவியே போதும். இனிமே என்ன நடக்கணும்னு இருக்கோ அது நடக்கட்டும். பெரியவங்களுக்கு சேவைசெய்யுறதும் ஒரு வரம்தானே. எனக்கு அது போதும்'' என முடித்து விட்டாள்.

**[.....2.....]**

**வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்**
**வாசல் தோறும் வேதனை இருக்கும்**
**வந்த துன்பம் எதுவென்றாலும்**
**வாடி நின்றால் ஓடுவதில்லை!**

ஒருமுறைக்கு பத்து முறை சொல்லித்தான் அனுப்பியிருந்தாள் சுந்தரிபாடி. ''வேலைப்பிடித்தால் மட்டும் அங்கே இரு. கொஞ்சம் மன வருத்தம் என்றாலும் கிளம்பி வந்துவிடு. நான் இருக்கிறேன். எதற்கும் பயப்படாதே'' என திரும்பத் திரும்பச் சொல்லித்தான் ரயிலேற்றிவிட்டாள்.

பெரம்பூர் அதைச் சுற்றியுள்ள சில இடங்களை மட்டுமே பார்த்து பழகி வந்த வைதேகி முதன்முறையாய் அந்த ஊரை விட்டு தாம்பரத்தை நோக்கி தன் பயணத்தைத் தொடங்கினாள். புதிய இடம்! புதிய மனிதர்கள்! அவர்களுடன் எப்படி ஒன்றி வாழப்போகிறேனோ! அம்மா! தெய்வமாய் இருந்து நீதான் எனக்கு துணை நிற்க வேண்டும். யாரிடமும் மனக்கசப்பு ஏற்படாமல் அனைவரையும் அனுசரித்துப் போக பொறுமையைக் கொடு அம்மா. எந்த துன்பமும் துயரமும் தாக்காமல் நீ தான் காத்தருள வேண்டும். கைப்பையில் இருந்த அம்மாவின் புகைப்படத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

வைதேகி அவசரமாய் எழுந்து புடவையை சீராக்கிக் கொண்டு சீட்டுக்கடியில் இருந்த சூட்கேஸையும் பேக்கையும் எடுத்துக் கொண்டு வாசலருகே செல்லும்போது ரயில் நீண்ட பெருமூச்சோடு தாம்பரம் ஸ்டேஷனில் நின்றது. ஈக்களாய் மொய்த்த கூட்டத்தை கண்டு மிரண்டு போனாள். ''ஐய! இறங்கும்மா! இப்படி நின்னா பொறவு நாங்க எப்படி ஏறுறதாம்'' என்றான் ஒருவன்.

அதற்குள் மற்றவர்கள் அடித்துப்பிடித்துக் கொண்டு ஏறிவிட கையைவிட்டு சூட்கேஸும் பையும் போய்விடாமல் கெட்டியாகப் பற்றிக் கொண்டு கூட்டத்தினுள் நுழைந்து தடுமாறி பிளாட்பாரத்தில் வந்து நிற்கவும் அந்த ரயில் புறப்படவும் சரியாக இருந்தது. வாசலில் தொங்கிக் கொண்டு சென்றவர்களைப் பார்த்தபோது மனம் பதறியது.

யார் பெற்ற பிள்ளைகளோ? இப்படிக் கொஞ்சமும் பயமின்றி வாசலில் தொங்குகிறார்களே! கீழே விழுந்துவிட்டால் என்ன ஆவது என எண்ணும்போதே ரயில் கண்ணை விட்டு மறைந்தது. அடுத்த மின்தொடர்வண்டி புறப்படும் அறிவிப்பு ஒலிபரப்பாக, சுற்றுமுற்றும் பார்த்தாள் வைதேகி.

''எப்படி வெளியே போவது? எது பாதை?' சற்றுக் குழம்பியவள் தன்னைக் கடந்து சென்ற ஒருவனை அழைத்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ ஸார்'' ''யெஸ்'' என்றவாறு திரும்பினான் அவன்.



''வெளியே சகுணம் பார்க்க சொன்னேனடி...''
''ஆமாங்க நல்ல சகுணம்தான்... ஆனா கெட்ட சகுணம்''
''என்ன நல்ல சகுணம், என்ன கெட்ட சகுணம்''
''நல்ல சகுணம் எங்கம்மா வர்றாங்க.... கெட்ட சகுணம் கூட உங்கம்மா வர்றாங்க...''
- ஆர்.பாஸ்கர், சின்னாளப்பட்டி.



வேலைக்குச் செல்பவனாக இருக்க வேண்டும். காலையிலே குளித்து சுத்தமாய் உடையணிந்து நெற்றியில் துளிதிருநீறோடு கண்ணுக்கு நிறைவாய் நல்லவனாகவே தெரிந்தான்.

''ஸார். வெளியே போகிற பாதை எதுன்னு தெரியல்ல.''

''வாங்க மேடம். நானும் வெளியேதான் போறேன்'' என்றவாறு முன்னே நடக்க ஆரம்பித்தான். வெறும் கையோடு கால்களை எட்டிப்போட்டு நடக்கும் அவன் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறினாள். புடவை கால்களுக்கிடையே தடுக்க, இரண்டு கைகளிலும் லக்கேஜோடு நடக்க சிரமமாக இருந்தது. எங்கே அவனை தவறவிட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் அவன் சட்டையைப் பார்த்தாள்.

இளம்ரோஜா நிறத்தில் மெலிதாய் கோடுபோட்ட சட்டையும் கருப்புநிற பேண்ட்டையும் அடையாளம் வைத்துக் கோடுபோட்ட சட்டையும் கருப்புநிற பேண்ட்டையும் அடையாளம் வைத்துக் கொண்டு அவன் பின்னால் நடக்க ஆரம்பித்தாள். சற்றுதூரம் சென்றவன் படிக்கட்டில் இறங்குமுன் திரும்பிப் பார்த்தான். தன்னிடம் வழிகேட்ட பெண் கையில் லக்கேஜோடு நடக்கமுடியாமல் திணறுவதைக் கண்டதும் மனமிரங்கி திரும்பி வந்து அவளை நெருங்கினான்.

''மேடம்! கஷ்டமா இருந்தா எங்கிட்ட ஒரு பெட்டியைக் கொடுங்க. நான் எடுத்திட்டு வர்றேன்'' என்றதும் அதிர்ந்தாள்.

இப்போதெல்லாம் திருடர்கள் கூட இவ்வளவு நீட்டாய்ட்ரெஸ் செய்து கொண்டு தான் வருவார்களா? சினிமாக்களில் வருவது போல் பரட்டைதலை பெரிய மீசை லுங்கியோடு வரமாட்டார்களோ. அய்யோ! போயும் போயும் இவனிடம் வந்து வழிகேட்டோமே. நன்றாக

மாட்டிக்கொண்டோமே. நடைபாதை ஓரமாய் பேனர்களில் திருடர்கள் ஜாக்கிரதை என்ற தலைப்பில் ஆண்களும் பெண்களுமாய் வரிசையாய் இருந்த போட்டோக்களில் இவன் முகத்தைத் தேடினாள்.

அவளது செய்கையும் பயந்த முகமும் அவளது மன ஓட்டத்தை உணர்த்த அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''சரிதான்! ஒருபொண்ணு கஷ்டப்படுதேன்னு ஹெல்ப் பண்ண வந்தா உடனே அவனை திருடன்னு முடிவு பண்ணிடுவீங்களா? ஏங்க! எனைப் பார்த்தா திருடன் மாதிரியா இருக்கு. திருடனா இருந்தா நீங்க வழி கேட்ட உடனே உஷாராகி இந்நேரம் இதையெல்லாம் அடிச்சிட்டு போயிருக்க மாட்டானா?'' என்றான் அவன் சிரிப்போடு.

அசடு வழிந்தாள் வைதேகி, ''ஸாரி ஸார்! யார் எப்போ எந்த கெட்டப்பில வர்றாங்கன்னு இப்பல்லாம் சொல்ல முடியறதில்லை. அதான் கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கலாம்னு.''

''குட்... இப்படித்தான் இருக்கணும்... சட்டுனு யாரையும் நம்பிவிடக்கூடாது. அதிலும் பெண்கள் ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். ஆனா நான் திருடன் இல்லை. நான் ஒரு ஆட்டோ ட்ரைவர். என்னோட பேர் பாலாஜி. இதோ இதுதான் என்னோட ஐ.டி.கார்டு'' என ஒரு அடையாள அட்டையைக் காட்டினான்.

அவன் சொன்னதையே அந்த அட்டையும் சொல்ல, ''இது என்ன? இப்போ ஆட்டோ டிரைவருங்க கூட அடையாள அட்டை வெச்சிருக்கீங்களா? என்றாள்.

ஆமாங்க! இது எங்க ஸ்டான்ட்ல உள்ளவங்க நாங்களே எடுத்த ஐடியா.'' அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே, எதிரே வந்த ஒருவர், ''என்ன பாலா இந்தப்பக்கம்? ஆட்டோ என்ன ஆச்சு?'' என்றார்.

''வணக்கம் பாஸ். ஆட்டோ வெளியதான் நிக்குது. நம்ம ருக்மணி மாமியை ட்ரெயின் ஏத்திவிட வந்தேன்.''

''சரிப்பா! எனக்கு ட்ரெயின் வந்திருச்சி. அப்புறம் பார்க்கலாம்'' என்றவாறு அவர் ஓட, அவன் வைதேகியிடம் திரும்பினான்.

''இப்போ நம்பிக்கை வந்திடுச்சா மேடம். என்னை நம்பி பேக்கை கொடுக்கிறீங்களா?'' என்றான் கண்களில் குறும்புடன்.

வலது கையிலிருந்து பேகை அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக் கொண்டு முன்னே நடக்க, அவனுடன் நடந்தவாறே,



''நீங்க ஆட்டோ டிரைவர்னா நம்பவே முடியல்ல'' என்றாள் இயல்பாய்.

நடந்து கொண்டே கேட்டான் அவன், ''ஏங்க?''

''இல்லே! உங்களைப் பார்த்தா படிச்சவர் மாதிரி எங்கோ பெரிய வேலை பார்க்கிற மாதிரி தெரிஞ்சது.''

''ஆட்டோ ஓட்டுறதும் வேலைதாங்க... ஆட்டோ ஓட்டுறவன் அழுக்கு ட்ரெஸ் போட்டு ஓட்டணுமா?''

''சேச்சே! நான் அந்த அர்த்தத்தில கேட்கல. காக்கிச்சட்டை போட்டிருப்பாங்களே. நீங்க போடலியே அதான்...''

''அது ஆட்டோவில தாங்க இருக்கு. எப்பவும் போடுறதில்லை. ஆட்டோ ஓட்டும்போது மாட்டிப்போம். நம்ம ஊர் வெயிலுக்கு எத்தனை சட்டை போகுறது.'' என்றவாறே தடதடவென படிக்கட்டுகளில் இறங்கி வெளி வாசலை அடைந்தான்.

''இந்தாங்க உங்க பேக். இதுதான் வெளி கேட். அப்ப நான் வரட்டுமா''

''நில்லுங்க ஸார். நீங்க சும்மாதானே திரும்பப் போறீங்க. நானும் வேற ஆட்டோதான் பிடிச்சுப் போகணும். உங்க ஆட்டோவிலயே வந்திடுறேனே. ப்ளீஸ்.''

''சரிங்க. நீங்க எங்கே போகணும்''

''இந்த முதியோர் இல்லம் இருக்கே. பேர்கூட ஆங்.. ராமமூர்த்தி முதியோர் இல்லம். அங்கே தான் போகணும். எங்கேனு கேட்டீங்க'' என்றவாறு அவன் முகத்தைப் பார்த்தவள் அதிர்ந்தாள்.

அவன் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து கடுமையாகியிருந்தது. இறுக்கத்துடன், ''அங்கேயா? போகலாம் வாங்க'' என்றவன் அவளைத் திரும்பியும் பாராமல் சென்று வரிசையில் நின்ற ஆட்டோவை எடுத்து வந்து அவளருகே நிறுத்தினான். அவள் ஏறுகிறாளா என்று கூட திரும்பியும் பார்க்கவில்லை. திடீரென அவனிடம் ஏற்பட்ட மாற்றம் அவளுக்கு கஷ்டமாய் இருக்க அமைதியாய் ஏறி அமர்ந்துகொண்டாள்.

ஆட்டோ விரைந்து சாலையில் போக்குவரத்தோடு கலந்து நீந்திச் சென்றது. சிவப்பு விளக்கு ஒளிர ஆட்டோவை ஓரமாய்க் கொண்டு நிறுத்தினான்.

''ரொம்ப நேரமாகுமோ. லேட்டாகுமோ'' என்றாள்.

''ஏன்? ரொம்ப முக்கியமான வேலையெல்லாம் இருக்குதோ. அதை ஸ்லாம் ஓரங்கட்டி வைத்துவிட்டு வந்தீங்களோ?'' கடினமாகவே ஒலித்தது அவன் குரல்.

''இது என்ன கேள்வி மிஸ்டர் பாலா. வேலை என்றால் சரியான நேரத்திற்கு போக வேண்டாமா? அதுதானே மரியாதை?''

''ஆமாம். ஆமாம். அத்தனை மரியாதை வைத்திருப்பவர் வேலை நாளில் ஏன் வரவேண்டும். விடுமுறைநாளில் வந்திருக்கலாமே.''



அவள் பதில் சொல்லும் முன், ''ஓ! விடுமுறைநாளில் ஆயிரம்வேலை இருக்குமே. பீச், தியேட்டர், ஷாப்பிங், பிரெண்ட்ஸ் வீடு. இதெல்லாம் விட்டுவிட்டு யாராவது நம்மைப் பார்க்க வரமாட்டார்களா? என்று ஏக்கமாய் வாசலையே பார்த்துக் கொண்டிருப்பவர்களை வந்து காண முடியுமா உங்களால். உங்கள் வேலை கெட்டுப்போய்விடுமே'' அவன் பேச்சில் தொனித்த ஏளனம் புரிந்து அதை மறுக்க முனைந்தபோது பச்சை விளக்கு ஒளிர்ந்தது.

இந்திராகாந்திக்கு மும்பை சிரோத்கர் மருத்துவமனையில் மகன் பிறந்த போது, நேருஜி சிறையிலிருந்தார். சிறையிலிருந்தபடியே போனுக்கு 'ராஜீவ் ரத்னா' என்று பெயர் சூட்டினார்,

**-மல்லிகா அன்பழகன், சென்னை.**

வரிசையாய் அனைத்து வாகனங்களும் இரைச்சலோடு ஒன்றை ஒன்று முந்திக்கொண்டும் உரசிக் கொண்டும் செல்ல பேச வாய்ப்பில்லாமல் அமைதியானாள். சாலையில் கவனமாய் இருந்தவன் பிரதான சாலையை விட்டு விலகி சிமெண்ட் சாலையில் ஆட்டோவைச் செலுத்தினான். மீண்டும் அவனே கேட்டான்.

''அங்கே யாரைப் பார்க்க வேண்டும்?''

''விடுதியின் நிர்வாகியை'' ''அவர்களை ஏன்? ஓ. மாதம் பிறந்து விட்டதே. பீஸ் கட்ட வந்தீர்களாக்கும். உங்களை இதற்கு முன் நான் அங்கு பார்த்ததே இல்லையே. யார் உறவு நீங்க? மாதம் மூவாயிரம் ரூபா கட்ட முடிகிற உங்களால் அவர்களுக்கு ஒரு பிடி சோறிட்டு



உங்ககூட வைத்துக் கொள்ள முடியவில்லை இல்லையா?''

''பாலா! என்ன சொல்றீங்க நீங்க?''

''தினமும் பார்க்கிற அவலத்தைத் தான் சொல்றேன். இங்க இருக்கிறது யார் உங்க பாட்டியா தாத்தாவா? இல்ல பெத்தவங்களா? வயசானதும் உங்களுக்கு பாரமாகிட்டாங்க இல்ல. பத்துமாசமா ஒரு நொடி கூட இறக்கிவைக்காம உங்களை வயித்திலயே சுமந்துகிட்டி இருந்தவங்களை இப்ப உங்க வீட்ல கூட வெச்சுக்க முடியல்ல இல்ல. அது எப்படி உங்க மனசு கல்லா மாறிடுது. சும்மாவா சொன்னாங்க பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லுன்னு''

''மிஸ்டர் பாலா! நீங்க சொல்ற வார்த்தை எல்லாமே சரிதான். ஆனா அதை எங்கிட்ட சொல்றதுதான் தப்பு. ஏன்னா நானே...'' அவளை முழுதாய் பேசவிடாமல் இடைமறித்தான்.

''ஓ! புரியுது. நீங்க பாகீரதி பாட்டியோட பேத்திதானே. உங்க அப்பாதான் கொண்டுவந்து விட்டுட்டு போனார். எம்பேத்தி என்னைத் தேடுவா தேடுவான்னு பாகிபாட்டி எத்தனை நாள் அழுதாங்க தெரியுமா. சாப்பிடாமலே இருந்து அடம்பிடிச்சாங்க. இப்ப ஒரு பத்து நாளாத்தான் மத்தவங்க கூட பேசவே தொடங்கியிருக்காங்க. அந்தப்பாட்டிக்கு உள்ள அன்பு உங்ககிட்ட எப்படிங்க இல்லாமப் போச்சு. உங்க அப்பா பெரிய கார்ல வந்துதான் பாட்டிய இங்கே சேர்த்துட்டு போனார். அப்போ நீங்க நிச்சயம் வசதியானவங்களாத்தான் இருப்பீங்க.

உங்க வீட்ல ஒரு ஓரத்தில அந்தப் பாட்டிக்கு இடம் கொடுக்க முடியாதா உங்களால. பாட்டிக்கு வேற பார்வையும் மங்கிப்போச்சு. அதையே காரணம் காட்டி விட்டுட்டு போயிட்டாரே. உங்க அப்பாவை தன் கண்ணுக்குள்ள பொத்தி வெச்சுத்தானே பார்த்திருப்பாங்க அவங்க அம்மா.

அந்த அம்மாவுக்கு பார்வை மங்கிப்போனதும் குட்பையா ஒதுக்கிட்டானு ராத்திரியானா பாட்டி படுற கஷ்டம்...'' தொண்டை அடைக்க அவன் நிறுத்தினான்.

வைதேகிக்கும் கண்கள் கலங்கியது. அவன் சொன்ன பாகீரதி பாட்டியை நினைத்து வருந்தினாள். பேத்தியைத் தேடி சாப்பிடாமல் இருந்தாராமே. இனி அந்தப் பாட்டிக்கு பேத்தியாய் இருந்து அன்பைக் காட்ட வேண்டும். ''மிஸ்டர் பாலா! நீங்கள் சொன்ன பாகிபாட்டியை நான் இதுவரை பார்த்ததுகூட இல்லை. ஆனால் நீங்கள் சொன்ன பிறகு அந்த பாட்டியின் மீது இனம் புரியாத அன்பு தோன்றுகிறது. இனிமேல்

அவர்கள் கண்கலங்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன். ஒரு அநாதையால் தான் இன்னொரு அநாதையின் வேதனைய உணர்ந்து கொள்ள முடியும். நான் நீங்கள் நினைக்கும் நபர் இல்லை. தந்தை இல்லாமல் வளர்ந்து தாயையும் இரண்டு நாட்களுக்கு முன் மண்ணிடம் தாரை வார்த்துவிட்டு யாருமே இல்லாமல் நிற்கும் ஒரு அநாதை''

கிரீச்சென்ற சத்தத்துடன் ஆட்டோ நிற்க, அதிர்ச்சியாய் திரும்பினான் பாலாஜி. கண்களில் வழியும் நீரோடு அமர்ந்திருந்தவளைப் பார்த்து, ''என்ன? என்ன சொன்னீங்க?'' என்றான்.

''ஆமாம். அந்த இல்லத்தில் பணிபுரியத்தான் வந்திருக்கிறேன். என் தாயோடு வாழத்தான் எனக்கு கொடுப்பினை இல்லாமல் போயிற்று. பிள்ளைகளை பிரிந்துவாடும் தாய்களுக்கு என்னால் முடிந்த சேவையைச் செய்யத்தான் வந்தேன்.'' அவள் சொன்னதும் குன்றிப்போனான்.

ஆட்டோ மெதுவாகச் சென்று அந்த இல்லத்தை அடைந்து நின்றது. ஆவலோடு வெளியே எட்டிப் பார்த்தாள் வைதேகி.

''இடம் வந்திடுச்சா! பரவால்ல பத்து மணிக்குள்ள வந்தாச்சு. ரொம்ப தேங்க்ஸ் ஸார். எவ்ளோ ரூபா தரணும்''

பாலாஜி தலையை நிமிர்த்தவே இல்லை. ''ஸாரி மேடம். உங்க நிலைபற்றி எதுவும் தெரியாம கொஞ்சம் கடுமையா பேசிட்டேன். மன்னிச்சிடுங்க'' என்றான் மெல்லிய குரலில்.

''பரவால்ல ஸார். உங்க உணர்வுகளை நான் மதிக்கிறேன். நீங்க கோபப்பட்டதுல தப்பே இல்ல. கோபப்பட்ட நபர் தான் தப்பு. அது போகட்டும். அமௌண்ட் சொன்னீங்கன்னா தந்துட்டு போயிடுவேன். முதல் நாளே லேட்டா வந்தா அது நல்லா இருக்காதே.''

''காசு வேணாம் மேடம். நான் இந்த இல்லத்துல உள்ளவங்ககிட்ட போகவர காசு வாங்க மாட்டேன். நீங்க இறங்கி போங்க. நான் பெட்டிய எடுத்திட்டு வர்றேன்'' என மீண்டும் சிரித்த முகமாய் அவன் பேச புன்னகையோடு இறங்கினாள். வாசலை அடையும் போதே மனதில் பாரம் ஏறிக்கொண்டது.

அம்மா அப்பா யாரென்றே தெரியாமல் பிறந்த குழந்தைகளின் வலி ஒருவிதம் என்றால் இது அதைவிடக் கொடுமை. பெற்று வளர்த்து வாழ்ந்த பெரியவர்கள் பிள்ளைகளே சுமையாக நினைத்து ஒதுக்கி வெளியேற்றுவது எத்தனை வலியை பெற்றவர்களுக்குக் கொடுக்கும்.



இதை ஏன் உணர மறுக்கிறார்கள். மனதில் பாரம் விழிகளைக் கசிய வைக்க, கையில் பொருட்களோடு வந்தவன் அவளருகில் நின்றான்.

''கண்ணைத் துடைச்சிட்டு வாங்க. இனிமே இதுதான் உங்க வீடு. பார்த்தீங்களா உங்களுக்கு எவ்ளோ சொந்தக்காரங்க. வாங்க வாங்க'' என்றவாறு அவன் கேட்டைத் திறக்க, மனம் நிறைந்த பூரிப்புடன் உள்ளே நுழைந்தாள் வைதேகி.

## [.....3.....]

பத்துமாதம் சுமந்து பட்டபாடு மறந்து பிள்ளைச் செல்வம் பிறக்க அள்ளிக் கையில் எடுக்க தாயும் நீயே தவமிருந்தாயே...

ஓங்கி உயர்ந்து நின்ற கொன்றை மரம் தனது செந்நிற பூக்களை தாராளமாய் உதிர்ந்து விட்டிருக்க அவற்றை சேகரித்துக் கொண்டு இருந்த ஒரு முதிய பெண்மணி நிமிர்ந்து கண்களைச் சுருக்கிக் கூர்மையாய் பார்த்தார். நரையோடிய கூந்தலும் நரம்போடிய கரங்களுமாக பாட்டி முகம் மெலிந்து போயிருந்தார். குழிக்குள் விழுந்திருந்த கண்களில் திடீரென அசாத்திய ஒளி. முகமெல்லாம் பிரகாசம். கையில் சேகரித்து வைத்திருந்த பூக்களை அப்படியே போட்டுவிட்டு வந்து வைதேகியைக் கட்டிக் கொண்டார்.

''வந்துட்டியாம்மா! என் கண்ணே வந்துட்டியா. எனக்குத் தெரியும் நீ என்னைப் பார்க்காமல் இருக்கமாட்டாய் என்று தெரியும். ஏ... சகுந்தலா! ஏ... மாரியம்மா! பாத்தியா எம்பேத்தி என்னைத் தேடி வருவான்னு சொன்னேனில்ல, வந்துட்டா பார்த்தியா. நல்லாப்பாரு. இது தான் எம்பேத்தி. வா! துணியை அப்புறம் காயப்போடுவே'' - என அக்கம் பக்கம் நின்றவர்களை அழைத்ததும் வைதேகி பாலாஜியைப் பார்த்தாள்.

''பாத்தீ பாட்டி! சொன்னேனே''- என்றான் கேலியாய். சட்டென மனமிரங்கி அந்தப் பார்வை மங்கிய முதியவளை அணைத்துக் கொண்டாள் வைதேகி. ''ஏன் பாட்டி! இப்படி இளைச்சுட்டீங்க. என்னைப் பார்க்காம சாப்பிடலையா. இனிமே இப்பிடியெல்லாம் அடம்பண்ணக் கூடாது. வேளாவேளைக்கு சாப்பிடணும் சரியா?'' என்றாள்.

''அதான் நீ வந்துட்டியே. என்னைக் கூட்டிட்டு போயிடுவேல்ல. நம்ம வீட்டுத் திண்ணையில இருந்து ஒரு பிடி சாப்பிட்டாக் கூட போதும். இந்த

இடமெல்லாம் வேண்டாம் வாம்மா. உன் தாத்தா வாழ்ந்த வீட்டைதான் என் உசுரும் பிரியணும். உன் அப்பன் அந்த வீட்டை இடிச்சுடலையே. என் காலத்துக்கு பிறகு அதை இடிச்சிட்டு பெரிசா வீடு கட்டிக்கட்டும். இப்ப வேண்டாம்மா. நீதான் உன் அப்பன் செல்லமாச்சே. கொஞ்சம் சொல்லும்மா'' - கன்னத்தைப் பற்றி வருடினார் பாட்டி.

பேச்சு வராமல் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் முட்டிக்கொள்ள இப்போ என்ன செய்வது என்பது போல் அவனை ஏறிட்டாள் வைதேகி. அவன் உதவிக்கு வந்தான்.

''பாட்டி! உங்க பேத்தி நீங்கதான் முக்கியம்னு உங்கபையன் கிட்ட சண்டை போட்டுட்டு இங்கே உங்க கூட தங்க வந்திட்டாங்க. இனிமே இங்கேதான் இருப்பாங்க. முதல்ல ஆபீஸ் ரூம்லபோய் கையெழுத்துப் போட்டுட்டு வரட்டும். அப்புறம் எல்லாம் பேசலாம். சரியா'' என்றான்.

''அடி ராசாத்தி. அதான் துணிமணி எல்லாம் எடுத்திட்டு வந்தியா! எப்பா ராசா. எம்பேத்தி பெட்டிய என் அறையில போய் வெச்சிடு. அவ எங்கூடவே இருக்கட்டும்.''

''சரிபாட்டி. வெச்சுட்டு உங்க பேத்திக்கு உங்க அறையைக் காட்டிட்டு வர்றேன். நீங்க சமர்த்தா நிழல்ல உட்கார்ந்திருக்கணும். சரியா'' என்றதும் தலையாட்டலோடு அந்தக் கொன்றை மரத்தின் நிழலில் அமர்ந்து பூக்களை சேகரிக்க ஆரம்பித்தார் பாகி பாட்டி.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களிடம், ''இது புது ஆள். உங்களை கவனிக்க வந்திருக்காங்க. பேரு... ஏங்க உங்க பேர் என்னங்க. இவ்ளோ நேரம் பேசியும் பேரைக் கூட கேட்கலையா நான்'' - எனக் கேட்டான்.

''வைதேகி'' ''நல்லபேருங்க. அம்மா இவங்கதான் வைதேகி. இனிமே உங்களுக்கு எது தேவையென்றாலும் இவங்க கிட்ட கேட்கலாம். சகுந்தலாம்மா! சார் இருக்காரா''

''ஸ்டோர் ரூம்ல இருக்கார் பாலா''

''சரிம்மா. வாங்க வைதேகி. சார் பேர்தான் ராமமூர்த்தி. அவர்தான் இந்த இல்லத்தை கிட்டதட்ட இருபது வருஷமா நடத்திட்டு வர்றாரு. ரிட்டயர்டு ஹெட்மாஸ்டர். ரொம்ப நல்லவர். நேர்மையானவர். வாங்க அவரைப் பார்த்திட்டு வரலாம்'' என்றவாறு முன்னே நடந்தான்.

''பாலா! நீங்களும் இங்கே தான் வேலைப் பார்க்கிறீங்களா? எல்லாரையும் உங்களுக்கு தெரியுது. எல்லாருக்கும் உங்களை



தெரிச்சிருக்கு. உண்மையைச் சொல்லுங்க. நீங்க யார்?''

விரக்தியாய் சிரித்தான். ''சொல்லிக்கிற மாதிரி பெரிய ஆள் இல்லங்க நான். என்னோட பத்தாவது வயசில இருந்து ராமமூர்த்தி சார் கூடத் தான் இருக்கேன். தெருவில அநாதையா பசியோட திரிஞ்ச என்னை அவர் வீட்டுக்கு கூட்டி வந்து சாப்பாடும் படிப்பும் கொடுத்து வளர்த்தவர். எனக்கு அம்மா அப்பா சாமி எல்லாமே அவர்தான். அவரும் கல்யாணம் பண்ணிக்கல்ல. அவரோட ஒரே புள்ள நான்தான்.

கொஞ்சம் படிச்சிருக்கேன். வெளியே போய் வேலை செய்ய விரும்பல்ல. சாருக்கு ஒத்தாசையா எல்லாவேலையும் பார்த்துக்குவேன். மிச்ச நேரத்தில ஆட்டோ ஓட்டுவேன். அதை இல்லத்துக்காக செலவழிப்பேன். ஏதோ என்னால முடிஞ்ச சிறு உதவி. ராமாயணத்துல அணில் உதவின மாதிரி. இதில இருக்கிற நிறைவும் அமைதியும் வேறு எதிலும் வராதுங்க'' என்றவனை வியப்பாய்ப் பார்த்தாள்.



பிறர் வாழ
தன்னை வருத்தியவனை
நெருங்குவதேயில்லை
கிரக தோஷங்கள்.
- சங்கீத சரவணன், மயிலாடுதுறை

''கிட்டதட்ட நம்ம ரெண்டுபேர் நிலையும் ஒண்ணுதான். என்ன நான் சீக்கிரமே தாயை இழந்திட்டேன். நீங்க கொடுத்து வெச்சவங்க. இத்தனை வயசுவரை உங்க அம்மாவோட அன்பு கிடைச்சிருக்கு. இதாங்க சாரோட ரூம்.'' என்றவாறு ஒரு சிறிய அறையின் முன் நின்றான். கையோடு கொண்டுவந்த பெட்டியை ஒரு ஓரமாய் வைத்து விட்டு, ''சார்! உள்ளே வரலாமா?'' என குரல் கொடுத்தான்.

''வாடா வைபயன்! ருக்குமாமியை பத்திரமா ரெயிலேத்தி விட்டியா!'' என கொஞ்சம் கரகரப்பான ஆனால் கம்பீரமான குரல் கேட்டது.

''அதெல்லாம் அனுப்பிட்டேன் சார். புதுசா ஒரு ஆளையும் கூட்டிட்டு வந்திருக்கேன். பாருங்க'' என வைதேகியோடு உள்ளே நுழைந்தான்.

பாதிக்கும்மேல தலை நரைத்திருந்த அவர் கண்ணாடியை மேலேற்றி விட்டு அவளைப் பார்த்தார். ''அடபடவா! சொல்லாம கொள்ளாம

கல்யாணமே பண்ணிக் கூட்டிட்டு வந்திட்டியா. என்னடா அவசரம் உனக்கு. எங்கிட்ட சொன்னா நம்ம இல்லத்துல கல்யாணத்தை வெச்சு அசத்தியிருப்பேனே. ஏன்டா அவசரப்பட்ட''

வைதேகியின் முகம் குங்குமமாய் சிவந்து போக, பாலாஜி பதறி, ஓடிச்சென்று அவர் வாயை மூடினான். ''ச்சு! என்ன இது பேச்சு. அவசரக்குடுக்கை மாதிரி இப்படியா பேசுறது. அவங்க இங்க வேலைக்கு வந்திருக்காங்க. அதான் அந்த பத்மாவதி அம்மா நேத்து சொன்னாங்களே. அந்தப் பொண்ணுதான். ரெயில்வே ஸ்டேஷன்ல பார்த்தேன். நம்ம இல்லத்துக்கு வரணும்னு சொன்னாங்க. கூட்டிட்டு வந்தேன். அதுக்குள்ள உங்க புத்தி எங்கெல்லாம் போயிடுச்சு. அவங்க கிட்ட ஸாரி கேளுங்க.'' என்றவாறு கையை எடுத்தான்.

''அடடே! மன்னிச்சிடும்மா. கொஞ்சம் அசரப்பட்டுட்டேன்.''

''பரவால்ல ஸார். இந்த அவசரப்புத்தி உங்ககிட்ட இருந்து பாலாவுக்கு வந்ததா. இல்ல அவர்கிட்ட இருந்து உங்களுக்கு வந்ததா?''

குழப்பமாய் அவர் பாலாஜியைப் பார்க்க, ஆட்டோவில் வரும்போது நடந்த சம்பாஷணைகளை விவரித்தான் அவன்.

அவர் சத்தமாய்ச் சிரித்தார். ''இவனும் என்னை மாதிரித்தானா. இதுல எங்கிட்ட எவ்ளோ கோபம் வருது பாரும்மா'' என்றார்.

வெள்ளை உள்ளத்தோடு பேசியவரை நன்றாகவே பிடித்துப்போக வைதேகி தன் நிலையைச் சுருக்கமாகச் சொன்னாள். அதை பொறுமையாகக் கேட்டவர், ''கவலையே படாதம்மா! இது இனிமே உன் வீடு. இங்கு இருபது பெண்களும் ஆறு ஆண் முதியவர்களும் இருக்காங்க. எல்லாருமே ஓரளவு நடமாடுறவங்கதான். அதனால பெரிய சிரமம் ஒன்னுமில்ல. மூணுவேளை சாப்பாடு காலை மாலை இருவேளை காபி பிஸ்கட் இதெல்லாம் கரெக்டா பார்த்து அவங்கள சாப்பிட வெச்சாப் போதும்மா.

அப்புறம் சில பேர் சுகர் பேஷண்ட். அவங்களுக்கு சர்க்கரை போடாத காபி, மாத்திரை மருந்து பார்த்துக் கொடுக்கணும். கொஞ்சம் கொஞ்சமா பழகிக்க. அதுவரைக்கும் இந்தப் பய ஹெல்ப் பண்ணுவான். உன்னால முடிஞ்ச வேலையைப் பண்ணும்மா. ரொம்ப மெனக்கெட வேண்டாம்.

சமையல் வேலைக்கும் வெளிவேலைக்கும் ஏற்கனவே ஆள் இருக்காங்க. நீ இவங்க சாப்பாட்டு வேலையையும் தேவையையும் கவனிச்சிட்டாப் போதும். எதையும் மாத்தி அமைக்கணும்னு தோணினாலும் தைரியமாச் சொல்லும்மா. என்னம்மா! நான் சொன்ன வேலை பிடிச்சிருக்கா?'' எனக் கேட்டார்.

''ரொம்பப் பிடிச்சிருக்கு ஸார். இனிமே நான் பார்த்துக் கொள்கிறேன் சார். அது என் கடமை.''

''நன்றிம்மா. இப்படி பொறுப்பான ஆள் கிடைக்கணுமேனு தான் கடவுளை வேண்டினேன். எனக்கும் வயசாகுதில்ல. ஓடியாடி வேலை செய்யமுடியல்ல. அதோட லோ பி பி வேற இருக்கு.''

''இனிமே நீங்க ரெஸ்ட் எடுங்க ஸார். யாரைப் பற்றியும் வேலைப்படாதீர்கள். நான் கவனிக்கிறேன்''

பாலாஜியும் ராமமூர்த்தியும் ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்டனர்.

''சரிம்மா! சம்பளம் என்ன எதிர்பார்க்கிற?''

''மன்னிக்கணும் சார். இப்பத்தானே இது என் வீடுன்னு சொன்னீங்க என்னை பெத்தவங்களுக்கு நான் சேவை செய்யுறதா நினைச்சுத்தான் இங்க வந்தேன். சேவை செய்ய சம்பளம் வாங்கக் கூடாது ஸார். ஒண்டக் குடிசைகூட இல்லாத எனக்கு இருக்க வீடும் உணவும் இத்தனை உறவுகளும் தந்து இருக்கீங்க. இதுவே போதும் ஸார்.''

''அப்படி இல்லம்மா. இருந்தாலும் உன் தேவைக்குன்னு பணம் வேணுமே.''

''இல்ல ஸார். சம்பளம் வாங்கி வீட்டுக்கு அனுப்ப எனக்கு யாரும் கிடையாது. விதவிதமா உடுத்தவோ அலங்காரம் செய்யவோ எப்போதுமே எனக்கு விருப்பம் கிடையாது. அதையும் மீறி எதுவும் அத்தியாவசியத் தேவையென்றால் அப்போது கேட்கிறேன் ஸார். இப்போது மணி பதினொன்னு ஸார். எத்தனை மணிக்கு எல்லாருக்கும் காபி கொடுக்கணும் என்று சொன்னால் என் வேலையைத் தொடங்கிவிடுவேன். அதோடு நான் எங்கு தங்க வேண்டும் என்று சொன்னீர்கள் என்றால் என் உடமைகளை வைத்துவிடுவேன்'' என்றவளைக் கண்டு பிரமித்துப் போயினர் இருவரும்.

பாலாஜிதான் முதலில் சுதாரித்தான். ''இங்கிருந்து மூன்றாவது அறைதான் பாகி பாட்டியின் அறை. நீங்கள் அவர்களுடன் தங்கிக் கொள்ளுங்கள். அதோ அது சமையலறை. அங்கு தெய்வானையம்மா இருப்பாங்க. அவங்களைப் போய்ப் பாருங்க. எல்லாம் சொல்வாங்க.

மீ ரெடின்னா இன்னிக்கு அவங்க கொடுக்கட்டும். நீங்க கூடப்போய் பாருங்க.''

''ஓ.கே.ஸார். அப்ப நான் கிளம்புறேன்''

''ஒரு நிமிஷங்க. நான் ஒரு சாதாரண வேலைக்காரன். என்னை பேர் சொல்லியே கூப்பிடலாம். இந்த ஸார் மோரெல்லாம் வேண்டாம்'' என்றான்.

''ஆமாம்மா! என்னைக்கூட ஸார் என்றெல்லாம் கூப்பிட வேண்டாம். சும்மா அப்பா என்றோ அங்கிள் என்றோ கூப்பிடு போதும்''

வைதேகியின் முகம் மாறியது. ''ஸாரி ஸார். அப்பான்ற வார்த்தை எனக்கு எப்பவுமே பிடிக்காது. அதனால உங்களை ஸாருன்னே கூப்பிடுறேன். ஓய்வு பெற்றாலும் நீங்கள் ஒரு தலைமை ஆசிரியர் ஆயிற்றே. உங்களை மரியாதையாகத் தான் அழைக்க வேண்டும்! வருகிறேன் சார்'' என்றவாறு வெளியேறி தனது பொருட்களை எடுத்துக் கொண்டு மூன்றாவது அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த ராமமூர்த்தி பெருமூச்சு விட்டார். ''பாவம்! சின்னப் பெண். இந்த வயதில் அதன் மனதில் என்ன கசப்பு பாரேன். தன் தந்தை மீது எத்தனை வெறுப்பு இருந்தால் அந்த வார்த்தையையே வெறுப்பாள்.''

''வெறுப்பு வரத்தானே செய்யும். இந்தப்பெண் குழந்தையாக இருந்தபோது ஓடியிருக்கிறான். அப்படியானால் இவள் தாய் அத்தனை இன்னல்களை இழிசொற்களைக் கேட்டிருப்பார். அதை உடன் இருந்தே பார்த்து வளர்ந்த பெண்ணிற்கு வெறுப்பு வராமல் இருக்குமா. இவள் என்பதால் இதோடு விட்டாள். இதுவே நானாக இருந்தால் என் தந்தையைத் தேடி வெட்டி கூறு போட்டிருப்பேன்'' என்றான்








பாலாஜி நரம்புகள் புடைக்க.

''போதும்டா... கோபத்தை விட்டுடு. உன் அப்பன் நல்லவன். அதனால்தான் உன் தாய் தனியே இருந்து கஷ்டப்படக் கூடாது என்று அவளையும் தன்னுடனே அழைத்துச் சென்றுவிட்டான்.''

''நான் மட்டும் கஷ்டப்படட்டும் என்று என்னை தனியே விட்டுட் போய்விட்டார்கள்.

''இல்லடா. அந்த விபத்துல நீ பிழைச்சது பெரிய விஷயம். உன் அப்பன் போன சைக்கிள் லாரிக்கடியில மாட்டி உன் அப்பனும் பின்னால இருந்த உன் அம்மாவும் நசுங்கிட்டாங்க. நீதான் எப்படியோ கொஞ்ச தூரத்தில போய்கிடந்த. உன் அம்மாதான் கடைசி நேரத்தில உன்னைத் தூக்கி வீசினதா சொன்னாங்க. உன் அம்மா சாகும்போது கூட இந்தக் கிழவனுக்கு ஒரு ஊன்றுகோலா உன்னை தந்துட்டு போயிருக்கா. உன் அம்மா புண்ணியவதி.'' - கண் கலங்கினார்.

தனது கண்ணீரை சுண்டியெறிந்தவன், ''ஏன் சார் சும்மா கண் கலங்குறீங்க. வாங்க எல்லாரும் என்ன பண்றாங்கன்னு பார்த்திட்டு வருவோம்.'' என எழுந்தான்.

''இதுதான்டா... இந்த கலகலப்புத் தான்டா வேணும். நீ எதுக்கும் சோர்ந்து போயிடக்கூடாது. எப்பவும் கலகலப்பா உற்சாகமாக நடமாடணும். அப்போத்தான் எனக்கு சந்தோஷமா இருக்கும். நீ என் பிள்ளைடா. நீ கண் கலங்கினா என்னால தாங்க முடியுமா?''

''அந்தப் பேச்சை விடுங்க சார். நம்ம நாகுப்பாட்டிக்கு சுகர் இருக்கு. நாம அங்க இல்லன்னா தெய்வானையம்மாகிட்ட சண்டை போட்டு சக்கரைகாபி குடிச்சிடுவாங்க. வாங்க வாங்க'' - அவசரமாக புறப்பட்டவனைத் தொடர்ந்தார் ராமமூர்த்தி.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே நாகுப்பாட்டி சண்டைதான் போட்டுக் கொண்டிருந்தார். ''துளியூண்டு சர்க்கரை போடேன். உன்சொத்தா குறைஞ்சு போயிடும். சர்க்கரை இல்லாத காபி குடிச்சு நாக்கே செத்துப்போச்சு. என்னைப் பார்த்தா நோக்கு பாவமா தெரியலையாடி பெண்ணே'' என தெய்வானையிடம் மல்லுக்கு நின்றாள்.

அவனுடன் நைசாகப் பேசி சமாதானப்படுத்தி, பாட்டியை தோளோடு சாய்த்து அணைத்துக் கொண்டே போனான்....

## [.....4.....]

தாய் பாடினாள் அன்று
நான் தூங்கினேன் - இன்று
நான் பாடினேன் ஆரிரரோ ஆரிரோ
வான் தூங்கலாம் மீன்தூங்கலாம்
நீயும் தூங்கம்மா...

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி பறக்க, வைதேகி அந்த இல்லத்தில் அனைவருக்கும் மகளாய் பேத்தியாய் மாறிப் போயிருந்தாள். காலையில் விழித்தது முதல் இரவு படுக்கச் செல்லும் வரை அனைவருக்கும் வைதேகி தேவைப்பட்டாள்.

''இந்தத் தயிலத்தை கால்ல போட்டு நீவிவிடுறியா?'' இந்த ஊசியில நூல் கோர்த்துக் கொடேம்மா கண்ல ஒளி போயிடுச்சு''

''கம்மா சாம்பார் சாதம் சாப்பிட்டு அலுத்துப்போச்சு. ரெண்டு தோசை சுட்டுத்தர்றியா''

''மாடியில துணி காயுறது. சித்த எடுத்துத் தர்றியாம்மா. முட்டி தோவுது.'' இப்படி பலவிதமான உதவிகளைக் கூட துளியும் முகம் சுளிக்காமல் அவள் செய்தவிதம் ராமமூர்த்திக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. பாலாஜியும் இல்லத்தைப் பற்றிய கவலை இல்லாமல் முழுநேரமும் ஆட்டோ ஓட்டினான்.

அவன் வருமானத்தால் வாரத்தில் ஒருமுறை அனைவரையும் சிம்பிளாக சுற்றுலா அழைத்துச் செல்ல முடிந்தது. அதில் அனைவருக்கும் ஏற்பட்ட ஆனந்தம் சொல்லில் அடங்காதது. அதற்காகவே சாப்பாடு தூக்கம் பற்றி கவலையின்றி உழைத்தான் பாலாஜி. மனம் தாளாமல் ஒருநாள் கேட்டே விட்டாள் வைதேகி.

''ஏன் பாலா இப்படி கண் விழிச்சு உடம்பை கெடுத்துக்காம பாட்டிங்களுக்கு வாங்குற பீஸைக் கொஞ்சம் கூட்டிக்கலாமே.''

அவசரமாய் மறுத்தான் பாலாஜி. ''நோ நோ... இங்க யாருக்கும் கண்டிப்பா பீஸ் கட்டியாகணும்னு சட்டம் கிடையாது. உனக்குத் தெரியுமா வைதேகி? எந்த நேரம் என்னைத் தத்து எடுத்தாரோ சார். அப்ப இருந்தே இது தொடர்கதையா தொடர ஆரம்பிச்சது. என்னை



பார்த்துக்கன்னு சகுந்தலாம்பாவை வேலைக்கு சேர்த்தாங்க.

அப்புறம் ஆதரவில்லாம தவிச்ச ராஜிப்பாட்டி வந்தாங்க. அப்புறம் ரோட்ல அடிபட்டுக் கிடந்த லலிதாம்மா, அப்புறம் ராசய்யா இப்படி நாலஞ்சு பேர் சேந்தாங்க. இவங்களுக்கெல்லாம் யாருமே உறவுன்னு கிடையாது. இந்த வீடு சாரோட சொந்தவீடு. வீட்டைச் சுத்தி இருந்த செடி மரத்தையெல்லாம் ஒதுக்கிட்டு கூரைவீடு கட்டி அவங்களை தங்கவெச்சார். தன்னோட சம்பளத்திலேயே எல்லாருக்கும் சாப்பாடு துணிமணி கொடுக்க முடிஞ்சது. இதுல என்னோட படிப்புச் செலவு ஒரு பக்கம்.

அவர் ரிட்டயர்ட் ஆனப்புறம் பென்ஷன் பணத்தாலே இதையெல்லாம் சமாளிக்க முடியல்ல. அப்பத்தான் நான் ஏதாவது வேலைக்கு போகலாமுன்னு முடிவு செய்தேன். வேலைக்குன்னு வெளியே போயிட்டா. இங்க உள்ள வேலையை சார் தனியே பார்த்துக்கணுமே. அதனாலதான் இந்த ஆட்டோவ ஓட்ட ஆரம்பிச்சேன். இதில தான் ஹாஸ்பிடல் போறது மளிகை சாமான் வாங்குறது இப்போ தொழில் செய்யவும் உதவுது.

இதுல வர்ற வருமானம் கொஞ்சம் உதவியது. நாளடைவில் இதை ஒரு முதியோர் இல்லமாவே நினைச்சு பெரிய பணக்காரங்க கூட அவங்களால பார்த்துக்க முடியாத வயோதிகர்களை வந்து சேர்த்தாங்க. அவங்க எவ்ளோ பணம் கட்டினாலும் அது அவங்க விருப்பம்தான். இப்பவும் ஏழெட்டுபேர் யாருமே இல்லாதவங்க நம்மகிட்ட இருக்காங்க. அவங்களுக்கு எதுவும் ஒண்ணுன்னா எல்லாமே நாமதான் செய்யணும்.

அதற்காகத்தான் இந்த உழைப்பு. இருக்கிறவங்க தந்தா வாங்கிக்கலாம். ஆனா இல்லாதவங்களுக்கு?''

அவன் சொல்லி முடித்தபோது பிரமித்துப் போனாள் வைதேகி. ''அப்படின்னா! இது தானா சேர்ந்த கூட்டமா? நான் இவ்ளோ நாளா சார்தான் இதைத் தொடங்கினார்னு தான் நினைச்சேன்''

''நிச்சயமா இல்ல. அநாதைகளாய் ஆக்கப்பட்டவர்கள் ஒன்றாய் சேர்ந்துவிட்ட கூடு இது. ஒருவர் கஷ்டத்தை ஒருவர் பகிர்ந்து கொள்ளும் இடம். இவங்களோட நிழல்ல வளர்ந்து வாழ்ந்தவங்களால ஒதுக்கப்பட்ட உயிர்கள். இப்ப நிழலைத் தேடி தவிக்கும் ஜீவன்கள்.''

''இது தப்பு பாலா. நம்மகிட்ட வந்து சேர்க்கவரும் போதே சேர்க்க முடியாதுன்னு சொல்லியிருந்தா அவங்க இப்படி விட்டுட்டுப் போவாங்களா? வீட்டோட வெச்சிருப்பாங்க இல்ல''

''இல்லை. ரமணிப்பாட்டிக்கு காது கேக்காது. பார்வையும் அத்தனை தெளிவா தெரியாது. அவங்க புள்ளை பாட்டியை நம்ம ஊர் எல்லையில கையில பத்துரூபாய மட்டும் கொடுத்துட்டு விட்டுட்டு போயிட்டார் தெரியுமா? ரோட்டுல கண்ணு தெரியாம திரிஞ்ச பாட்டியை நான்தான் கூட்டிட்டு வந்தேன்.''

''கடவுளே! இப்படிக்கூட செய்வாங்களா?''

''காலம் கெட்டுப்போச்சு. மனிதாபிமானம் செத்துப்போச்சு. அதனாலதான் இப்படியெல்லாம் நடக்குது. ஆனா இப்பவும் அம்மா அப்பா மேலே பக்தியா இருக்கிற பிள்ளைங்களையும் நான் பார்க்கிறேன். ஆனா எல்லாரும் அப்படி இல்லையே. அதுதான் ரொம்ப வருத்தம்.''

''அதுக்காக அப்படியே விட்டுடலாமா பாலா. இவங்க நம்மகிட்ட என்னதான் இயல்பா இருந்தாலும் அவங்க முகத்தில உறைஞ்சு போயிருக்கிற சோகம் தெரியலியா உங்களுக்கு?''

வருத்தமாய் ஒப்புக் கொண்டான். ''உண்மைதான். ஆனால் நம்மால் என்ன செய்யமுடியும்?''

''முடியும் பாலா. என்னால் முடியும். முதலில் நீங்கள் சொல்லுங்கள், நமக்கு இந்த இல்லத்தால் வரும் வருமானம் தேவையா. இவர்கள் அவங்க அவங்க வீட்டுக்கு போயிட்டா வருத்தப்படுவீங்களா?''

''சேச்சே. நிச்சயமா இல்ல. இவங்க எல்லாரும் சந்தோஷமா தன் பிள்ளைகளோட வாழ்ந்தா அதைவிட வேறென்ன வேணும் நமக்கு? சாருக்கும் இப்ப உடம்பு ஒத்துழைக்கிறதில்ல. நம்மள நம்பி வந்தவங்களை எப்படி விடுறதுன்னு தவிக்கிறார்.

''இது போதும் பாலா. நான் ட்ரை பண்றேன். மாதம் பிறந்தால் ஒன்னாந்தேதி இவங்க புள்ளைங்க வருவாங்கல்ல. அப்ப பேசிப்பார்க்கிறேன்.''

''பார்த்து வைதேகி. ஏதும் பிரச்சனை வந்திடப்போகுது.

''வராமல் பேசிப்பார்க்கலாம். மீறி எதுவும் வந்தால் பாலா இருக்க பயமேன்'' என வலது கையை உயர்த்தினான்.

கூடச்சேர்ந்து சிரித்துவிட்டு, ''சரி! நீ சொல்வது போலவே மற்றவர்களை அனுப்பிவிடலாம் என்றுவை. யாருமே இல்லாமல் இருக்கிறார்களே அவர்களை?''

''அவர்களை நம் பெற்றோர்களாக நம்மோடு வைத்துக் கொள்வோம். நீங்கள் கொண்டு வரும் பணம் சாரோட பென்ஷன் தாராளமாய் போதும்.




''நேத்து நீங்க நடிச்ச படத்தை பார்க்கப் போகும்போது என் மனைவியும் கூட வரேன்னு கிளம்பிட்டா''

''அப்புறம்?''

''அதை ஏன் கேட்கறீங்க... ஒரே நேரத்திலே ரெண்டு கொடுமையையும் சேர்ந்து அனுபவிக்க வேண்டியதா போச்சு...''

-மு.மதிவாணன், அரூர்.



நானும் தையல் தைப்பேன். ஏதாவது ஒரு பழைய மிஷின் கிடைத்தால் வாங்கிப் போடுங்கள். நானும் துணி தைத்து என்னால் முடிந்த அளவு வருமானம் ஈட்டித் தருகிறேன்'' அவர்களின் கடைசி மூச்சுவரை நம் பெற்றோர்களாய் நினைத்து பார்த்துக் கொள்வோம். சரியா?''- என்றவளைப் பார்த்து அசந்து போனான்.

''உண்மையில் நீ பெரிய ஆள்தான். கடைசிவரை எங்க கூடவே இருப்பியா வைதேகி''- அவனது குரலில் ஆவலும் ஏக்கமும் இழையோடியது.

''சத்தியமாய் கடைசிவரை உங்க கூடவே இருப்பேன். எனக்கும் உங்களை விட்டால் யார் இருக்கிறார்கள்?'' - கண்கள் கலங்கிட நிறுத்தினாள். கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

''ம்ஷூம்... நான் இருக்கிறேன். நாங்கள் இருக்கிறோம்.'' - என்றவனின் மென்மையான குரலில் தன்னை மறந்தாள்.

''சின்னய்யா! நீங்க இங்கேயோ இருக்கீங்க.'' - என்றவாறு ஓடிவந்தாள் சகுந்தலா.

''என்னம்மா? என்னாச்சு?''

''அதை என்னன்னு சொல்றதுய்யா? பாரேதிம்மா சர்க்கரை வியாதிக்கு உள்ள மாத்திரைய மொத்தமா முழுங்கிடுச்சுய்யா!''

''என்ன?'' - அதிர்ந்து எழுந்தான்.

''வாயெல்லாம் நுரைத் தள்ளிப் போச்சுயா. பெரிய ஐயாவும் வெளிய போனவுக இன்னும் வரல்ல.'' - அவன் சொல்லி முடிக்கும் முன் பாய்ந்து ஓடினான். அவன் பின்னே ஓட்டமும் நடையுமாய் ஓடிய வைதேகியின்

மனம் தாறுமாறாய் பதறியது.

எப்படி கவனிக்காமல் விட்டேன். சூழ்நிலை மறந்து பேசிக் கொண்டிருக்கும் எத்தனை பெரிய தவறு. பாட்டிக்கு ஏதேனும் நிகழ்ந்து விட்டால் நான் கொலைகாரி ஆகிவிடுவேனே. பாட்டி! என்னை தவிக்கவிட்டு போய்விடாதீர்கள் மனதிற்குள் அரற்றியவாறே தங்கள் அறைக்குள் நுழைந்தவள் விக்கித்துப் போனாள்.

தரையில் தாருமாறாய் கிடந்தாள் பாகீரதி பாட்டி. வாயில் நுரை தள்ளியிருக்க, மயங்கிக் கிடந்தாள். அருகே பல நிறங்களில் காலி மாத்திரைப் பட்டைகள் சிதறிக்கிடந்தன. ''பாட்டிம்மா! என்ன காரியம் செய்தீர்கள்? ஏன்? ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' - கையோடு தூக்கிக் கொண்டு ஆட்டோவை நோக்கி ஓடினான் பாலாஜி.

அவசரமாய் பாட்டிக்கு மாற்றுடை மற்றும் கொஞ்சம் பணத்தையும் எடுத்துக் கொண்டு ஓடினாள் வைதேகி. மற்றவர்கள் கண்ணில் கண்ணீரோடு பின்னே ஓடிவர, 'சகுந்தலாம்மா! நீங்க எல்லாரையும் பார்த்துக்கங்க. ஆபீஸ் பைல்ல பாகிபாட்டியோட பையன் போன் நம்பர் இருக்கும். உடனே போன் பண்ணி மேட்டரை சொல்லிட்டு ஹாஸ்பிடலுக்கு வரச்சொல்லிடுங்க.'' - என்றவாறு பாட்டியை ஆட்டோவின் பின் இருக்கையில் படுக்கவைத்து விட்டு ஆட்டோவை ஸ்டார்ட் செய்ய வைதேகி ஓடிவந்து ஏறிகொண்டாள்.

பாட்டியை மடியில் கிடத்திக் கொண்டு, ''பாட்டி! ஏன் இப்படிச் செய்தீங்க. என் பேத்தி என் பேத்தி என்றீர்களே. அதெல்லாம் வெறும் வாய்வார்த்தை தானா? உண்மையில் என்னை பேத்தியாக உங்கள் மனம் நினைக்கவில்லையா? நீங்கள் இப்படிச் செய்யலாமா? எங்களைத் தவிக்கவிட்டு போய்விடாதீர்கள். உங்கள் மகன் வந்து கேட்டால் நான் என்ன பதில் சொல்வது. கண் முழிச்சிடுங்க பாட்டி. பாட்டி'' - கண்ணீரோடு பேசிக் கொண்டே வந்தாள் வைதேகி.

பாட்டியிடம் எந்த அசைவும் இல்லை. மெல்ல மெல்ல உயிர்த்துடிப்பு குறைந்து கொண்டே வந்தது.

# [.....5.....]

**பெத்தவள தள்ளிவெச்ச பாவத்திற்கு**
**பக்கம் வந்து கொள்ளி வைக்க**



**கூடலியே, என்னை ஆற்றிடவும்**
**தேற்றிடவும் தாயைப் போல வேறு யாரு?**

இன்ஸ்பெக்டர் ஆனந்த் பாலாஜியை விசாரித்துக் கொண்டிருக்க அறைக்கு வெளியே வைதேகி கையைப் பிசைந்து கொண்டிருந்தாள். வந்து இரண்டு மணி நேரமாகியும் பாகிபாட்டியிடம் எந்த முன்னேற்றமும் இல்லை. பாட்டியின் மகனுக்கு தகவல் அனுப்பியும் இன்னும் வந்தபாடில்லை. இதில் டாக்டர் வேறு, ''ரொம்ப கிரிட்டிகல் பொஸிஷன்தான். பிழைப்பது கஷ்டம். நிறைய டாப்லெட்ட விழுங்கியிருக்காங்க. எல்லாமே ஸ்லீப்பிங் பில்ஸ். அவங்க உடம்பு அதோட வீரியத்தை தாங்காது. எங்களால முடிஞ்ச மெடிசனை கொடுத்திருக்கோம். பட் நோ யூஸ். மிஸ்டர் பாலா! இது தற்கொலை கேஸ்ன்றதால நீங்களே போலீஸ்ல இன்பார்ம் பண்ணிடுங்க. இல்லன்னா பேஷண்ட்டோட ரிலேஷன்ஸ் ரிப்போர்ட் பண்ணினா உங்க இல்லத்தோட பேர் கெட்டுப் போயிடும்.'' - என சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

பாலாஜியும் தயங்காமல் உடனே போலீசுக்கு தகவல் கொடுக்க அரைமணி நேரம் வைதேகியிடம் விசாரணை முடிந்து அவளை வெளியே அனுப்பிவிட்டு பாலாஜியிடம் விசாரணையை தொடங்கியிருந்தார். பாட்டி தன் கண் முன்னே உயிருக்கு போராடி எமனிடம் தோற்றுக் கொண்டிருக்க பாலாஜி கண்ணீருடன் பதிலளித்தான்.

''மிஸ்டர் பாலாஜி. இதை நாங்க கேட்டே ஆகணும். உங்க இல்லத்தில ஏதும் தவறுநடந்து பாட்டிக்கு அதனால மன வருத்தம் ஏற்பட்டு இந்த முடிவை எடுத்திருக்கலாமே''

''ஸார் ப்ளீஸ்! பாட்டிக்கு இப்போ வயசு எழுபத்தி மூன்று. பார்வையும் கம்மி. இந்த வயசு மூதாட்டிக்கு என்ன சார் தொல்லை கொடுப்பாங்க. இங்க வந்த நாள் முதலே பாட்டி சரியா சாப்பிடறதில்ல தூங்குறதில்ல. நாங்க என்னதான் கண்ணாகப் பார்த்துக் கொண்டாலும் பெத்தவங்களுக்கு பிள்ளைக கூட வாழ்ந்த மாதிரி இருக்குமா ஸார்...?''

''அப்போ அவங்க மகன்கிட்ட பேசி பாட்டியை அவர் கூட அனுப்பியிருக்கலாமே. நீங்க ஏன் அதைச்செய்யல?''

''ட்ரை பண்ணினோம் ஸார். ஆனா அவர் பாட்டியைக் கொண்டு வந்து விட்டதோடு சரி. இதுவரை வந்து பார்க்கவே இல்லை ஸார். போன் பண்ணினாலும் கிடைப்பதில்லை.''

''மைகாட். ஏன்? ஏன் அப்படிச் செய்கிறார்?''

''பாட்டி தன்னோட வீட்டில் தன் கணவரோட நினைவில் இன்னும் வாழ்ந்திட்டு இருந்திருக்காங்க. ஆனா அவரோட பையனுக்கு காக பூக்கம் அதிகரிச்ச உடனே அந்த வீட்டை இடிச்சு பங்களா டைப்பில வீடு கட்டணும்னு ஆசை. பாட்டி ஒத்துக்கல்ல. அதோட பாட்டிக்கு பார்வையும் சரியில்ல. இதைக் காரணம் காட்டி ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போறதா சொல்லிட்டு எங்க இல்லத்தில வந்து விட்டுட்டு போயிட்டார்.''

''அதுக்கப்புறம் அவர் வரவே இல்லையா?''

''இல்லை ஸார்! மாசம் பொறந்தா அவர் வீட்டு ட்ரைவர் வந்து பணம் கட்டிட்டு போயிடுவார். இதுவரை அவங்க மகன் ஒரு போன் கூட பண்ணி பாட்டியப்பத்தி விசாரிக்கல. பாட்டி சாப்பிடாம கிடந்தப்போ நாங்க போன் பண்ணினோம். ஒரு முறை கூட அவர் பேசல்ல.''

''இத்தனை நாள் இருந்தவங்க இப்ப திடீர்னு ஏன் இந்த முடிவை எடுக்கணும்? என்ன காரணம்?''

''அதான் ஸார் எனக்கும் புரியல்ல. நேற்று அந்த ட்ரைவர் வந்தப்ப கூட அவர்கூட பேசினாங்க''

''பேசிட்டு நார்மலா இருந்தாங்களா?''

''ஸாரி ஸார்! நான் கவனிக்கல. நேத்து ராத்திரி வரைக்கும். நான் ஆட்டோ ஓட்டப்போயிட்டேன். இன்னிக்கு காலையிலதான் வந்தேன்.''

பாட்டியிடம் மெல்ல அசைவு தெரிந்தது. வரும் பாட்டியை நெருங்கி குரல்கொடுக்க பாட்டியின் விழிகள் திறந்தன. கண்ணீர் வழிய பாட்டி பேசமுடியாமல் தவித்தார். பாட்டியின் கைகளைப் பற்றிக் கொண்டான் பாலாஜி. ''என்ன பாட்டி இது? ம்!'' - அவன் கண்களும் குளமாகியது.

''பாலா! ராசா. அந்தப்பாவி என் வீட்டை இடிச்சுட்டானாம். பெரிய வூடு கட்டுறானாம்யா. இந்தக் கிழவிக்கு அங்க இடம் கிடையாதாம். எம்புருஷனோட நான் வாழ்ந்த வீடு மண்ணாப் போச்சுய்யா. நான் எதுக்கு உனக்கு பாரமா இருக்கணும். எப்படியும் எம்மகன் வந்து கூட்டிட்டு போயிடுவான்னு பார்த்தேன். ப்ச். நீ யாரு பெத்த புள்ளையோ இந்தக் குருடியவெச்சுட்டு நீ ஏன் கஷ்டப்படணும்னுதான் நானும்'' என் வீட்டுக்காரு கூட போயிடுறேன் பாலா'' - பாட்டி மூச்சு வாங்கினார்.

இன்ஸ்பெக்டர் குனிந்து, '' இதுக்காகவா மாத்திரைய சாப்பிட்டீங்க?''



- என்றார்.

''யார் இது?'' என்பதைப் போல் பாட்டி பாலாவைப் பார்க்க, ''பாட்டி! இவங்க போலீஸ். நீங்க தற்கொலை செய்ய முயற்சித்ததால என்னை விசாரிக்க வந்திருக்காங்க'' - என்றான்.

பதறினாள் பாட்டி. ''சாமி! இந்தப்புள்ள தங்கமான புள்ள. இதை ஒன்னும் செஞ்சிடாதீங்க. நான் செத்தப்புறம் இந்தப் புள்ளதான் எனக்கு இறுதிச்சடங்கு பண்ணணும். எம்மகன் எனக்கு எதுவும் செய்யக் கூடாது. அவன் வர்றவரைக்கும் என்னை வைக்கக் கூடாது. சாமி! எங்க ஆட்கள்ல எரிக்க மாட்டாங்க. என்னையும் பொதைச்சிடுங்கப்பா. எம்புள்ள பாலாதான் என்னைக் கொண்டுபோய் அடக்கம் செய்யணும். இதுதான் என் கடைசி ஆசை. பாலா! பாலா!'' - ஆவேசமாய் பேசிய பாட்டி சட்டென தன் மூச்சை நிறுத்திக் கொண்டாள்.

பாலாஜி பாட்டியின் முகத்தைப் பார்த்தான். இறுதியாய் பார்த்த பார்வை தன் முகத்தில் நிலைத்திருக்க, தன்னையும் மீறி கதறிவிட்டான். ''பாட்டீ!'' அவனது குரலில் வெளியே நின்ற வைதேகியும் டாக்டர்களும் ஓடிவர. இன்ஸ்பெக்டர் தனது தொப்பியைக் கழற்றினார்.

கருவில் குழந்தை உருவான நாள் முதலாய் பத்தியமாய் சாப்பிட்டு குழந்தைக்கு ஆகாத உணவுப்பொருளை ஒதுக்கு, தன் ஆசைகளைக் குறைத்து தூக்கமின்றி அல்லும் பகலும் பேணி பாதுகாத்து கடுமையான பிரசவ வலியைத் தாங்கி, பெற்றபிள்ளையின் முகம் பார்த்து தன் வலியை மறந்து அந்த. ஆண்பிள்ளை பிறந்தது என்று ஆனந்தம் கொண்டதாய்.

பிள்ளைக்காகவே வாழ்ந்து. அவனை பாலூட்டி சோறூட்டி கண்ணும் கருத்துமாய் வளர்த்த தாய், பிள்ளையின் ஒவ்வொரு வளர்ச்சியையும் கவனித்து பூரிக்கும் தாய். அருமையாய் படிக்கவைத்து சமுதாயத்தில் உயர்த்திய தாய் இன்று கடைசி மூச்சுக்கு தவிக்கும் போது கூட அந்தப்பிள்ளை வரவில்லையே. அப்படியென்ன கல்நெஞ்சம் அவனுக்கு? எத்தனை அநாதைக் குழந்தைகள் குப்பைத் தொட்டியின் தெருவோரத்திலும் வளர்கிறது. அந்தக் குழந்தைகள் கூட பசியிலும் வலியிலும் தன் தாயைத் தேடித்தானே அழுகிறது.

இவன் தன் கண்முன்னே இருந்த தாயை இப்படி தள்ளிவிட்டு தாயின் உயிருக்கு ஆபத்து என்று தெரிவித்தும் கூட வரவில்லையே. என்னதான் பாட்டி சொன்னாலும் மனம்கேளாமல் அவரது மகன் தந்த

வீட்டு முகவரிக்கு ஆள் அனுப்பினான் பாலாஜி.

போன ஆள் திரும்பி வந்து, ''வீட்டில் யாருமில்லை. குடும்பமாய் ஊர் போயிருக்கிறார்களாம்'' - என்றான். போனிலும் கிடைக்கவில்லை. ''இதற்கு மேலும் காத்திருக்க வேண்டாம். ஆகவேண்டிய காரியத்தைப் பாருங்கள். வந்து கேட்டால் என்னிடம் அனுப்புங்கள் அவரை. நான் பேசிக்கொள்கிறேன்'' - என்று இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டுப்போக, ஊரே கூடிச் செல்ல, பாகீரதிப்பாட்டி தன் இறுதியாத்திரைக்கு தயாரானாள்.

இல்லத்தில் உள்ளவர்களில் கண்ணீர் ஆறாய் பெருக, பாகீ பாட்டி போயே விட்டாள். பெற்றபிள்ளையாய் இருந்து அனைத்து வேலைகளையும் முடிந்துவிட்டு இருட்டியபிறகே இல்லத்திற்கு வந்தான் பாலாஜி. வந்தவன் பாட்டியின் படுக்கையைப் பார்த்து இன்னும் அழுதான்.

மறதி

நாத்தனாரின் நரகப் பேச்சு
மின்வெட்டின் எரிச்சல்
மாமியாரின் இடிகள்
குறையில்லா குறையாத
வேலைகள்
அத்தனையும்
மறந்து போனது
பள்ளியிலிருந்து வந்து
மகள் தந்த முத்தத்தால்!

-பழ.கவிதா சிவமணி, ஈரோடு.

வந்து கொஞ்ச நாட்களே இருந்தாலும் பாட்டியின் மீது அனைவருக்கும் அன்பும் கரிசனையும் இருந்ததால் யாருமே இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்தனர்.

நீண்ட இரவு விடிந்தபோது வந்து நின்றார் வாசுதேவன். ''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். வருடம் முழுதும் உழைக்கிறேன். ஒரு ரெண்டு நாள் டென்ஷனை மறந்து ஊர்போயிட்டு வரலாமின்னு பார்த்தா இப்படியா போன் பண்ணி டார்ச்சர் பண்றது? எங்க பிக்னிக் மூடே போச்சு. நாளைக்கு வரலாம்னு இருந்தோம். இன்னிக்கே வரவேண்டியதாப் போச்சு. இங்க என்ன இழவு விழுந்துபோச்சுன்னு போனுக்கு மேலபோன் பண்ணீங்க. அதோட வீட்டுக்கும் ஆள் அனுப்பியிருக்கீங்க.

நினைச்சவுடனே எல்லாத்தையும் போட்டுவிட்டு ஓடிவரமுடியுமா? எங்கேயாவது சுத்திட்டே இருப்பேன். என்னோட ஒருநாள் வருமானம் என்னன்னு தெரியுமா உனக்கு? இப்ப இங்க பேசுட்டு இருக்கிற நேரத்துக்கு எவ்வளவு சம்பாதிச்சிடுவேன் தெரியுமா?''

''மிஸ்டர் வாசுதேவன். இந்தத் தொழிலை நீங்களே தொடங்கி



முன்னேறுனீங்களா? இல்லை...'' - வாயைத்திறந்தான் பாலாஜி.

''எங்க அப்பா தொடங்கினது. ஆனா என் படிப்பாலும் திறமையாலும் நான்தான் இதை ஆயிரம் மடங்கா பெருக்கியிருக்கிறேன்.'' - அவர் குரலில் கர்வம் தொனித்தது.

''அந்தத் திறமையும் படிப்பும் எப்படிக் கிடைச்சது?''

''என்ன முட்டாள் தனமா கேள்விகேட்குற. என்னை பெத்தவங்க தான் படிக்க வெச்சாங்க. அதிலதான் திறமை வந்தது''

''அப்போ! உன் அம்மா அப்பா இரத்தத்தை உறிஞ்சித்தான் இப்படி வளர்ந்திருக்கிற இல்லையா?''

''ஏன் என்ன மரியாதை இல்லாம பேசற. நான் யாருன்னு தெரியுமா உனக்கு?''

''போஸ் தெரியும்யா. பெத்தவங்களை வேண்டிய மட்டும் சத்தை உறிஞ்சு எடுத்திட்டு சக்கயா தூக்கி வீசினவன் தானே நீ. பெத்த தாய்க்கு ஒரு பிடி சோறு கொடுக்க முடியாத நீயெல்லாம் எத்தனை லட்சம் சம்பாதிச்சு என்னய்யா? எல்லாமே வெறும் குப்பை... குப்பைக்கு சமம்யா.''

''என்ன குப்பையா? முட்டாள். இந்தப் பணம் இல்லன்னா ஒரு நாய் கூட மதிக்காது. இதை வெச்சு எதை வேண்டுமானாலும் வாங்கிவிடலாம் தெரியுமா? பணத்தின் மதிப்பை தெரியாத முட்டாள்.''

''ஆமாம்! நான் முட்டாள்தான். உன் பணத்தை வைத்து இறந்து போன உன் தாயாரை வாங்கிட்டு வா. போ.'' - பாலாஜி கோபமாய் கத்த விக்கித்துப் போனார் வாசுதேவன்.

''ஏய்... ஏய் நீ என்ன சொல்ற?''

''உண்மையைத் தான் சொல்கிறேன். இங்க இழவு விழுந்து போச்சுனு தான் உனக்கு போன் போட்டோம். நல்லகாலம் நீ ஊரில் இல்லை. ஒருவேளை நீ இங்கிருந்து வந்து உன் தாயின் சடலத்தைப் பார்த்திருந்தால் அந்த ஆன்மா சாந்தி அடைந்திருக்காது. எப்படியோ உன் அம்மா ஆசைப்பட்ட படியே உன் முகம் பாராமலே அடக்கம் செய்து விட்டோம்.''

''என்ன? என் அம்மாவை நீ அடக்கம் செய்தாயா?

''அதுதான் பாட்டியின் கடைசி ஆசை. போலீஸின் உதவியோடு நேற்றுத்தான் எல்லாம் முடிந்தது. உன்னிடம் எத்தனை பணம் இருந்து

என்ன பயன்? உன் தாயின் முகத்தை உன்னால் கடைசியாக ஒரு முறைப் பார்க்க முடிந்ததா? இறுதிச் சடங்கை செய்ய முடிந்ததா? உன்னை இந்த மண்ணில் பிறக்கவைத்த உன் தாய்க்கு ஒரு பிடி மண்போட முடிந்ததா? உன்னால்? என்னைப் பொறுத்தவரை நீ அதோ போகிறானே அவனை விட அற்பமானவன்.'' - என்று தெருவில் போய்க் கொண்டிருந்த ஒரு பிச்சைக்கார கிறுக்கனைக் காட்டினான் பாலாஜி.

அனைவரின் முன்னும் தன் உடலில் ஒட்டுத்துணிகூட இல்லாமல் நிற்பதுபோல் கூனிக்குறுகிட்டு போனார் வாசுதேவன்.

''கையில் ஒத்தைபைசா இல்லாதவன் கூட தன்னைப் பெற்றவரின் இறுதிக்கடமைக்காக அடுத்தவரிடம் கையேந்தியேனும் தன் கடமையைச் செய்துவிடுவான். அது அவன் உரிமை. அவன் கடமை தன்னைப் பெற்று வளர்த்தவனுக்கு அவன் செய்யும் இறுதி மரியாதை. ஆனால் இது எதுவுமே இல்லாத நீ ஒரு பொணம்தான். போ. இங்கே நிற்காதே. நாங்கள் அனைவரும் எங்களில் ஒரு உயிர் போனதை எண்ணி துக்கத்தில் இருக்கிறோம். இதற்கு மேலும் உம்மிடம் பேச ஒன்றும் இல்லை.

போ. பணத்தை சேர். சேர்த்துக் கொண்டே இரு. நீ கட்டும் மூவாயிரம் உனக்கு இனி மிச்சம்தானே. சந்தோஷமாக சேர்த்துவை. உனக்கும் பிள்ளைகள் இருக்கிறதே. சீக்கிரமாய் அவர்களும் உன்னை இதே போல் ஒரு இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்போகிறார்கள். அதற்குள் உன்னால் முடிந்த புண்ணியத்தை செய். போகும்போது நிம்மதியாய் போய்ச்சேர உனக்கு அந்தப் புண்ணியம் உதவும். போ. சார்! இவரை அனுப்பி விடுங்கள். இது புனித பூமி. இவர்கால் படவேண்டாம்'' - என்று சொல்லிவிட்டு சட்டையை மாட்டிக்கொண்டே வெளியேறினான்.

''சார்! என் அம்மா இறந்தத ஏன் எங்கிட்டச் சொல்லவில்லை. நான் வரும் முன் எதற்காக அடக்கம் செய்தீர்கள்? உங்களிடம் விட்டுட்டு போயிட்டா எங்களுக்குள்ள அந்த உறவும் இல்லன்னு ஆகிடுமா. நான் அவங்க புள்ள. நான் வராம நீங்க எப்படி பாடிய எடுக்கலாம்?'' - ராம மூர்த்தியிடம் சாடினார். அவர் வாயைத் திறக்கும் முன் வைதேகி முன்னே வந்தாள்.

''உங்க அம்மாவை விட்டுட்டு போய் எத்தனை மாசமாச்சு. நீங்க எப்போ சார் வந்து பார்த்தீங்க?'' பதில் சொல்ல முடியாமல் தடுமாறியவனை ஏளனமாய் பார்த்தனர் மற்றவர்.



''சாப்பாட்டுக்கே வழியில்லாத தாய் கூட தனக்கு கிடைப்பதை பெத்த பிள்ளைக்கு கொடுத்திட்டு பட்டினியா படுத்துப்பா. உங்க அம்மாவும் கூட உங்களை அப்படித்தான் வளர்த்திருப்பாங்க. உங்களைக் கொண்டுபோய் அநாதை விடுதியில சேர்க்கலையே. உங்களால மட்டும் எப்படி சார் அப்படி விட முடிந்தது. உங்க அம்மா ஒவ்வொரு நாளும் வாசலைப் பார்த்து பார்த்து அழும்போது பார்க்கிற யாருக்குமே கண்ல தண்ணீர் வரும். உங்களுக்கு மட்டும் எப்படி சார் மனம் கல்லாகிப் போச்சு?'' - வைதேகியின் உக்கிரமான பேச்சால் முதன்முறையாய் வாசுதேவன் கண்களில் இருந்து கண்ணீர் சொட்டியது.

''உங்க அம்மாவுக்கு கண்ணு தெரியல்ல. அதனால் அகூட வெச்சுக்க சிரமமா இருக்குன்னு சொன்னீங்களாமே. அந்தக் கண்ணு எத்தனை நாள் தூங்காம விழிச்சிருந்து உங்களை கவனிச்சிருக்கும். அது ஏன் ஸார் உங்க கண்ல படாம போச்சு. நீங்கதான் பெரிய கோமஸ்வரர் ஆச்சே. உங்க அம்மாவை ஒரு கண்டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போயி காட்டக்கூட நேரமில்லையா?

எப்படி இருக்கும்? அந்த நேரத்திற்கு நீங்க ஐம்பது லட்சம் சம்பாதித்து விடுவீங்களே? உங்க அம்மா எப்படி இறந்தார்கள் என்று தெரியுமா? மாத்திரைகளை நிறைய சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்கள்''

''எ... என்ன? - நெஞ்சில் கை வைத்தார் வாசுதேவன்.

''ஆமாம்! அவரையோ அவர் மன உணர்வுகளையோ நீங்கள் புரிந்து கொள்ளவே இல்லை. இப்போ உங்கள் விருப்பம் போல் பங்களா கட்டலாம். கோடிகோடியாய் சம்பாதிக்கலாம். உலகம் முழுதும் சுற்றுப் பயணம் செய்யலாம். ஆனால் நீங்கள் சந்திக்கும் நபர்களில் ஒரு பத்து பேராவது சொல்வார்கள். 'என்ன பெரிசா சம்பாதிக்கிறான். பெத்த தாய்க்கு சோறுபோடாம கொன்னவன்தானே. பெத்தவளை அனாதை பொணமா போகவிட்டவன் தானே' என்று நிச்சயம் பேசுவார்கள். உங்கள் ஆயுள் முழுக்க இந்தப் பேச்சு உங்களைவிட்டு போகாது. இத்தனைகாலம் நீங்கள் செய்த தவறுக்கான தண்டனை இது.

இது உங்களை விடாது. ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். உங்களைப் போல் உள்ள பிள்ளைகளுக்கு நீங்கள் ஒரு பாடம். நீங்கள் போகலாம்'' - என்றவன் திரும்பினான்.

''தெய்வாம்மா! சாப்பாடு எடுத்து வையுங்க. எல்லாரும் வாங்க.

பட்டினியா இருந்தா உடம்புக்கு ஆகாது.'' - என்றவாறு அழைத்துக் கொண்டு போனான்.

ராமமூர்த்தி, வாசுதேவன் அருகே வந்தார். ''ஸாரி மிஸ்டர் வாசுதேவன். உங்களிடம் விஷயத்தைச் சொல்லத்தான் எத்தனையோ முறை போன் பண்ணினோம். நீங்கள் எடுக்கவேயில்லை. எங்கே போய் இருக்கிறீர்கள் எப்போது வருவீர்கள் என்றும் தெரியவில்லை. வயதான உடம்பை எத்தனை நாள் வைக்க முடியும். அதோடு உங்கள் தாயாரும் தன் இறுதிச்சடங்கை பாலாதான் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டுத்தான் கண்ணை மூடினார். நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்கள் கடமையைத் தான் செய்தோம். எங்களை மன்னித்து விடுங்கள்'' - என்றவாறு தன் அறையை நோக்கி நடந்தார்.

அந்தக் கொன்றை மரத்தின் நிழலில் மண்டியிட்டு அமர்ந்தார். தாயின் இழப்பு அப்போதுதான் உறைக்க தான் ஒரு ஆண் என்பதையும் மறந்து தாயைப் பிரிந்த மகனாய் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தார் வாசுதேவன்.

## [.....6.....]

**தாய்விழி அழுதால் – சூரியன்**
**அழுமே பாறையும் நீர் கசிந்திடுமே**
**அம்மாவே தெய்வம், ஆகாய தீபம்**
**தாய்சிந்தும் கண்ணீர் நெஞ்சைச் சுடும்!**

''சார்'' - என்ற தயக்கமான குரல் கேட்டு நிமிர்ந்தார் ராமமூர்த்தி. ''அடடே! வாப்பா சபாபதி. என்ன திடீர்னு இந்தப்பக்கம்?''

''அப்பாவை பார்த்திட்டு வரலாம்னு வந்தேன் ஸார்'' - என்றவனை ஆச்சர்யமாய் பார்த்தார்.

''என்ன? அப்பாவைப் பார்க்க வந்தியா? அவர் மூச்சுக் காத்து மேல பட்டாலே எனக்கும் என் பொஞ்சாதி புள்ளைகளுக்கும் இந்த நோய் வந்திடும்னு சொன்னியேப்பா. இப்ப என்ன திடீர்னு வந்திருக்க. உங்க அப்பா பேர்ல எதுவும் சொத்து இருக்கா. கையெழுத்து வாங்கிட்டுப் போலாம்னு வந்தியா.''

''ஸார். வேண்டாம் சார். என்னைப் பேசியே கொன்னுடாதீங்க''



- ''நான் ஏம்ப்பா உன்னைக் கொல்லப்போறேன். நீ எதுக்காக இங்க வந்திருக்க. முதல்ல அதைச் சொல்லு.''

''சார்! நான் என் அப்பாவை அழைச்சிட்டுப் போயிடுறேன் ஸார்''

''ஏம் என்னப்பா சொல்றே. நிஜமாவா சொல்ற.'' - வியப்பாய் கேட்டார்.

''சத்தியமா சார். இப்ப எங்க வூட்டாண்டயே இலவச ஆசுபத்திரி வந்திருக்கு. அதிலயே அப்பாவைக் காட்டிக்கிறேன். என் வூட்லயே வெச்சுக்கிறேன் சார். நான் இருக்கும்போது என் அப்பா ஏன் அநாதை மாதிரி இங்கே இருக்கணும். அதான் சார் கூட்டிகினு போலாம்னு வந்தேன்''




''ரொம்ப சந்தோஷம்ப்பா. கேட்கவே சந்தோஷமா இருக்கு. ஆமா திடீர்னு உனக்கு எப்படி இந்த ஞானோதயம் வந்தது?''

''ஸார்! அதோ ஒரு அம்மா இருக்காங்களே. அந்த அம்மாதான் நேத்து என்கிட்ட சொல்லிச்சு. என் அப்பாவுக்கு வந்திருக்கிறது வெறும் தேமல்தானாம். தொழுநோய் இல்லையாம். எந்தநோய் வந்தாலும் இப்படி பெத்தவங்களை ஒதுக்கிவெக்கக் கூடாதாம். அன்பா அனுசரணையா கவனிச்சுக்கணுமாம். செலவழிக்க காசு இல்லன்னா என்ன உன் அப்பாவை தர்மாசுபத்திரியில காட்டவேண்டியது தானேன்னு சொல்லிச்சுங்கய்யா!''

அவன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தார் ராமமூர்த்தி. அங்கே மரத்தடியில் அமர்ந்து கூடைபின்னக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள் வைதேகி. இரண்டு நாட்கள் முன்பு தான் அவனிடம் கேட்டிருந்தாள். ''சார்! சும்மாவே இருக்கிறத விட ரொம்ப வயசானவங்கள விட்டுட்டு மத்தவங்களுக்கு ஏதாவது கைத்தொழில் சொல்லித் தரட்டுமா? அவங்களும் ஆர்வமா இப்படி எதுவும் கத்துக்கிட்டா அவங்களோட வருத்தமும் குறையும். ஒரு தன்னம்பிக்கையும் இருக்கும்.

நம்மாலயும் சம்பாதிக்க முடியும்னு நம்பிக்கை வரும். நீங்க என்ன ஸார் சொல்றீங்க? -என்றவனிடம், ''உனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்யும்மா. ஆனா முடியாதவங்கள வற்புறுத்த வேண்டாம்

சொல்லி சம்மதம் சொன்னார்.

- என்று சொல்லி சம்மதம் சொன்னார்.

இதோ ஏழெட்டு பேர் அவருடன் அமர்ந்து கலர்கலராய் வயர் கூடை பின்னிக் கொண்டிருக்க, வயது முதிர்ந்தவர்கள் பேசிக்கொண்டே அதை ஆர்வமாய் பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. இந்த வயதில் இந்தப் பெண்ணுக்கு எத்தனை திறமை. என்ன சாமார்த்தியம், இந்த சபாபதியைப் போல் இதுவரை மூன்று பேர் வந்து தங்களைப் பெற்றவர்களை ஏதோ காரணம் சொல்லி அழைத்துப் போயினர். இதோ அடுத்ததாய் இந்த சாபாபதி!

''என்ன ஸார். இவ்வளவு யோசிக்கிறீங்க. எம்மேல் நம்பிக்கை இல்லையா சார்? எங்க அப்பாமேல எனக்கு அன்பு இருக்கு ஸார், எனக்காக அவர் ரொம்ப கஷ்டப்பட்டிருக்கார்.

அப்படிப்பட்டவரை நான் ஒதுக்கி வெச்சது எவ்வளவு பெரியபாவம். வயசான காலத்துல எங்க அப்பா என் அன்புக்கு எப்படி ஏங்கியிருப்பாங்க. நான் அவரை இங்க கொண்டுவந்து விட்டுட்டேனே. எங்க அப்பாவை தான் கூட்டிட்டு போயி அவரை நல்லபடியா கவனிச்சு நான் செய்த பாவத்தை போக்கிடுறேன் சார். எங்க அப்பாவை என் கூட அனுப்பி வெச்சிருங்க சார். உங்களுக்கு புண்ணியமாப் போகும்'' - கைகூப்பினான் சபாபதி.

''சரிப்பா கலங்காதே. உன் மேலே நம்பிக்கை இருக்குப்பா. உன் தகப்பனை நீ பார்த்துக் கொள்வேன் என்றது எனக்கு ரொம்ப சந்தோஷம். இந்தா இந்த நோட்டுல கையெழுத்தைப் போட்டுட்டு உன் அப்பாவைக் கூட்டிட்டுப் போ. பத்திரமா பார்த்துக்கோ'' - என்றவாறு அவனிடம் கையெழுத்து வாங்கிவிட்டு அவனையும் அழைத்துக் கொண்டு சுந்தரமூர்த்தியைத் தேடிப்போனார்.

மூவருமாய் வந்து வைதேகியைப் பார்த்ததும் பாலாஜி வரவும் சரியாக இருந்தது. ''அம்மா! எம்புள்ள என்னை வீட்டுக்குக் கூட்டிப்போக வந்திருக்காம்மா. நீங்கதான் நிறைய புத்திமதி சொன்னீங்களாம். எங்கே என்புள்ளையைக் காணாமல் பாகீரதியம்மா போல இங்கேயே கிடந்து செத்திடுவேனோன்னு பயந்திட்டே இருந்தேன். உங்களால தான் இன்னிக்கு நான் வீட்டுக்குப் போறேன். இந்த உதவியை என் உயிர் இருக்கிறவரைக்கும் மறக்க மாட்டேம்மா'' - கண்ணீரோடு கைகூப்பினார்.

''நான் எதுவும் பண்ணல சுந்தரமூர்த்தி சார். உங்க புள்ள நல்லவர்தான். ஏதோ அறியாமையால் உங்களை ஒதுக்கி வச்சிருந்தார். எடுத்துச் சொன்னதும் புரிஞ்சிகிட்டார். நீங்க சந்தோஷமாக கிளம்புங்க'' என்றார் வைதேகி.

அனைவரிடமும் விடைபெற்று அவர் கண்ணீரும் சந்தோஷமும் சேர புன்னகையோடு சென்றார். என்னம்மா! பெரிய பெரிய வேலையெல்லாம் செய்யிற போலிருக்கு. எனக்கே தெரியாம?'' என்றார் ராமமூர்த்தி.

''ஐயோ இல்ல சார்! பாலாகிட்ட சொல்லிட்டுத்தான் எல்லாம் செய்தேன். அவர் சரின்னாரே''

''ஓஹோ! அப்ப இவர்தான் இங்கே தலைவரா... அப்போ நான் தேவையில்லையா?''

''இது என்ன பேச்சு. இங்க உள்ளவங்களை பத்தி எத்தனைநாள் வேதனைப்பட்டு எங்கிட்ட புலம்பியிருக்கீங்க. அவங்க ஏக்கத்தை பார்த்து நாம எப்படி தவிச்சிருக்கோம். அதனால தான் வைதேகி சொன்ன ஐடியா பிடிச்சதால ஓகே சொன்னேன். உங்கிட்ட சொல்லும் முன்னால் பாகி பாட்டியோட டெத்தால எல்லாத்தையும் மறந்துட்டேன். இதுக்குப் போய் இப்படிப் பேசலாமா? எங்களுக்கு நீங்க வேணும்ப்பா''

''டேய்! டேய் பையா இப்போ எப்படிக் கூப்பிட்டே'' ராமமூர்த்தி கண்களை விரித்துக் கேட்டார்.

''அது... அது வந்து...'' தடுமாறினான் பாலாஜி.

''கூப்பிடுடா... அப்படியே கூப்பிடுடா. மனசில இருக்கிறதுதானே வார்த்தையா வரும். நீ இப்படிக் கூப்பிடமாட்டியான்னு எத்தனை நாள் ஏங்கியிருப்பேன் தெரியுமா? கூப்பிடுடா... அப்பான்னு கூப்பிடுடா''

''அப்பா.... நான் எப்படி உங்களை.... நான் யாரோ என்ன ஜாதியோ... நான் அநாதைப்பா...''

''டேய் படவா! வாயை மூடுடா... நாமெல்லாம் மனுஷ ஜாதிடா... நீ என்புள்ளடா... அப்பான்னு கூப்பிடுடா'' தழுதழுத்தவரைக் கட்டிக் கொண்டான் பாலாஜி.

''தேங்க்ஸ்ப்பா... ரொம்ப தேங்க்ஸ்ப்பா... வைதேகி! இது என் அப்பா... தெய்வாம்மா இதோ என் அப்பா! சாவித்ரீம்மா என் அப்பா'' அனைவரிடமும் சொல்லியவாறே அவரைக் கட்டிக் கொண்டான்.

''ம் இந்த சந்தோஷத்தை இன்னிக்கு இனிப்பாக கொண்டாடனும். சொல்லுங்க எல்லாரும் பால்பாயாசம் செய்யலாமா இல்ல ரவா கேசரி

செய்யலாமா?'' வைதேகி கேட்க,

''பால்பாயாசம்... பால்பாயாசம்'' - என கோரஸாக பதில் வர ''ரெண்டுமே செய்யுங்கோ. நாக்கில் எச்சி ஊருது'' என்று ஒரு குரல் வர, ''நாகுப்பாட்டி! இது ரொம்ப அதிகம்'' - என்றான் பாலாஜி.

அனைவரும் சிரிக்க அந்த சிரிப்பின் மணம் நிறைந்தது. ''சார்! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. நாம எங்கே போகலாம்?'' என வைதேகி கேட்டாள்.

''பீச்... அல்லது மேல்மருவத்தூர் கோயில் அல்லது கிண்டி பார்க் என ஒவ்வொன்றாய் சொல்ல சகுந்தலை சொன்னாள்.

''பாலா! மகாபலிபுரம் கூட்டிட்டு போறியா. என் வீட்டுக்கார என்னைக் கூட்டிட்டு போன ஒரே இடம். கடைசி இடமும் அதுதான். நாளைக்கு அவரோட நினைவுநாள். அந்த நாள்ல அவருகூட சேர்ந்து நடந்த அந்த கடற்கரையில நான் நடக்கணும். அந்த சிற்பங்களை வருடணும். கடற்கரை கோவிலுக்குப் போகணும்னு ரொம்ப ஆசையா இருக்குப்பா. அழைச்சிட்டு போறியாப்பா'' சகுந்தலையம்மாவின் வார்த்தையில் வலியும் ஏக்கமும் கலந்திருக்க அங்கே கனத்த மௌனம் நிலவியது.

''கண்டிப்பா போகலாம். காலையிலே எல்லாரும் கிளம்பிடணும். அப்போததான் நிதானமா எல்லா சிற்பத்தையும் ரசிச்சி பார்த்துட்டு வரலாம். தெய்வாம்மா! நாலு பேரைக் கூடச் சேர்த்துக்கிட்டு சாப்பாடு செய்திடுங்க. அங்கே கொண்டுபோய் சாப்பிடலாம். அப்பா! நீங்க ராமுவுக்கு போன் பண்ணி காலையில ஆறு மணிக்கு வேனை எடுத்திட்டு வரச் சொல்லிடுங்க வைதேகி! நீ ரமாம்மாவையும் நாகு பாட்டியையும் அழைச்சிட்டுப் போயி நாளைக்கு டூர்ல சாப்பிடற மாதிரி ஏதாவது நொறுக்குத் தீனி செய்திடு'' - மளமளவென உத்தரவுகளை பிறப்பித்தான் பாலாஜி.

''பாலா! இந்த பரபரப்புல பால்பாயாசத்தை விட்டுடாதேடா. முதல் அதைச் செய்யச் சொல்லு. எனக்கு மட்டும் ரெண்டு கிளாஸ். இப்பவே சொல்லிட்டேன்'' என்றாள் நாகம்மா.

வயதானால் மீண்டும் குழந்தைப் பருவத்திற்கே திரும்பி விடுவோமோ. பாட்டி சர்க்கரை வியாதி நோயாளி. ஆனால், குழந்தைபோல் இனிப்பு சாப்பிட அவ்ளோ ஆசை. பாட்டியை இங்கு வந்து சேர்ந்த அன்று பாட்டியின் மருமகன் சொன்னது நினைவிற்கு வந்தது.

''வயசானா வாயை அடக்க வேண்டாமா... உடம்பு முழுக்க



சர்க்கரை. ஆனா, தினம் ஒரு ஸ்வீட்டு கேக்குது. எனக்கும் மூனுபசங்க இருக்கு. அதுகளுக்க எதையும் செய்து தர முடியல்ல. செய்தா முத ஆனா சாப்பிட்டு அப்புறம் சுகர் அதிகமாக எல்லாரையும் படுத்தி எடுத்துடறது.

கண்ல விளக்கெண்ணெய் விட்டுண்டு கண்காணிக்க வேண்டியிருக்கு. அப்படியும் காபியில சர்க்கரை அள்ளி கொட்டி குடிக்கிறா. நான் என்ன பண்ண முடியும். அதனாலதான் உங்ககிட்ட கொண்டு வந்து விடுறோம்... பார்த்துக்கங்கோ'' - என்றாரே.

பாட்டியின் செயல்பாடுகளை பார்க்கையில் அவர் மருமகனின் பாடும் கஷ்டம் என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும், வயதானவர்களை இப்படி விடலாமா? பரிவாய் இதமாய் சொல்லியிருக்கலாம். ஆனால், பாட்டி கேட்பதும் கஷ்டம்தான். இதில் யாரையும் குற்றம் சொல்ல முடியாது. சொல்வதென்றால் இந்த சர்க்கரை வியாதியைத்தான் சொல்ல வேண்டும்.

''நாகுப்பாட்டி! உங்களுக்கு என்ன இனிப்பு மேல இவ்வளவு ஆசை'' நயமாகக் கேட்டான்.

''அது சின்ன வயசுல இருந்தே அப்படித்தான். எங்க அம்மா ஒரு கஞ்சி காய்ப்பா. பதனிகஞ்சின்னு பேரு. கருப்புக்கட்டி நிறைய தேங்காய்ப்பூ, பச்சரிசி மாவு, பயித்தம் பருப்பு எல்லாம் போட்டு வெப்பா, எங்க அம்மா அந்த கஞ்சி வெச்சா தெரு வரை மணக்கும். இனிப்பும் சுவையுமாக எப்படி இருக்கும் தெரியுமா? எத்தனை கிளாஸ் வேணும்னாலும் குடிக்கலாம். அத்தன ருசி'' சொல்லும்போதே சப்புக் கொட்டினாள்.

''சாப்பிட்டு பழகிய நாக்குப்பா இது. இப்ப அதைக் கட்டுப்படுத்துன்னா எப்படி?''

''அது சரி பாட்டி! ஆனா அந்த இனிப்பே இப்ப விஷமாகிப் போச்சே... அதைச் சாப்பிட்டு நீங்க படுற அவஸ்தையை பார்க்க முடியாமத்தானே உங்களை இங்க வந்து சேர்த்தாங்க.

பாட்டியின் முகம் கறுத்தது. கண்களில் கோபம் தெரிந்தது.

''பாட்டி! நான் சொல்றேன்னு கோபப்படக் கூடாது. கொஞ்சம் நிதானமா யோசிச்சி பதில் சொல்லுங்க. உங்க மருமக எப்படி? உங்களை நல்லா பார்த்துப்பாளா? வேளா வேளைக்கு சாப்பாடு தருவாளா? இல்லை உங்களை மதிக்காமல் கவனிக்கவே மாட்டார்களா? இதமாய்க்

கேட்டான் பாலாஜி. பாட்டி ஒருகணம் யோசித்தார்.

''சேச்சே! அடுத்த வீட்டுல இருந்து வந்த பெண் என்றாலும் கம்மா குறை சொல்லக் கூடாதுப்பா. எம்மாட்டுப் பொண்ணு குணத்துல தங்கம்தான். என்னை ஒருவேலை செய்யவிடமாட்டா. வேளைக்கு சரியா சாப்பாடும் மாத்திரையும் தந்திடுவா. அதில ஒரு குற்றம் சொல்லமுடியாது.''

''அப்போ அவங்க மேல எந்தத் தப்பும் இல்லயே?''

''இல்லப்பா! நான் தான் எதையாவது எடுத்துச் சாப்பிட்டு அவஸ்தைபடுவேன். அப்பதான் திட்டுவா''



சிங்கப்பூரில்
உள்ள மரினா
சென்டர் என்ற இடத்தில்
சிங்கப்பூர் ப்ளையர் என்ற
ராட்டினம் நிறுவப்பட்டுள்ளது.
இது உலகின் மிகப்பெரிய
ராட்சதராட்டினம் ஆகும்.
-ஜீ.மஞ்சரி,
கிருஷ்ணகிரி.

''உங்க மேல உள்ள அக்கறையில தானே திட்டுறாங்க. நீங்க ரொம்பநாள் வாழணும்னு ஆசைப்பட்டுத்தானே இனிப்பு தரமாட்டேன்னு சொல்றாங்க. நீங்க சமர்த்தா இருந்திருந்தா அவங்க கூடவே இருந்திருக்கலாமே.'' பாட்டி விரக்தியாய் சிரித்தாள்.

''பாலா! இப்ப எனக்கு என்ன கடமை பாக்கியிருக்கு? பொண்ணையும் புள்ளையையும் கட்டிக் கொடுத்து பேரன்பேத்தி பார்த்தாச்சு. கட்டினவரை எமனுக்கு தாரைவார்த்திட்டேன். தலையெல்லாம் நரைச்சுப்போச்சு. புள்ளைங்க அமோகமா வாழுறத பார்த்தாச்சு. இனிமே ரொம்ப நாள் இருந்து என்னப் பண்ணப்போறேன். அதுக்கு பதிலா இப்படியே நடமாடிட்டு இருக்கும் போதே ஆசைப்பட்டதை சாப்பிட்டு நிம்மதியா கண்ணை மூடிட்டு போயிடுறேன். என்னை இவங்க சந்தோஷமா அனுப்பிவைக்கலாமே. அதை விட்டுட்டு ரொம்ப நாள் வாழணும்னு



இப்படி அநாதையா கொண்டுவந்து போட்டுட்டாங்களே, வயசான காலத்தில் என்ன அழவெச்சிட்டாங்களேய்யா'' - பாட்டி சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''அத்தே! என்னை மன்னிச்சிடுங்க அத்தை. உங்க மனசு புரியாம உங்களுக்கு நல்லது செய்யுறதா நினைச்சு நானே இப்படி பண்ணிட்டேனே'' - என்றவாறு ஓடிவந்து காலில் விழுந்தாள் காயத்ரி. பாட்டியின் மருமகள். காலில் விழுந்தவளை பரிவாய் தூக்கி அணைத்துக் கொண்டார் பாட்டி.

## (.....7.....)

பசுந்தங்கம் புதுவெள்ளி மாணிக்கம்
மணிவைரம் இவையாவும் ஒரு
தாய்க்கு ஈடாகுமா – விலைமீது
விலைவைத்து கேட்டாலும் கொடுத்தாலும்
கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மா!

மகாபலிபுரம். இன்றும் உயிரோடு பேசும் சிற்பங்கள் பல்லவன் காலச் சிறப்பைச் சொல்ல அனைவரும் ஆர்வமாய் ஒவ்வொரு சிற்பங்களையும் வருடிப்பார்த்து சிலிர்த்தனர். பெரியவர்கள் அனைவரும் பழங்கதை பேசிக்கொண்டே முன்னே செல்ல, வைதேகி சிற்பங்களின் அடியில் வயித்துப் போயிருந்தாள். வெகுநாட்களாய் பார்க்க விரும்பிய இடம். தன் அன்னையோடு வந்திருந்தால் எத்தனை ஆனந்தமாய் இருக்கும்.

சிற்பங்களோடுசிற்பமாய் உறைந்து போய் நின்றவளை தோள் பற்றி அசைத்தான் பாலாஜி. ''என்ன வைதேகி! பல்லவர் காலத்திற்கு போய்விட்டாயோ. நரசிம்ம பல்லவர் என்ன சொல்கிறார்?'' - என்றான் கேலியாய்.

''கடற்கரைக் கோவிலுக்குப் போகலாம். அருமையான இடம். பார்க்க அத்தனை இதமாக இருக்கும். ம். வாங்க எல்லோரும்'' - அனைவருமாய் புறப்பட்டு கோவிலை அடைய பிரமித்துப் போனாள் வைதேகி. ஒவ்வொரு சிற்பமும் உயிரோவியமாய் தெரிய தன்னை மறந்து ரசித்தாள்.

மற்றவர்கள் ஓரமாய் அமர்ந்து கொள்ள வைதேகியுடன் நடந்து

கொண்டே பாலாஜி சிறப்புகளைப் பற்றிக் கூறிக்கொண்டே வந்தான். அன்பும் நேசமும் கலந்து சொன்ன கதைகளைக் கேட்டு விழிகளை விரித்தாள் வைதேகி.

''அற்புதமான இடம்தான் இது. இதைப்பார்க்காமல் வாழ்நாளில் இத்தனை ஆண்டை வீணாக்கிவிட்டேனே''

''அதனால் என்ன? இனி வருடம்தோறும் வந்துவிடலாம்!''

''நிஜமாகவா?'' ''கண்டிப்பாய். எனக்கும் இந்த இடம் மிகப் பிடிக்கும். இங்குள்ள காற்றில் கூட சிற்பியின் ஒலி கேட்கும். ரம்மியமான இடம் இது?''

''கால்வலிக்குது பாலா. கொஞ்ச நேரம் உட்காரலாமா?''

''இதோ இந்த சிங்கத்தின் பக்கத்தில் உட்கார். கடற்கரை காற்று அருமையாய் இருக்கும்'' - அவன் காட்டிய இடத்தில் அமர்ந்தாள். சற்று இடைவெளிவிட்டு அமர்ந்து கொண்டான்.

கண்பார்க்கும் தூரத்தில் உடன் வந்தவர்கள் அமர்ந்திருந்து ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருக்க நாகுபாட்டியின் நினைவு வந்தது. நேற்று மருமகளைக் கண்டதும் அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டது நினைவு வர சிரித்துக் கொண்டான்.

மகனும் மருமகளுமாய் பேசித் தீர்த்து பாட்டியைக் கையோடு அழைத்துப் போய்விட்டார்கள். பாட்டியும் சந்தோஷமாய் சிரித்து அனைவரிடமும் விடைபெற்று தெய்வானையிடம் வந்தாள்.

''தெய்வானை! நான் போவதில் யாருக்கு சந்தோஷமோ இல்லையோ உனக்குத் தான் சந்தோஷம். தினமும் உங்கூட சண்டைபோட நான் இருக்க மாட்டேனே'' - என்றாள்.

''அதெல்லாம் நான் கோபப்படமாட்டேன் பாட்டி. எல்லோருக்கும் நீங்க செல்லப்பிள்ளை ஆச்சே'' - என்றதும் கண்கலங்கினாள்.

ஆமாம். பாட்டி வளர்ந்த குழந்தைதான். அந்தக் குழந்தை இன்று தங்களுடன் இல்லை என்ற நினைப்பு வர மனம் லேசாய் கலங்கியதுதான். என்றாலும் தன் வீட்டில் தன் உறவுகளுடன் வாழ்கிறது என்ற நிம்மதி அதிகம் இருந்தது.

''என்ன பாலா அமைதியாகிட்டீங்க. பாட்டி ஞாபகமா?''

''அட! நீயும் அதைத்தான் நினைச்சிட்டு இருந்தியா? நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே நினைவுதான்''



''பின்னே! பாட்டி இருந்தா யாராவது ஒருத்தர் இப்படி அமைதியா இருந்து அதிரசம் சாப்பிடமுடியுமா? பாட்டி விடுவார்களா?'' - என்றாள் சிரித்தபடி.

வைதேகியின் சிரித்த முகத்தைப் பார்த்தான் பாலாஜி. ''வைதேகி! நீ சிரிக்கும் போது ரொம்ப அழகு தெரியுமா?''

''இனிமே சிரிக்கலப்பா'' - என்றாள் சீரியஸாய். ''ஏன்?'' ''உங்க மனம் தடுமாறுகிறதே. அது தப்பாயிற்றே''

''ஏன் வைதேகி. தடுமாறலாம். தடம் மாறித்தான் போகக் கூடாது.''

''போதும். கவிதை பாடிவிடாதீர்கள். வாருங்கள் போகலாம். இந்த இடத்தில் ஏதோ மாயசக்தி இருக்கிறதென்று நினைக்கிறேன்''

''ஏன் அப்படி'' - என்றவாறு நெருங்கி அமர்ந்தான்.

''உங்கள் பேச்சு, செய்கை எல்லாம் மாறுகிறதே. இது சரியில்லையாது. முதலில் எழுந்திருங்கள். மற்றவர்களுக்கு பசிக்கும். சாப்பிடலாம்'' - என்று எழுந்தாள்.

''இப்படியே என்னை விட்டு விலகிவிடு. பிறகெப்படி உன்னை புரிந்து கொள்வதாம்?'' - சலித்துக்கொண்டான் பாலாஜி.

''அதற்கெல்லாம் காலம் நேரம் இருக்கிறது. முதலில் எழுந்து வாருங்கள். ம்''

''எதற்கெல்லாம் காலம் நேரம் இருக்கிறது?''

''எல்லாவற்றுக்கும்தான். முதலில் நம் குறிக்கோள் நிறைவேறட்டும். பிறகு உங்கள் அப்பாவிடம் சொல்லுங்கள் உங்கள் விருப்பத்தை.''

''ஏய்! என் விருப்பம் என்னன்னு உனக்கு புரிஞ்சுதா. ஓ! தேங்க் காட். இதுபோதும் எனக்கு.'' - துள்ளலாய் எழுந்து அவளுடன் நடந்தான்.

''யப்பா! கடலின் ஆழத்தை கண்டவர் கூட பெண்ணின் மனதை கண்டுபிடிக்க முடியாதாம். அது ரொம்பச்சரி வைதேகி. இத்தனைநாள் உங்கூடவே இருக்கேன். எனக்கு எதுவுமே புரியல்ல பாரு''

''ஹலோ. இந்த ஆராய்ச்சியெல்லாம் இப்பத் தேவையா? இந்தப் பேச்சைவிடுங்க. நம்ம மேட்டருக்கு வாங்க''

''தோ வந்துட்டேன். சொல்லு. சொல்லு. சொல்லு. என்ன செய்யணும்'' - ஆவலாய் அவன் முன் வந்து நின்றவனை செல்லமாய் தலையில் குட்டினாள்.

''ச்சீ! ஆசையப் பாரு. நான் நம்ம மேட்டருன்னு சொன்னது விஸ்வநாதன் சாரைப் பத்தி.''

''ஏன் அவருக்கென்ன? நல்லாத்தேனே இருக்கார்.''

''எங்கே நல்லா இருக்கார். ரூமை விட்டு வெளியே வர்றதில்ல. மத்தவங்களோட கலகலப்பா பேசுறதில்ல. ஏன் பாலா அப்படியே இருக்கார். மனைவி குழந்தைங்க எல்லாம் இல்லையா அவருக்கு?''

''இருக்காங்க. எல்லாரும் இருக்காங்க. ஆனா யாரும் இங்க வரமாட்டாங்க.''

''ஏன்? எதுக்காக?''

''இவருக்கு டி.பி.இருக்கு. எனிடைம் இருமிட்டே இருப்பார். சளியும் இரத்தமுமா சிலசமயம் வாமிட் பண்ணுவார். இவர் நோய் தங்களுக்கும் வந்திடுமோன்ற பயத்தில இங்க வந்து விட்டுட்டு போயிட்டாங்க. இப்ப டாக்டர்கிட்ட காட்டி ஓரளவு நல்ல குணமாகிடுச்சு. ஆனாலும் இவரை யாரும் வந்து பார்க்கவும் இல்ல. கூட்டிட்டு போகவும் இல்லை. நம்ம இல்லத்துக்கு கார்ல வருவான் பாரு ஒரு ரெட் ஸ்வெட்டர். அவன்தான் இவர் மச்சினன். அவன் மட்டும் எப்பவாவது வந்து பார்த்திட்டு அவருக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்திட்டு போவான்.''

''நீங்க அவர்கிட்ட பேசக்கூடாதா பாலா''

''ம். சொன்னேன். அவங்க வீட்ல அக்கா வெச்சதுதான் சட்டமாம். ஒரு நோயாளியைக் கட்டிகிட்டு அழ முடியாதுன்னு சொல்லிட்டாங்களாம் அவங்க அக்கா. அதான் விஸ்வநாதனோட மனைவி. இவன் மட்டும் மனசு தாங்காம அவங்க அக்காவுக்கு தெரியாம வந்து பார்த்துட்டு போவானாம். நாம வேறென்ன செய்ய முடியும்?''

''கஷ்டம்தான் இல்ல பாலா. பிள்ளைங்களோ மத்தவங்களோ ஒதுக்கலாம். ஆனா மனைவியே ஒதுக்கிறது எவ்வளவு பெரிய கொடுமை. இதனால தான் அவர் யார் கூடவும் பேசாம வெளியே வராம ரூமிலேயே அடைஞ்சி கிடக்கிறாரா. பாலா! இனிமே நானே அவரை பார்த்துக்கட்டுமா?''

''உனக்கேன் சிரமம் வைதேகி. ஏற்கனவே உனக்கு நிறைய கவலை. இதில் அதைக்கற்றுத் தருகிறேன். இதைக் கற்றுத்தருகிறேன் என்று தொடங்கியிருக்கிறாய்.''

''ஏன்? அதிலென்ன தப்பு. எல்லாருமே ரொம்ப ஆர்வமா



கத்துக்கிறாங்க தெரியுமா? - என்றாள் உற்சாகமாய்.

''அதெல்லாம் சரிம்மா. ஆனா உன் உடம்பின் மீதும் அக்கறை காட்டவேண்டாமா? இப்படி ஓயாமல் உழைத்தால் எப்படி? கொஞ்சம் ஓய்வு கொடு. நல்லா சாப்பிடு வைதேகி. முன்னை விட ரொம்பவும் இளைத்திருக்கிறாய். அப்பா கூட நேற்று சொன்னார்.''

அவனது அக்கறையான பேச்சில் குறுக்கிடாமல் அமைதியாக நடந்தாள். ''கூடுதலா ஒரு லிட்டர் பாலுக்கு சொல்கிறேன் வைதேகி. தினமும் காலையும் இரவும் பால் சாப்பிடு. ஹார்லிக்ஸ் வாங்கித்தரவா. பாலில் கலந்து குடிக்கிறாயா''

''வேண்டாம் பாலா. எனக்காக கஷ்டப்படாதீங்க. நான் இனிமே ஒழுங்கா சாப்பிடுறேன்''

''தினமும் எங்களுடன் சேர்ந்து சாப்பிடு. உன்னை கவனமாய் பார்க்க வேண்டும். இல்லையென்றால் ஏமாற்றிவிடுவாய்''

''சரி. பேச்சு மீண்டும் திசைமாறுகிறது. நான் விஸ்வநாதன் சாரை பார்த்துக்கட்டுமா?''

''உன் இஷ்டம் போலச் செய். ஆனா அவர் நல்லா நடமாடும் நபர்தான். அதனால் அவர் வேலைகளை அவரே பார்த்துக்கொள்வார். நீ சும்மா போய் பார்த்து ரெண்டு வார்த்தை பேசிட்டுவந்தா போதும். அவர் ரூமை நீ சுத்தப்படுத்த வேண்டாம். சரியா?''

''ம்'' - என தலையாட்டிய போது, ''ஏ புள்ளைகளா? பசி உயிரு போகுது. வாங்க சாப்பிடலாம்'' - சாவித்ரியம்மா குரல் கொடுக்க சிரித்தவாறே அவர்களை நெருங்கினர்.



ஆப்பிளை விட அதிக அளவு நோய் எதிர்ப்பு சக்தி தரும் பழம் ஸ்ட்ராபெரி. இது ஓர் அரிய வகை பழமாகும். மேலும் சர்க்கரை நோய், புற்று நோயை தடுக்கும் திறன் வாய்ந்தது. அனைத்து விதமான நோய்களையும் தடுக்கும் ஆற்றல் கொண்டது ஸ்ட்ராபெரி பழம்.

-இரா.ஞானி, ஊகுச.

கடற்கரையோரமாய் நல்ல இடமாய்ப் பார்த்து அமர்ந்து கொண்டு வந்த சாப்பாட்டைப் பிரித்து கேலியும் கிண்டலுமாய் சாப்பிட்டு முடித்தனர். ஒவ்வொருவரும் தங்களது வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்களைப் பேசிக் கொள்ள பொழுது இனிதாக கடந்தது.

மாலைவேளை நெருங்கியதும், ''நீங்கள்லாம் பேசிட்டு இருங்க. இதோ இப்போ வந்திடுறேன்'' - என்றவாறு பாலா எழுந்து செல்ல, ''நானும் வரட்டுமா'' - என்றாள் வைதேகி.

பெரியவர்கள் தங்களுக்குள் சிரித்துக்கொள்ள அசட்டு சிரிப்போடு அவர்களோடு அமர்ந்து கொண்டாள். லேசாய் சிரித்தவாறே போன பாலாஜி அரைமணி நேரம் சென்றபிறகே வந்தான். ''ம்! சகுந்தலாம்மா, நல்லா பார்த்தீங்களா உங்கள் நினைவுச்சின்னத்தை இருட்டிப்போச்சு. போலாமா''

அனைவரும் எழுந்தனர். ''ஆமாம்பா. நல்லா பார்த்தாச்சு. போன உடனே ஒரு குளியல் போட்டு படுத்தா நாளைக்கு மதியம்தான் எழுந்துக்க முடியும். உடம்பு அவ்வளவு அலுப்பா இருக்கு'' - என்றவாறு வேன் நின்றா இடத்திற்கு நடக்க ஆரம்பித்தனர்.

அனைவரும் ஏறிய பிறகு கடைசியாய் ஏற முயன்ற வைதேகியின் கையைப் பற்றி அதைக் கொடுத்தான் பாலாஜி. காதிற்குள், ''இது என்னோட சின்ன கிப்ட். இல்லத்தில் போய் பிரிச்சுப்பாரு.'' - என்று கிசுகிசுத்து விட்டு அவன் ஏறியதும் இயல்பாய் ஏறி அமர்ந்து கொண்டாள்.

வைதேகியின் இதயம் ஆவலாய் துடித்தது. பார்சலை பிரித்துப் பார்க்க துடித்த கைகளை கஷ்டப்பட்டு அடக்கினாள். சுற்றிய களைப்பில் அனைவரும் வேனிலேயே தூங்கிவிட, இருவரின் கண்கள் மட்டும் பேசின.

**[.....8.....]**

*தாயின் மடியில் தலைவைத்திருந்தால்*
*துயரம் தெரிவதில்லை – தாயின்*
*தாலாட்டைப் போல் கீதம் எதுவுமில்லை!*
*தாயின் அணைப்பே சொர்க்கம்!*
*தாயின் நினைப்பே இனிக்கும்!*



பாகீப்பாட்டியின் மறைவிற்குப் பிறகு அந்த அறையே தன் அறையாகிப் போனதில் இன்றுதான் சந்தோஷப்பட்டாள். யாருமற்ற தனிமையில் அந்தப் பரிசு கவரை பிரிப்பதில் சுவாரஸ்யமாகவும் ஆவலாகவும் இருந்தாள். கவரைப்பிரித்து அதற்குள் இருந்த பேப்பரை சுழற்றியதும் வியப்பில் மலர்ந்தாள் வைதேகி.

அது ஒரு வலம்புரிச் சங்கு. நல்ல வெண்மை நிறத்தில் பளபளப்பாக இருந்தது. ஆசையோடு அதை எடுத்து மெலிதாய் முத்தமிட்டாள். அதன் மீது பாவை என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. பா... வை... தங்கள் பெயரின் முதல் எழுத்துக்கள் என்று தெரிந்தது சிலாகித்தாள். இதைக் காதில் வைத்தால் ஏதோ ஓசை கேட்கும் என்பார்களே. மெல்ல அதை எடுத்து தன் வலது காதில் வைத்தாள்.

சூடான கரம் ஒன்று மறுகாதை பொத்தியது. திடுக்கிட்டுத் திரும்பினாள். ''கேட்கிறதா வைதேகி. என் இதயத்துடிப்பின் ஓசை அது. உனக்கு கேட்கிறதா?'' - என்றான் பாலாஜி.

முகம் புன்னகைக்க, ''ஆமாம் பாலா! கேட்கிறது. நீங்கள் கூட கேட்டுப்பாருங்கள்'' - என அவன் காதில் வைத்தாள். அந்த சங்கை அவள் கரத்தோடு சேர்த்துப்பற்றிக் கொண்டான்.

''பிடித்திருக்கிறதா வைதேகி''

''ரொம்பப் பிடிச்சிருக்கு. என் சொத்தாய் பத்திரப்படுத்திக் கொள்வேன். நம் பிள்ளைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் இதை காட்டுவேன்.'' அவனை அணைத்துக் கொண்டாள்.

''தேங்க்ஸ் வைதேகி! ஒரு சாதாரண சங்கு என்று தூக்கிப் போட்டுவிடுவாய் என்று நினைத்தேன்''

''ம்ஹூம்... இது நம் அன்பின் சின்னம். என் வாழ்நாள் முழுக்க இதை பாதுகாப்பேன்'' - என்று அவனோடு ஒன்டிக் கொண்டாள்.

பக்கத்து அறையில் யாரோ விசும்பும் ஒலி கேட்க, இருவரும் பதறி விலகினர். பாலாஜி முன்னே ஓட, அந்த சங்கை தன் பெட்டிக்குள் பத்திரப்படுத்திவிட்டு வேகமாக ஓடிவந்தாள் வைதேகி.

சகுந்தலைதான் விசும்பிக் கொண்டிருந்தாள். பாலாஜி அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான். ''என்னம்மா இது! நீங்க ஆசைப்பட்டதால தானே உங்களை அங்கே அழைச்சிட்டுப் போனோம். இப்பவும் அதையே நினைச்சு அழுதா எப்படி? அழாதீங்கம்மா''

''பாலா! இன்னிக்கு அவரோட நினைவுநாள். எனக்கு நாலு பையன்க

இருக்காங்க. ஆனா ஒருத்தன் கூட அவருக்கு சாமி கும்பிட்டிருக்க, மாட்டான். அவர் சமாதியில் ஒரு மாலை கூட போட்டிருக்கமாட்டான். அதை நினைச்சுத் தான் நான் அழறேன்''

''ஏம்மா! உயிரோட இருக்குற உங்களையே கவனிக்க முடியாம விட்டுட்டு போயிட்டாங்க. அவனுங்களா உங்க கணவர் சமாதிக்கு மாலை போடப்போறாங்க. அவனுங்க போட்டாலும் அதை உங்க கணவர் ஆன்மா ஏத்துக்காதும்மா! நீங்க சிந்துற இந்தக் கண்ணீர்தான் அவரோட அஞ்சலி. கவலைப்படாதீங்க. அடுத்த வருசத்துல இருந்து நானே உங்களையும் அழைச்சிட்டு போயி மாலை வாங்கிப் போட்டுட்டு வருவோம். சரியா?''


''அம்மா! ஊர் போயிட்டு வந்திட்டியாம்மா'' - என்ற குரலில் விருட்டென எழுந்தாள் சகுந்தலை. ஒருபெண் தன் கணவர் குழந்தைகளோடு நின்றார்.

''யம்மா! சௌந்தரி எப்படிம்மா இருக்க. மாப்பிள்ளைவாங்க, வாங்கடா பேராண்டிகளா'' - ஆவலாய் குழந்தைகளைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள். ''அம்மா! காலையில பத்துமணிக்கே உன்னைப் பார்க்க வந்தோம். நீங்கள்லாம் வெளியே போயிருந்தீங்களாம்?'' சார் சொன்னாரு. அதான் இவங்க அக்கா வீடு வரைக்கும் போயிட்டு இப்ப வந்தோம். நல்லா இருக்கியாம்மா?''

''அவங்க கண்ணீரே சொல்லவில்லையா எப்படி இருக்கிறார்கள் என்று.'' - என்ற பாலாஜியைப் பார்த்து மன்னிப்பு கோரினான் அவள் கணவன்.

''ஸாரி சார். நாங்க பெங்களூர்ல இருக்கோம். அடிக்கடி இங்க வரமுடியறதில்ல. அதோட அத்தனை பிள்ளைங்க இருந்தும் அத்தை

நாம் உண்ணும் சோறு ஜீரணமாக ஒரு மணி நேரம்.
பாலுக்கு இரண்டு மணிநேரம். முட்டை, இறைச்சிக்கு 3 1/2 மணி நேரம் ஆகிறது.
**ஆர்.பிரகாசம், தி.மலை.**





இங்க இருப்பது எனக்கே இன்றுதான் தெரியும். அதனால எங்க கூடவே எங்க வீட்டுக்கு அழைச்சிட்டு போகலாம்னு தான் இவ்னோ நேரம் வெயிட் பண்ணினோம். அத்தே! வாங்க போலாம்.''

''நீங்க சொன்னதே போதும் மாப்பிள்ளை. என்ன இருந்தாலும் மக வீட்ல வந்து தங்குனா அது நல்லாஇருக்காது. நான் இங்கேயே இருந்துக்கிறேன்''

''நீங்க எந்த காலத்துல இருக்கீங்க அத்தே. அந்த பிள்ளைங்க இருந்தும் நீங்க இப்படி அநாதை மாதிரி இங்க இருக்கீங்களே. இதை எப்படி விட்டுட்டு போக முடியும். மருமகனா ஏன் நினைக்கிறீங்க. எனக்கும் அம்மா இல்லை. உங்களை என் சொந்த அம்மாவா நினைச்சிக் கூப்பிடுறேன். உங்க மகன் கூப்பிடுறதா நினைச்சு வாங்க அத்தே. நம்ம வீட்டுக்கு போவோம்.

சகுந்தலை கதறி அழுதாள். ''அம்மா! அழாதேம்மா. அண்ணனும் தம்பியும் எங்கிட்ட ஒருவார்த்தை கூட சொல்லல. சொல்லியிருந்தா நான் உன்னை எங்கூடவே கூட்டிட்டு போயிருப்பேன். அழாம வாம்மா! இன்னைக்கு நம்ம அப்பா நினைவுநாள். வா. நம்மவீட்ல போயி சாமி கும்பிட்டுட்டு நாளைக் காலையில பெங்களூர் கிளம்பிடுவோம். நானும் உன் பிள்ளைதானம்மா. நீ இங்க இருந்தா என்னால ஒரு பிடிசோறு கூட சாப்பிட முடியாதும்மா. வாம்மா'' - என மகளும் அழ வைதேகி சகுந்தலையிடம் வந்தாள்.

''சகுந்தலாம்மா! இன்னும் ஏன் அழறீங்க. பிள்ளைங்க எல்லாம் அழுதுபாருங்க. நீங்க கிளம்புங்க. உங்க கண்ணீரைக் கண்டு உங்க கணவர்தான் இவங்களை அனுப்பினதா நினைச்சுக்கங்க. இனிமே அழக்கூடாது. மிச்ச காலத்தை உங்க பொண்ணோடவும் பேரக்குழந்தைகளோடவும் சந்தோஷமா கழியுங்க. எழுந்திருங்க. முகத்தை அலம்பிட்டு கிளம்புங்க'' - என தோள்பற்றி எழுப்பினான்.

சகுந்தலை எழுந்து வைதேகியை வாரியணைத்து நெற்றியில் முத்தமிட்டாள். ''மகராசி! நீ வந்த நேரம்தான் எங்களுக்கெல்லாம் விடிவு பொறக்குது. எங்க புள்ளகுட்டிகளோட சேராம அநாதையாவே கண்ணை மூடிடுவோமோன்னு நினைச்சு எத்தனையோ நாள் தூங்காம அழுது புலம்பியிருக்கோம்மா. நீ இந்த இல்லத்துல காலடி எடுத்துவெச்ச நேரம் நாங்க ஒருத்தர் ஒருத்தரா கிளம்பறோம். என்னை மாதிரியே எல்லாரும் நல்லபடியா அவங்க வீட்டுக்குப் போயி சந்தோஷமா வாழணும். அதுதாம்மா என்னோட ஆசை. நாங்க எல்லாரும் போனதும்

உன் மனசு போல எங்க பாலாவை கட்டிக்க தாயி. தங்கமான புள்ள அவன்.

இதுவரை எங்களுக்காகவே வாழ்ந்திட்டான். இனிமேலாவது அவனுக்காகவும் வாழட்டும். சந்தோஷமா அமோகமா வாழுவீங்கம்மா நீங்க. பாலா! கல்யாணத்துக்கு என்னை மறக்காம கூப்பிடணும். எப்படியும் எங்க இருந்தாலும் வந்திடுவேன். கூப்பிடுவல்ல?''

''கண்டிப்பாம்மா. நீங்க எல்லாரும் தான் இருந்து என்கல்யாணத்தை நடத்தித்தரணும். சரி நீங்க கிளம்புங்க. நான் அப்பாவை எழுப்பி கூட்டிட்டு வாரேன்! வைதேகி. சகுந்தலாம்மாகிட்ட நோட்டுல கையெழுத்து வாங்கிடு. அவங்க பொண்ணு அட்ரசையும் குறிச்சி வெச்சிடு''

''சரி பாலா'' - என்றவாறு வெளியேறினாள் வைதேகி.

மறுநாள் அனைவருமே தாமதமாக எழ, முதல் வேலையாய் விஸ்வநாதன் அறைக்குச் சென்றாள் வைதேகி. 'விஸ்வநாதன் ஸார்! உள்ளே வரலாமா?'' - குரல் கொடுத்ததும் இருமிக் கொண்டிருந்த விஸ்வநாதன் அவசரமாய் எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டே குரல்கொடுத்தார்.

''வாம்மா வைதேகி. என்ன விஷயம்?''

''ஏன் சார். விஷயம் இருந்தாத்தான் வரணுமா. உங்களைப் பார்க்க வரக் கூடாதா?'' - என்றவாறே அவரை நோட்டமிட்டாள்.

வற்றிய தேகம். நெஞ்சின் எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. கன்னங்கள் ஒட்டிப்போயிருக்க, கண்கள் குழிக்குள் கிடந்தன. முள்முள்ளாய் தாடி கலைந்த தலை. அறைமுழுக்க சளி வாடை. இரும்பு டப்பாவில் சளியை துப்பி மூடிவைத்திருந்தார்.

''நீ எல்லாம் இங்க வரக்கூடாதும்மா. இந்த நாத்தமும் சளியும் எனக்கு பழகிப்போச்சு. இதையெல்லாம் பார்த்தா உனக்கு தண்ணிகூட குடிக்க மனசுவராதும்மா. அதோட இது தொத்து நோய். அதான் நானே வெளியே வராம இருக்கேன். நீ ஏம்மா வந்தே.''

''பரவால்ல சார். உங்களால பேச முடியுமா? நான் கூட நீங்க ஊமையோன்னு நினைச்சேன்'' - என்றவாறு சிரித்தவளை கூர்மையாய் உற்றுப்பார்த்தார். எங்கோ பார்த்த முகம். வெகுநாள் பழகிய உணர்வு. ஏதோ இனம் புரியாத உணர்ச்சி உடல் முழுக்க ஓடியது. எங்கு பார்த்திருக்கிறோம். இந்த சிரிப்பும் இந்த முகமும் வெகு பரிட்சயமாய்



தோன்றுகிறதே.

''என்ன சார் அப்படிப் பாக்கிறீங்க!''

''இல்லம்மா! உன்னை எங்கோ பார்த்த மாதிரி ஒரு ஞாபகம். எங்கேன்னு தான் நினைவில்ல.''

''ஏன் சார். இங்கேயே தானே கிட்டதட்ட ஏழெட்டுமாசமா நடமாடுறேன். பிறகெப்படி எங்கேயோ பார்த்த மாதிரி தோணும்.''

''இல்லம்மா! இன்னிக்குத் தானே உன்னை முதல் முதலா பக்கத்தில பார்க்கிறேன். அதான் கேட்கிறேன். எங்கே பார்த்திருக்கிறேன்?'' - யோசனையாய் தாடையை சொறிந்தார்.

''சான்ஸே இல்ல சார். இது தாம்பரம் குரோம்பேட்டை. நான் இருந்தது பெரம்பூர்ல ஒரு சந்துல. பெரம்பூரைத் தாண்டி இதுவரை நான் வந்ததே இல்லை. ஒருவேளை நீங்க இங்கவந்து சேர்றதுக்கு முன்னால பெரம்பூர் பக்கம் வந்திருந்தா பார்த்திருக்கலாம். ஆனா அது எப்படி இவ்ளோ தெளிவா ஞாபகம் இருக்கும்?''

''என்ன? எந்த ஊர் சொன்னாய்? பெரம்பூரா?'' - கேட்கும் போதே வாய் உலர்ந்து போக இரும ஆரம்பித்தார். இருமல் ஒலி கொடூரமாய் ஒலித்து அந்த அறையே அதிர்ந்தது. பதறியவாறே அவரை நெருங்கினாள்.

''என்ன சார்? தண்ணி தரட்டுமா? மாத்திரை ஏதும் வேணுமா?''

''ஏம்மா பெரம்பூர்ல எந்த இடத்தில இருந்தே''

''அழகிரிசாமி தெருவில ஒரு ஓட்டுவீட்ல இருந்தோம். ஏன் சார் அதைக் கேட்கிறீங்க?''

''இ... இல்ல... சும்மாதான். உங்க அப்பா யாரு? என்ன பண்றார்?'' - மூச்சுவாங்க அவர் கேட்டதும் வைதேகியின் முகம் கறுத்தது. ''நான் குழந்தையா இருக்கும்போதே செத்துட்டார்'' - என்றாள் மரத்த குரலில்.

இந்தக் குரல்... இந்த முகம்... ஐயோ! இது என் மனைவியின் முகம். அப்படியானால் இந்த குழந்தை என் மகளா? அநாதையாய் விட்டுவந்த என் குழந்தையா இது! இருமியதில் மார்பு வலிக்க அதை நீவிக்கொண்டே கேட்டார்.

''ஏம்மா! உங்க அம்மா பேர் என்ன?''

''அதெல்லாம் எதுக்கு சார்?'' ''தயவுசெய்து சொல்லம்மா. உன்னைப் பார்த்தால் உன் அம்மாவையே நேரில் பார்த்ததுபோல

இருக்கிறதே. அதனால்தான் கேட்கிறேன். சொல்லம்மா''

ஒருவேளை அம்மா வழி உறவாக இருக்குமோ. இல்லையென்றால் இத்தனை தெளிவாய் முகத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்க முடியாதே. அம்மா இறந்தது கூட தெரியாத உறவாக இருக்குமோ.

''என் அம்மா பெயர் வைத்தீஸ்வரி'' - என்ற அவளது பதிலில் ஆடிப்போனார் விஸ்வநாதன். உடல் முழுதும் நடுங்க தொப்பென தரையில் விழுந்தார். பதறி ஓடிச்சென்று அவரைத் தாங்கிப்பிடித்து கைத்தாங்கலாக அவரை கட்டிலில் வந்து அமரவைத்தாள்.

''என்ன சார் ஆச்சு. ஹாஸ்பிடல் போலாமா? உடம்புக்கு ரொம்ப முடியலையா. பாலாவைக் கூப்பிடட்டுமா?''

''வேண்டாம்மா. இனி இந்தக் கட்டை வாழ்ந்து என்ன பயன்? செய்த பாவத்தைத் தொலைக்கவேண்டாமா? சாதாரணமா பாவத்தையா செய்திருக்கிறேன். இப்பெல்லாம் செய்தபாவத்திற்கு கண் முன்னே கூலி கிடைத்து வருகிறதம்மா. நான் பாவி. நான் பாவி'' - முகத்தில் அறைந்து கொண்டு அவர் அழ பதறித் தடுத்தாள் வைதேகி.

''ஏன் சார். நீங்க என்ன பாவம் பண்ணீங்க. ப்ளீஸ் அழாதீங்க சார். இருமல் அதிகமாகும்.''

''ஆகட்டும்மா. இருமி இருமியே செத்துத் தொலைக்கிறேன். உடம்பில திமிர் இருந்தவரை போட்ட ஆட்டத்திற்கெல்லாம் சேர்த்துத்தான் இப்படி அடங்கிக் கேட்பாரற்றுக் கிடக்கிறேன். அன்று உன்னையும் உன் அம்மாவையும் நிர்கதியாய் விட்டேனே. இன்று அதற்கான தண்டனையை இப்படி அநாதையாய்க் கிடந்து அனுபவிக்கிறேனம்மா. உன் அம்மா என்னை மன்னிப்பாளா? என்னைப் பார்க்க வருவாளா? உன் அம்மா எப்படி இருக்கிறாள்? நன்றாக இருக்கிறாளா? அவள் உத்தமி. புண்ணியவதி. நன்றாகத்தான் இருப்பாள். நான்தான் பாவி. அதனால்தான் இப்படி சீக்காளியாய் அனைவராலும் ஒதுக்கப்பட்டு அநாதையாய் என் கடைசிநாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். வைத்தீஸ்வரி இப்போது எங்கே இருக்கிறாள்? சொல்லம்மா?''

அவரின் பரிதவிப்பும் பேச்சும் எதையோ உணர்த்த மெல்ல எழுந்து அவரைவிட்டு விலகினாள். ''மொதல்ல நீங்க யார் சார்? அதைச் சொல்லுங்க?'' - என்றாள் மிடுக்காய். இதுவரை இருந்த பதட்டமும் இரக்கமும் காணாமல் போயிருந்தது.

''நான்... நான்'' - விசுவநாதன் தடுமாறினார். என்னவென்று

சொல்வது. தந்தை இறந்துவிட்டான் என்றவளிடம் இல்லையம்மா நான்தான் உன் தந்தை சிறுவயதில் உங்களை அநாதையாய் விட்டுவிட்டு இன்னொருத்தியுடன் ஓடிப்போனவன் என்றா சொல்லமுடியும்? முகத்தில் காறி உமிழ மாட்டாளா? பெற்ற பெண்ணை கண்ணெதிரே கண்டும் கொஞ்சமுடியவில்லையே. அவர் தடுமாறிக் கொண்டிருந்த போதே வெளியே பேச்சுக்குரல் கேட்டது.

''பத்மாவதி என் தங்கை தான் சார். அவ மூலமாத்தான் வைதேகியை இங்கே வேலைக்கு அனுப்பினேன். பார்த்து ரொம்ப நாளாயிற்று. வந்து பார்க்க நேரமே இல்லை. இன்றுதான் தங்கை வீட்டிற்கு வந்தேன். அப்படியே அவளைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். எப்படி இருக்கிறாள் சார்?'' - என்ற மாமாவின் குரல் கேட்டது.

''அருமையாய் இருக்கிறாள். நல்லபெண். எங்க இல்லத்தையே தலைகீழாக மாற்றிவிட்டாள். இப்போ இங்கே அவதான் நிர்வாகி. நான் சும்மா ஓய்வில்தான் இருக்கிறேன். என்னவெல்லாம் செய்கிறாள் தெரியுமா அவள். அவளை எங்களிடம் அனுப்பியதற்கு உங்களுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்'' - பெருமையாய் ஒலித்தது ராமமூர்த்தியின் குரல்.

''நான்தான் சார் உங்களுக்கு நன்றி சொல்லணும். தகப்பன் இல்லாம வளர்ந்த குழந்தை தாயையும் இழந்து தவிச்சு நின்னப்ப ஒரு மாமனா என்னால அதை என் வீட்டுக்கு கூட்டிட்டு போக முடியல்ல. இங்க அனுப்பிட்டாலும் என் மனசெல்லாம் பாரமாத்தான் இருந்தது. அவ நல்லா இருக்கான்னு நீங்க சொன்னதும் தான் நிம்மதியாச்சு. இப்ப எங்கே சார் இருக்கா?''

''இதோ! அந்த அறையில விஸ்வநாதன்னு ஒருத்தர் இருக்கார். அவரைப் பார்க்கத்தான் வந்தா. ஒரு நிமிஷம் கூட ஓய்வெடுக்க மாட்டா அவ்வளவு சுறுசுறுப்பு. அம்மா வைதேகி. உன்னைப் பார்க்க யார் வந்திருக்காங்க பாரு'' - எனக் குரல்கொடுத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தார். கூடவே பசுபதியும் நுழைய முகம் மலர வரவேற்றாள்.

''மாமா! வாங்க மாமா? எப்படி இருக்கீங்க மாமா?''

''ம். இருக்கோம்மா. நீ நல்லா இருக்கியாம்மா. இந்த இடம் உனக்கு பிடிச்சிருக்காம்மா.'' - உண்மையான அன்போடு கேட்டார் பசுபதி.

''ரொம்பப் பிடிச்சிருக்கு மாமா. இதை என் சொந்த வீடாத்தான் நினைக்கிறேன். சந்தோஷமா இருக்கேன் மாமா. வாங்க வெளியே போய் பேசலாம்.'' - என்றவாறே வெளியே வந்தாள்.



''பசுபதி! பசுபதி தானே. மாப்பிள்ளே! நான் விஸ்வநாதன். மாப்பிள்ளே என்னைத் தெரியவில்லையா? நான்தான் கங்காவின் அண்ணன்'' - என குரல் கொடுத்துக் கொண்டே எழுந்து வந்த விஸ்வநாதன் தடுமாறி விழ,

''மச்சான் நீங்களா? நீங்க எப்படி இங்கே.'' - என்றவாறு ஓடினார் பசுபதி. வைதேகிக்கு எல்லாம் புரிந்துவிட முகம்முழுக்க வெறுப்போடு விடுவிடுவென அந்த இடத்தைவிட்டு வெளியேறி தன் அறையை நோக்கிச் சென்றாள்.

எதிரில் வந்த பாலாஜி அழைத்த போதும் நிற்கவே இல்லை. அவளின் கடுத்தமுகம் எதையோ உணர்த்த அவசரமாய் விசுவநாதன் அறையை நோக்கிச் சென்றான். விஸ்வநாதன் மயங்கிச் சரிந்து கொண்டிருந்தார்.

## [.....9.....]

தாயில் சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை!

''முடியாது பாலா! என்னால அவரைப் பார்க்க போக முடியாது. என்னை வற்புறுத்தாதீங்க ப்ளீஸ்''

''இப்படிச் சொன்னா எப்படிம்மா? ஆயிரம் இருந்தாலும் அவர் உன் அப்பா. உயிருக்கு போராடிட்டு இருக்கார். ஒருமுறை உன்னைப் பார்த்து மன்னிப்பு கேட்கணும்னு விரும்புறார். நீ கண்டிப்பாக போக வேண்டும்? ப்ளீஸ் எனக்காக வாம்மா'' - பாலாஜி கெஞ்ச வைதேகியின் கோபம் அதிகரித்தது.

''மன்னிப்பா? மன்னிப்புக் கேட்டா எல்லாம் சரியாகிடுமா? இவர் மன்னிப்பு கேட்டதும் என் அம்மா பட்ட கஷ்டமெல்லாம் எனக்கு மறந்து போயிடுமா? என் அம்மா எனக்குத் திரும்பக் கிடைச்சிடுவாங்களா? சொல்லுங்க பாலா சொல்லுங்க.

சாகவேண்டிய வயதா என் அம்மாவிற்கு. பசியோடும் பட்டினியோடும் போராடி என்னை வளர்த்தாங்க பாலா. பச்சை உடம்புக்காரிய அப்படியே விட்டுட்டு இன்னொருத்தியோட முந்தானையை பிடிச்சிட்டு ஓடுனவன் பாலா இந்த ஆள். யாருக்கு வேண்டும் இவர் மன்னிப்பு. என் அம்மா

எத்தனை கஷ்டத்தை தாங்கினாங்க தெரியுமா? விடிய விடிய ஒரு ஓட்டைத் தையல் மிஷின்ல உட்கார்ந்து முதுகுஒடிய கால்நோக துணிதைத்து எங்க வயித்தைக் கழுவினோம். அது தெரியுமா உங்களுக்கு?

எத்தனை நாள் இரவு இருக்கிற சோத்தை எனக்கு போட்டுட்டு வெறும் தண்ணிய மட்டும் குடிச்சிட்டு படுத்திருப்பாங்க எங்க அம்மா. அப்போ என்ன பண்ணிட்டு இருந்தான் இந்த ஆள். இப்போ ஆடி அடங்கிப் போன பிறகு ஞானதோயம் பிறந்து விட்டதாமா? இப்பக்கூட இவரு இப்படி அநாதையா கிடக்கலன்னா என்னையோ என் அம்மாவையோ நினைச்சுப் பார்த்திருப்பாரா? சொல்லுங்க.

சாகப்போற காலத்தில என்ன பாசம பந்தம் வெண்டிக்கிடக்கு. இந்த ஆள் ஓடிப்போனபோது எங்க அம்மாவுக்கு இருபத்தி ரெண்டு வயசு. அந்த வயசுல எத்தனை ஓநாய்களோட வக்கிர பார்வையை பேச்சை பார்த்துக் கேட்டு கூனிக்குறுகிப் போயிருப்பாங்க. மானத்தோட வாழ எத்தனை போராடியிருப்பாங்க. அதையெல்லாம் பார்த்து வளர்ந்தவ பாலா. என்னால... என்னால எப்படி மறக்க முடியும்?'' - பொங்கிய கண்ணீரை வழித்து எறிந்தாள்.

''என்னைப் பொறுத்தவரை இந்த ஆள் எப்பவோ செத்துட்டான். செத்தவனை திரும்பவும் பார்க்க வரமாட்டேன். அவன் செத்தாக்கூட யாரும் எங்கிட்ட சொல்ல வேண்டாம். அவன் பொணத்தைக் கூட நான் பார்க்க மாட்டேன். அப்படிப் பார்த்தா என் அம்மாவோட ஆன்மா கூட என்னை மன்னிக்காது. போய் அவனிடம் சொல்லுங்கள். வைதேகியின் அப்பா எப்போதோ இறந்துவிட்டாராம் என்று'' - மூச்சுவாங்க நிறுத்தினாள்.

''நீ சொல்வது எல்லாமே நியாயம்தான். ஆனாலும்...''

''வேண்டாம் பாலா! ஏற்கனவே என் மனம் ரணமாகிப்போச்சு. இதில நீங்களும் எதையாவது பேசி என் வேதனையை அதிகமாக்காதீங்க. என்னோ என் வாழ்க்கையில கிடைச்ச ஒரே ஆறுதல் நீங்கதான்னு நினைச்சிட்டு இருக்கேன். அதையும் இல்லாமப் பண்ணிடாதீங்க'' - கண்ணீரோடு கைக்கூப்பியவளை அணைத்துக் கொண்டான் பாலாஜி.

''வேண்டாம்மா. வேண்டாம். நீ போகவேண்டாம். அவரைப் பார்க்க வேண்டாம். என் கண்மணி அழாதே. நான் இருக்கிறேன் உனக்கு. அவர் செய்த பாவத்தை அவர் தொலைக்கட்டும். நீ ஏன் அதற்காக அழவேண்டும்.

ஸாரிம்மா! நான் உன்னை கூப்பிட்டிருக்கக் கூடாது. உன் மனவேதனை புரியாமல் பேசிவிட்டேன். நீ அழாதே. அவரை மறந்துவிடு. இனி



அவரைப்பற்றி யாரும் எதுவும் பேசமாட்டோம். மறந்துடு. கண்ணைத் துடைச்சுக்க. உன் வேலையைப் பாரு. அப்பா! ஹாஸ்பிடல்ல இருக்காங்க. நான் போய் சொல்லிட்டு வர்றேன்'' - என்றவாறு அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''ஸாரி பாலா! நீங்க சொன்னதை என்னால செய்ய முடியல்ல''

''இட்ஸ் ஓ.கே.ம்மா. அந்தப் பேச்சை விட்டுடு. நான் ஹாஸ்பிடலுக்கு போயிட்டு வர்றேன்'' - என்றவாறு விலகினான்.

''அதுக்கு அவசியமே இல்லப்பா.'' - என்றவாறு வந்தார் ராமமூர்த்தி.

''ஏம்ப்பா? என்ன ஆச்சு?''

''எல்லாமே முடிஞ்சு போச்சுப்பா. பலமான அதிர்ச்சி தாக்கியதால சிவியர் அட்டாக். போயிட்டார். இத்தனை காலம் சொந்தம் கொண்டாடாத உறவுகள் தங்கள் கௌரவத்தை விட்டுக் கொடுக்காம பாடியை வாங்கிட்டு போயிட்டாங்க. எங்கே மூத்ததாரத்துப் பொண்ணு கொள்ளிவெச்சிடுவாளோன்னு அந்த அம்மாவுக்கு பயம். எப்படியோ நம்ம பொண்ணு இனி எதை நினைச்சும் கவலைப்படவேண்டாம். அம்மா வைதேகி! சாப்பிட்டியாம்மா?'' - என்றவாறு அவளது முகத்தை ஆராய்ந்தார்.

அவளது முகத்தில் துளியும் வருத்தம் இல்லை. அசாத்திய அமைதி குடிகொண்டிருந்தது. தன்னையும் தன் தாயையும் தவிக்கவிட்டவன் நொந்துபோய் மரித்துவிட்டான் என்ற நிம்மதியாகவும் இருக்கலாம். எப்படியோ இனி இந்தப் பெண்ணின் மனம் எந்தக்கலக்கமும் இல்லாமல் நிம்மதியாய் இருக்கட்டும். பெருமூச்சு விட்டார் ராமமூர்த்தி.

''இனிமேல் தான் சாப்பிடணும். வாங்க சார் சாப்பிடலாம்'' - என்றாள் வைதேகி.

''நீ எடுத்துவையும்மா. நான் குளிச்சிட்டு வந்துடுறேன்'' - என்றவாறு குளியலறையை நோக்கிச் சென்றார்.

''பாலா! நீங்களும் வாங்க சாப்பிடலாம்''

''ஸாரி வைதேகி. உன்னை வீணாய் அழவைத்து விட்டேன்''

''ப்ளீஸ் பாலா. வேறு பேசலாமே. சாம்பாரும் ரசமும் இருக்கு. அப்பளம் பொரிச்சிடவா. பீன்ஸ் பொரியல் கொஞ்சம் இருக்கு''

''நீ எது தந்தாலும் சரி. அப்பா வரட்டும். சேர்ந்தே சாப்பிடலாம். ஓ.கே. வா'' - என்றபோது ''ஸார்! உள்ளே வரலாமா?'' - ஒரு குரல் கேட்டது.

''யாரது?'' - என்றவாறு திரும்பியவன் வியந்தான். ''அட! வாசுதேவன் சார். வாங்க. என்ன இவ்ளோ தூரம். உட்காருங்க'' - நாற்காலியைக் காட்டினான்.

''தேங்க்ஸ் தம்பி. ராமமூர்த்தி சார் இல்லையா? அவரைப் பார்த்துக் கொஞ்சம் பேசனும்'' - என்றவாறு அமர்ந்தார்.

''அப்பா குளிச்சிட்டு இருக்காங்க. இப்ப வந்திடுவாங்க. என்ன சார் விஷயம்?''

''விஷயம் இருக்கு. அவரும் வந்திடட்டுமே. எல்லாரும் எப்படி இருக்கீங்கப்பா. ஆள் நடமாட்டம் கம்மியா தெரியுதே'' - சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார் வாசுதேவன்.

''ஆமா சார்! இப்போ பாதி பேரு அவங்க வீட்டுக்கு போயிட்டாங்க. சந்தோஷமா இருக்காங்க.''

''அட! பரவால்லயே. ஆனா உங்க வருமானம் குறையுமே''

''சேச்சே! இதுல இருந்து வர்ற வருமானத்தை வெச்சி நாங்க சாப்பிடல சார். நான் சம்பாதிக்கிறேன் . அப்பா பென்ஷன் வருது. அதைவெச்சுத்தான் எல்லாருமே சாப்பிடுறோம். பிள்ளைங்க கட்டுறபணம் பெரியவங்களோட மெடிசன் செலவுக்குத்தான் சரியாப் போயிடும். அது எங்களுக்கு தேவைப்படாது. யூஸ் பண்ணவும் மாட்டோம்''

''நான் அந்த அர்த்தத்தில் சொல்லலைப்பா. ஆட்கள் குறைஞ்சா இதை நடத்த கஷ்டப்படுவீங்களேன்னு தான் கேட்டேன்''

''இல்ல சார். எல்லாப் பெற்றோர்களும் அவங்க வீட்ல அவங்க உறவுகளோட வாழனும்னுதான் நாங்களும் ஆசைப்படுறோம். கூடுமானவரை பேசி புரியவெச்சி அனுப்பிட்டு இருக்கோம். மீச்சம் உள்ளவங்களும் வீட்டுக்கு போயிட்டா நாங்க சந்தோஷமா அனுப்பிடுவோம். அதுதான் எங்களுக்கு உண்மையான சந்தோஷம்''

''கேட்கவே சந்தோஷமா இருக்குப்பா. இந்தமாதிரி முதியோர் இல்லத்தை பணத்துக்காக நடத்துறதை பார்த்து அப்படியே உங்களையும் நினைச்சிட்டேன். ஸாரிப்பா. நானும் கொஞ்சம் யோசிச்சிருந்தா என அம்மாவை இழந்திருக்க மாட்டேன். கடைசி காலம் என் அப்பா கட்டின வீட்லயே வாழ்ந்து நிம்மதியா உயிர்போயிருக்கும். என் அவசரத்தாலும் ஆத்திரத்தாலும் என் தாயோட இறுதிக்காரியத்தைக் கூட செய்யமுடியாத துர்பாக்கியசாலியா ஆகிட்டேன். படுத்தா நிம்மதியா தூங்கமுடியலப்பா. என் அம்மாவோட முகம் வந்து அழுத கண்ணீரோட தெரியுது. என்னை



அநாதையா விட்டுட்டு போயிட்டியேன்னு கேட்கிறமாதிரி இருக்குப்பா. என் சந்தோஷம், உற்சாகம், நிம்மதி எல்லாமே போச்சு'' - கண்ணோரம் நீர்கசிய பெருமூச்சு விட்டார்.

வைதேகியும் பாலாஜியும் என்ன பேசுவது என்று புரியாமல் நிற்க, தலையைத் துவட்டிக் கொண்டே வந்த ராமமூர்த்தி, ''அடடே! வாங்க வாசுதேவன். என்ன இந்தப்பக்கம். உட்காருங்க. உட்காருங்க'' - என்றவாறு அவர் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''வந்து... உங்களைத்தான் சார் பார்க்கவந்தேன்'' ''சொல்லுங்க... என்ன தயக்கம்? என்ன விஷயம் வாசுதேவன்?''

''சார்! நான் உங்க இல்லத்துக்கு நன்கொடை கொடுக்கலாம்னு வந்தேன். இந்தாங்க சார்'' - என்றவாறு ஒருசெக்கை நீட்டினார். பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலை அது. அதைக் கையில் வாங்காமலே, ''என்ன இது ஏன் எங்களுக்கு தருகிறீர்கள்?'' என்றார் ராமமூர்த்தி.

''இது என் மனத் திருப்திக்காக. தயவுசெய்து வாங்கிக்கங்க. இதைவெச்சி கான்கிரீட் கட்டிடம் கட்டிக்கங்க. வயதானவர்களுக்கு கட்டில் மெத்தை எல்லாம் வாங்கிப்போடுங்க. அவர்களுக்கு தேவைப்படும் அத்தனை செலவுகளையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பாலாஜியின் முகம் அலட்சியமாய்க் கோணியது. ''ஏன் தம்பி பெத்தவள கூடவெச்சு சாப்பாடு போட முடியல்ல. இப்ப பெரிசா உதவி பண்ண வந்துட்டான்னு நினைக்கிறியா?''

''சேச்சே! அப்படியெல்லாம் இல்ல சார்''

''அப்படி நினைத்தாலும் அது தப்பில்லை தம்பி. நான் செய்த தவறுக்கு ஒரு சின்ன பிராய்சித்தம் இது. இதை நீங்க ஏத்துக்கனும்''

''அப்பா! நீங்களே சொல்லிடுங்க'' - என அவன் சொன்னதும் ராமமூர்த்தி செருமிக் கொண்டார். நான் இதை மறுக்கிறேன்னு வறுத்தப்படாதீங்க. நாங்கள் தொடர்ந்து இந்த இல்லத்தை நடத்துறதா இல்லை. ஏன்னா இப்படி ஒரு இல்லம் இருக்கிறதினால் தான் உங்களை மாதிரி ஆட்கள் தங்கள் வீட்டுப் பெரியவங்களை இங்கவந்து விட்டுட்டு போறதா எம்மகனும் எம்மருமகப் பொண்ணும் நினைக்கிறாங்க.

உறவுன்னு சொல்லிக்க யாருமே இல்லாதவங்க நாலஞ்சு பேர் இருக்காங்க. அவங்க மட்டும் எங்களுடைய உறவா கடைசி வரை எங்ககூடவே இருப்பாங்க. புதுசா யாரையும் சேர்க்கிற ஐடியா இல்லை. உங்கள் உதவிக்கு நன்றி. ஏழையின் சிரிப்பில் உங்கள் மனபாரம் தீரட்டும்.

உங்கள அம்மாவை ஆன்மாவும் குளிரும். என்ன சார் சொல்றீங்க?'' - என நிறுத்தினார் ராமமூர்த்தி.

''நல்லது. நான் சொன்னதை நீங்க தப்பா எடுத்துக்கலையே?''

''இல்ல சார். இப்பெல்லாம் நல்லதை யார் சொன்னாலும் ஏத்துக்கிறேன். என் அம்மா பேச்சைத்தான் கேட்காம தப்பு பண்ணிட்டேன். சரி சார், நான் வர்றேன்'' - கண்களில் ஈரத்தோடு அவர் விடைபெற்றுச் செல்ல பெருமூச்சோடு எழுந்தார் ராமமூர்த்தி.

''ஒரு தாயோட மரணம் மனுஷனை எப்படியெல்லாம் மாத்திடுது பார்த்தியா. இவரோட அலட்டல் எல்லாம் எங்கே போச்சுன்னே தெரியல்ல. அடியோடு மாறிட்டாரே''

''அப்பா அதெல்லாம் விடுங்க. நீங்க அவர்கிட்ட சொன்னது உண்மையா? யார் அது? எனக்கு தெரியாமல்?''

ஓ! அதுவா. எல்லாம் நமக்குத் தெரிஞ்ச பொண்ணுதான்டா. உனக்கும் பிடிக்கும். அந்தப் பொண்ணை பார்க்கிற எல்லாருக்குமே அவள பிடிக்கும். அவளையே உனக்கு கட்டிவெச்சிடலாம்னு இன்னிக்குத்தான் பேசி முடிச்சேன். சீக்கிரமே கல்யாணம்''

வைதேகி எழுந்து அறைக்குள் சென்று தொண்டை வரை வந்த விம்மலை அடக்கிக் கொண்டாள். இதயத்தை பிளந்தாற்போல் வலிக்க கண்களில் நீர் தளும்பியது.

''நீங்களா பார்த்து நீங்களே பேசிமுடிச்சா நான் தாலி கட்டணுமா. என்னால் முடியாது. நீங்களே கட்டிக்கொள்ளுங்கள்.'' - பாலாஜியின் உரத்த குரல் கேட்டது.

''படவா ராஸ்கல்! அவ என் பொண்ணு மாதிரிடா. இப்படியெல்லாம் பேசாதே''

''அப்போ மகளா தத்து எடுத்துக்கங்க. நான் என் தங்கையா ஏத்துகிட்டு அவளுக்கு சேர்த்து உழைக்கிறேன்''

''அவசரப்படாதே. அந்த பொண்ணை நான் கூப்பிடுறேன். பார்த்திட்டு உன் முடிவைச் சொல்லு.''

''அம்மா வைதேகி! கொஞ்சம் வெளியே வாம்மா''- என குரல் கொடுத்தார்.

திடுக்கிட்டு கண்களை துடைத்துக் கொண்டு முடிந்தவரை முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு வெளியே வந்தாள். தன் அருகில் அவளை நிறுத்தி, ''இதுதான்டா பொண்ணு. மனைவியா ஏத்துக்கிறியா? இல்ல தங்கை...'' - ஓடிவந்து அவரது வாயை மூடினான்.

''ஏத்துக்கிறேப்பா. என் மனைவியா காலம்பூர வெச்சுக்காப்பாத்துறேன். ஸாரிப்பா. நான் வேற யாரோன்னு நினைச்சுத்தான்...''

''ம். அவசரம். என்னைக் குற்றம் சொல்லிக்கொண்டு என்னை விட உனக்குத்தான் எல்லாவற்றிலும் அவசரம். என்னம்மா! உனக்கு என் மகனை பிடித்திருக்கிறதா?'' - என்றார் வைதேகியிடம்.

பேச்சற்று திணறியவள் கண்களில் துளிர்த்த நீரோடு, பேச முடியாமல் ''மாமா'' - என்றவாறு அவர் காலில் விழுந்து வணங்கினாள்.

''எழுந்திரும்மா, நல்லாஇரு'' - தோள்பற்றி எழுப்பினார்.

''அப்பா! நானே பொறுமையா சொல்லலாம்னு இருந்தேன். நீங்க எப்படி கண்டுபிடிச்சீங்க''

''டேய் நாங்க எப்பவோ கண்டுபிடிச்சிட்டோம். ஆனா கல்யாணப் பேச்சை எப்படி யார்கிட்ட பேசலாம்னுதான் யோசனை செய்திட்டு இருந்தேன். காலையில வைதேகியோட மாமா வந்தாரே. அவர் ஒன்னும் சும்மா வரல்ல. அவர் சார்பில ஒரு மாப்பிள்ளை பார்த்துட்டு வைதேகியோட சம்மதம் கேட்கலாம்னு வந்திருக்கிறாரு.''

''என்ன?'' - துல்லியமாய் அதிர்ந்தாள் வைதேகி.

தனக்கென்று யாருமே இல்லை என்றுதானே நினைத்திருந்தாள். அத்தையின் கணவரான போதும் மாமா ஒரு தந்தையாய் நின்று எனக்கு மாப்பிள்ளை பார்த்தாரா என்று நினைக்கையிலேயே நெஞ்சு விம்மியது.

## (.....10.....)

**அன்னையைப் போல் – ஒரு**
**தெய்வமில்லை – அவள் அடி**
**தொழ மறுப்பவர் மனிதரில்லை**
**மண்ணில் மனிதரில்லை!**

இயற்கை ஒரு அதிசயம்தான். இலையுதிர் காலத்தில் அனைத்து இலைகளையும் உதிர்த்துவிட்டு வசந்தகாலத்தில் புதிய இலைகளோடு பூக்களுமாய் பூத்துக் குலுங்குவதும் கொள்ளை அழகுதான். இயற்கையைப் போலவே நாமும் இருந்துவிட்டால்... பழைய துன்பங்களையெல்லாம் உதிர்த்துவிட்டு இன்று கிடைத்த உறவுகளோடு சந்தோஷமாய் வாழ்ந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் பழைய நினைவுகளை அப்படி

கலைமாய் உடைந்து விடமுடியுமா? அதுவும் அன்னை சிந்திய கண்ணீரை! பட்ட துன்பங்களை!

எல்லா உறவுகளும் ஒதுங்கிவிட்டாலும் பசுபதி மாமா மட்டும் அக்கறையோடு தனக்கும் ஒரு வாழ்க்கை அமைத்துக் கொடுக்கவந்தது நிம்மதியைத் தந்தது.

''பையன் ஏதோ கார்மெண்ட்ஸ்ல சூபர்வைஸரா இருக்காராம்மா, அப்பா இல்லையாம். அம்மாவும் ரெண்டு அக்காவும் இருக்காங்களாம். பையன் நல்லபையனாம். அதான் உங்கிட்ட பேசலாம்னு வந்திருக்கார், அந்த நேரம் இப்படி அசம்பாவிதம் நடந்துபோச்சு. ஹாஸ்பிடல்ல வெச்சு எங்கிட்ட சொன்னார்.

எனக்கு ஏற்கனவே உன்னை பாலாஜிக்கு முடிக்கணும்னு எண்ணம் இருக்கிறதா அவர்கிட்டச் சொன்னேன். அவரும் சந்தோஷமா ஒப்புக்கிட்டார். திருமணம் முடிவானதும் தெரிவிக்கச் சொல்லி போன் நம்பர் தந்துட்டு போனார். ஏம்மா! உங்க மாமாகிட்ட நான் சொன்னதுல உனக்கு சம்மதம்தானே. ஏன்னா உங்கிட்ட கேட்காம சொல்லிட்டேனேன்னு எனக்கு கொஞ்சம் உறுத்தலாவே இருக்கு'' - என்றார் ராமமூர்த்தி.

''இல்ல சார்... மாமாவே எங்கிட்ட கேட்டிருந்தாலும் நான் இதைத்தான் சொல்லியிருப்பேன். தேங்க்ஸ் மாமா.''

''சரி! கல்யாணத்தை எப்போ வெச்சுக்கலாம்'' - என்ற கேள்விக்கு பாலாஜிதான் பதிலளித்தான்.

''அதற்கு இப்போ எந்த அவசரமும் இல்லப்பா. மிச்சம் இருக்கிற அஞ்சுபேரும் நல்லபடியா அவங்க வீட்டுக்கு போகட்டும். அதற்கப்புறம் பார்த்துக்கலாம். அதுதான் எங்க ரெண்டுபேர் எண்ணமும்''

''ம். சின்னதுகளே இவ்வளவு தெளிவா இருக்கும் போது எனக்கு என்னப்பா அவசரம். எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்னு உங்களுக்குத் தோணுதோ அப்போ எங்கிட்டச் சொல்லுங்க. நான் நடத்தி வைக்கிறேன்'' - என்றார் ராமமூர்த்தி சிரிப்போடு.

நேற்றைய நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தவள், கேட்டுக்கு வெளியே ஏதோ நிழலாட எழுந்து வெளியே வந்தாள். ஆச்சர்யமாய் மலர்ந்தாள். சுந்தரிபாட்டிதான் வெளியே நின்று கேட்டை எப்படி திறப்பது என்று புரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தாள்.

''பாட்டி! நீங்களா? வாங்கபாட்டி, எப்படி இருக்கீங்க ஐயோ எவ்ளோ நாளாச்சு. உங்களைப் பார்த்து'' -ஓடிச்சென்று கேட்டைத் திறந்து பாட்டியைக் கட்டிக் கொண்டாள்.



''என்ன கண்ணு! நல்லா இருக்கியாம்மா. உன்னைப்பார்க்க ரொம்ப ஆசையா இருந்ததும்மா. பஸ்லேயோ ரெயிலேயோ ஏற முடியல்ல, அதான் இத்தினி நாளா வரல்ல. நீ எப்படி இருக்க'' - ஆசையோடு வைதேகியிடம் முகம் வருடினார் பாட்டி.

''இப்ப எப்படி பாட்டி வந்தீங்க?''

''ஆட்டோவிலயே வந்திட்டேம்மா. தெரிஞ்சபையதான், முன்னூரு ரூபா கேட்டான். சரின்னு வந்திட்டேன். இந்த இடம் மனுஷா எல்லாம் பிடிச்சிருக்கா கண்ணு.''

''ரொம்ப பிடிச்சிருக்கு பாட்டி. உங்க ஞாபகமாத்தான் பாட்டி இருக்கேன்...எல்லாருமே ரொம்ப நல்லவங்க. வாங்கப்பாட்டி என் ரூமுக்கு போகலாம். உங்களைப் பார்த்ததுல எனக்கு ஒண்ணுமே ஓடல்ல. வாங்க. நீங்க உட்காருங்க. நான் காபி எடுத்திட்டு வர்றேன்'' - என பாட்டியை அறையில் உட்காரவைத்து விட்டு வெளியேற, அதற்குள் காபியோடு வந்தாள் தெய்வானை.

''தெய்வாம்மா! நான் காபி கேட்கவே இல்லையே''

''விருந்தாளி வந்திருக்காங்களாமா... பாலய்யா காபி கொண்டுபோய் கொடுன்னாங்க... ஐயா குளிச்சிட்டு இப்ப வருவாங்களாம். நீங்க காபி குடிச்சிட்டு பேசிட்டு இருப்பீங்களாம்'' - என்றவாறு காபி கோப்பையை கொடுத்து விட்டு போனாள்.

மனம் நெகிழ பாட்டியிடம் காபியைக் கொடுத்து விட்டு தனக்கும் ஒன்றை எடுத்து அருந்தினாள். குடித்து முடித்ததும், ''என்ன பாட்டி இவ்ளோ காலையில வந்திருக்கீங்க எதுவும் முக்கியமான விஷயமா?'' - எனக் கேட்டாள்.

''ஆமா கண்ணு! நேத்து உன் மாமனை பார்த்தேன். உனக்கு கல்யாணம் கூடியிருக்கிறதா சொன்னார். அதான் வந்து பார்த்துட்டு போலாம்னு வந்தேன். ஆமா மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்?

''இப்ப வருவார். பார்த்திட்டு நீங்களே சொல்லுங்க'' - என்றாள் வெட்கச் சிரிப்போடு.

''வைதேகி! உள்ளே வரலாமா'' - என்ற குரல் கேட்டதும் அவசரமாய் எழுந்து, ''பாட்டி! இவர்தான் மாப்பிள்ளை. நல்லா பாருங்க'' - என சுந்தரியின் காதில் கிசுகிசுத்து விட்டு,

''வாங்க பாலா. உள்ளே வாங்க'' - என வரவேற்றாள். உள்ளே நுழைந்தவனைக் கண்டதும் சுந்தரிப் பாட்டிக்கு அவனைப் பிடித்துப்

போனது. குளித்து சுத்தமாய் உடையணிந்து நெற்றியில் திருநீறு அணிந்து எளிமையாய் கம்பீரமாய் அழகான சிரிப்போடு நின்றவனை நெட்டி முறித்தாள் பாட்டி.

''கண்ணு! உன் அம்மா உன்னை கைவிடல்ல. ராசாவாட்டம் இந்தப் புள்ளையத் தந்துட்டுத்தான் போயிருக்கா. அமோகமா இருங்கம்மா. இப்பத்தான் மனசு நிறைஞ்சி இருக்கு'' - கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வைதேகி! இவங்க ...'' ''ஓ! சொல்ல மறந்திட்டேனே. பாலா, நான் அடிக்கடி சொல்வேனே சுந்தரிபாட்டி. அது இவங்கதான். இவங்க மட்டும் இல்லேன்னா நானும் என் அம்மாவும் எப்பவோ இல்லாமப் போயிருப்போம். எனக்கு இந்தப்பாட்டி தான் கடவுள்'' - என்றாள் நன்றியோடு.

பாலாஜி கைகூப்பினான். ''வணக்கம் பாட்டி. வைதேகி அடிக்கடி உங்களைப் பத்தி சொல்வாங்க. உங்களைப் பார்க்கனும்னு நினைச்சேன். இன்னிக்குத்தான் முடிஞ்சது. நல்லா இருக்கீங்களா?''

''நல்லா இருக்கேன் ராசா. எம்பேத்தி தங்கம்யா. அது நல்லபடியா வாழனும்யா. நீங்கதான் பார்த்துக்கனும். இந்த வயசிலேயே அது எல்லா கஷ்டத்தையும் பட்டிருச்சு. இனிமேலாவது அது கண்ல தண்ணி வரக்கூடாது.''

''அது என் பொறுப்பு பாட்டி. என் மனைவியை நான் எதற்கும் கலங்கவிட மாட்டேன். கண்ணாய் பார்த்துக் கொள்வேன். என்னை நீங்கள் தாராளமாய் நம்பலாம்.'' - என்றான் பணிவாய்.

''ரொம்ப சந்தோஷம்யா. இது போதும். இதைப் பார்க்கத்தான் ஓடியாந்தேன். அப்புறம்...'' - என்றவாறு பாட்டி தன் இடுப்பில் இருந்த சுருக்குப்பையைத் திறந்து ஒரு சிறிய துணிப்பொட்டலத்தை எடுத்தாள். அதை கவனமாய் பிரித்து வைதேகியிடம் நீட்டினாள்.

''கண்ணு! இந்தா உன் தாய் வீட்டு சீதனம்''

''என்னபாட்டி இது'' - கைகள் நடுங்க அதை வாங்கிப் பார்த்தாள். அதில் செயின், கம்மல், மோதிரம், கொலுசு எல்லாம் இருந்தது. வியப்பாய் பாட்டியை நோக்கினாள்.

''பாட்டி! இதெல்லாம்...''

''உன் அம்மா சம்பாதிச்சு சேர்த்ததும்மா. மொத்தம் ஒன்பது சவரன் இருக்கு. வீட்ல வெக்க பயந்து எங்கிட்ட தந்து வெச்சிருந்தா. இன்னும் கொஞ்சநாள் இருந்தா கூட பத்து சவரன் சேர்த்திருப்பா. அதுக்குள்ள



தான் எமன் கூட்டிட்டு போயிட்டானே.''

கண்ணீர் மளமளவென இறங்க, அந்த நகைகளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள் வைதேகி. ''அம்மா! அம்மா! இத்தனை நகை சேர்த்த பணத்தை வைத்து உனக்கு வைத்தியம் பார்த்திருக்கலாமே. வயிறார சாப்பிட்டு இருக்கலாமே. உங்கள் உயிரைக் கொடுத்து எனக்கு நகை சேர்க்க வேண்டுமா? எனக்கு எதற்கு இது?'' - என்று கதறினாள்.

''அப்படியெல்லாம் சொல்லாதம்மா. நீ பொறந்ததுல இருந்து உன் அம்மா ஒவ்வொரு பைசாவா சேர்த்து வாங்கின நகை. உன் கல்யாணத்தின் போது மொத்தமாய் புரட்ட முடியாதே என்று சேர்த்தாள். இதை அன்றே தந்து இருப்பேன். உன் சித்திக்கும் அத்தைக்கும் தெரிந்தால் இதில் ஒன்றுகூட மிஞ்சியிருக்காது. அதனாலதான் நகை எங்கிட்ட இருப்பதை யார்கிட்டயும் சொல்லலை. நேத்து உன்மாமன் கல்யாணப் பேச்சை சொன்னதும் இதையெல்லாம் எடுத்திட்டு வந்தேன். போட்டுக்கம்மா! இதை நீ போட்டுகிட்டா உன் அம்மா உன் கூடவே இருக்கிற மாதிரி இருக்கும். போட்டுக்கோ'' - என்றாள் பாட்டி.

பாலாஜி மெய்யாகவே வியந்தான். இந்த நகையை செய்து கொடுத்தவர் இப்போது உயிருடன் இல்லை. இந்த விஷயம் யாருக்கும் தெரியவில்லை. இன்றைய மதிப்பில் எப்படியும் இந்த நகை இரண்டு லட்சம் பெறுமே. இந்தப்பாட்டி நினைத்தால் இதை சுலபமாக மறைத்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லையே. உண்மையில் பாட்டி தெய்வம்தான். அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாமல் நேர்மையாகவும் உண்மையாகவும் வாழ்பவர்களிடம் தெய்வம் இருப்பது உண்மைதான்.

இன்னும் இவ்வுலகில் இதுபோல் நல்லவர்கள் வாழ்வதால்தான் மழைபெய்கிறது போலும். மனம் நிறைய அன்போடு பாட்டியின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''பாட்டி! நீங்க ரெண்டுநாளாவது எங்ககூட தங்கிட்டு போங்க வைதேகி ரொம்ப சந்தோஷப்படுவா'' - என்றான்.

''இல்ல ராசா. வீட்ல தாத்தா தனியா இருப்பாங்க. அவங்களை விட்டுட்டு நான் இதுவரை எங்கும் வந்ததில்லை. நான் உடனே போகனும். வரட்டுமா. கல்யாணத்திற்கு தாத்தாவோட வந்து ரெண்டு நாள் தங்குறோம். சரியா கண்ணு.'' - என்றவாறே எழுந்தார் பாட்டி.

''பாட்டி! சாப்பிட்டுப் போங்க. டிபன் ரெடியா இருக்கும்'' - என்றாள் வைதேகி.

"இல்ல கண்ணு. இன்னிக்கு கிருத்திகை. நான் விரதம். மதியம் கோவிலுக்கு போயிட்டு வந்துதான் சாப்பிடுவேன். இன்னொரு நாள் சாப்பிடுறேன். வரட்டும்மா."

"சரி பாட்டி! பாலா! பாட்டிக்கு பஸ்ல ஏறமுடியாது. அதனால"

"வாங்க பாட்டி! நம்ம ஆட்டோவில கொண்டு வந்து விடுறேன். ஒரு நிமிஷம் இருங்க. ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்."

"இருங்க பாலா. அவ்ளோ தூரம் போயிட்டுவர லேட்டாகுமே. டிபன் சாப்பிட்டு போங்க. நான் எடுத்துவைக்கிறேன்."

"இல்ல. வந்து சாப்பிட்டுக்கிறேன். மழை வர்றமாதிரி இருக்கு. முதல்ல பாட்டிய விட்டுட்டு வந்திடுறேன்" - என்றவாறு அவன் சென்றுவிட பாட்டி வைதேகியை நெருங்கினார்.

"கண்ணு! இது தங்கமான புள்ளையாத்தான் தெரியுது. இனிமே எதுக்கும் கலங்காதம்மா. சந்தோஷமா இருங்க. முடிஞ்சா பாட்டிய வந்து பார்த்திட்டு போங்க."

"கண்டிப்பா பாட்டி! நீங்க உங்க உடம்பைப் பார்த்துக்கங்க. கல்யாணத்திற்கு கண்டிப்பா வந்திடனும். தாத்தாவையும் கூட்டிட்டு வாங்க."

"சரிடா கண்ணு. நீயும் நல்லா சாப்பிட்டு உடம்பை தேத்தும்மா. இப்படி இருந்தா எப்படி புள்ளைபெத்து வளர்ப்ப. ம்" - என்றாள் பாட்டி.

அதற்குள் பாலாஜி வந்துவிட பாட்டி விடைபெற்றாள்.

## (.....11.....)

**அம்மா உன் வார்த்தை வேதம்**
**என்றென்னும் மகனும் நான்தானம்மா**
**உலவும் என்கோவில் பேசும் – என்**
**தெய்வம் உலகில் நீதானம்மா – தாயே**
**உன் கண்ணில் துளிநீர் கண்டாலும்**
**விழிகள் தூங்காதம்மா !**

இல்லம் வெறிச்சோடி இருந்தது. தினமும் காலையில எழுந்ததும் கேட்கும் சலசலப்பு இல்லை. போட்டி போட்டு துணிதுவைக்கும் சத்தம் இல்லை. குளியல் அறைகளில் கூட்டம் இல்லை. மொத்தம் நான்கே பேர்.



அதிலும் தெய்வானையைத் தவிர மற்ற மூவரும் தள்ளாத முதுமையில் இருப்பவர்கள். ஓடியாடி நடமாட முடியாதவர்கள். அவர்களது அறைக்கே சாப்பாட்டைக் கொண்டு சென்று விடுவாள் வைதேகி. நால்வரில் ராசய்யா மிகவும் தளர்ந்திருந்தார். பார்வை சுத்தமாய் குறைந்து விட நடமாட்டமே இல்லாமல் முடங்கிக்கிடந்தார்.

அவரது அறைக்குள் நுழைந்தாள். "தாத்தா! மணி நாலு. கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலமா. காலுக்கு இதமா இருக்கும்" - என்றவாறே அவரது தோள்பற்றி எழுப்பினாள்.

"வந்துட்டியாம்மா! அந்தக் குச்சிய எடுத்துத் தாம்மா" - என்றவாறு எழுந்து நின்றார்.

"அதுதான் நான் இருக்கேனே. என் கையைப் பிடிச்சிகிட்டு வாங்க ம்...மெல்ல" - மெதுவாக அடியெடுத்து அவருக்கு இணையாய் நடந்துவந்தாள்.

"ராசாத்தி! நேத்து இப்படிக் கொஞ்சம் நடந்தபிறகு ராத்திரிக்கு நல்லா தூங்கினேம்மா." "ஆமா தாத்தா! படுக்கையில இருந்தா கைகால் எல்லாம் அசைவில்லாம போயிடும். அதனால் தினமும் சாயங்காலம் இப்படிக் கொஞ்ச நேரம் நடந்தா உடம்புக்கும் தெம்பா இருக்கும். நல்லா தூக்கமும் வரும்."

"ம்... முன்னெல்லாம் பார்வை தெளிவா இருக்கும். மரத்தில இருந்து விழுற இலைதழையெல்லாம் சுத்தமா பெருக்கி வெச்சிருப்பேன். செடிகளுக்கு எல்லாம் தண்ணீர் விடுவேன். அவசரம்னா கடைக்குப் போயிட்டு வருவேன். இப்ப எதுவும் செய்யமுடியவில்லை. சும்மாவே இருந்து சாப்பிட கஷ்டமா இருக்கும்மா"

"ஏன் தாத்தா அப்படி நினைக்கிறீங்க. உடம்புல தெம்பு இருக்கிற வரை உழைச்சீங்க. இப்ப வயதான காலத்தில் ஓய்வெடுக்கிறதா நினைச்சுக்கங்க. இப்பல்லாம் சம்பளம் கொடுத்தாக்கூட யாரும் சரியாக உழைக்கிறதில்லை."

"நல்லா பேசுறம்மா. உன்கூடப் பேசினா நேரம் போறதே தெரியல்ல. மத்த கவலையும் மறந்துபோகுது."

"உங்களுக்கு என்ன தாத்தா கவலை? எங்கிட்ட சொல்லலாம்னா சொல்லுங்க" ராசய்யா பெருமூச்சை விட்டார். "இதைக் கவலைன்னு சொல்ல முடியாதும்மா. ஒரு மாதிரி சுயநலம்னு கூட சொல்லலாம்."

"என்ன தாத்தா சொல்றீங்க. அங்கே கல் இருக்கு இப்படி வாங்க"

''ஆமாம்மா. இதுக்கு முன்ன நிறையபேர் இருந்தாங்கள்ல. அபோல்லாம் நாம மட்டும் அநாதை இல்லை. நம்மளமாதிரி நிறைய பேர் இருக்காங்கன்னு தோணும். இப்ப கிட்டதட்ட எல்லாருமே அவங்க வீட்டுக்கு போயிட்டாங்க. இப்போ எல்லாருக்கும் உறவு இருக்கு நமக்குன்னுதான் யாருமே இல்லன்னு தோணுதும்மா'' - என்றதும் கலங்கிப் போனாள் வைதேகி.

நாம் செய்த நல்ல காரியத்திலும் ஒரு சில மனங்கள் காயப்பட்டு போகிறதே. மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தங்கள் இழப்பு பெரிதாக தெரியாமல் இருந்தவர்கள். இப்போது ரொம்ப மனம் உடைந்து போயிருப்பார்களோ. ஆமாம்! இவர்களுக்கு என்று எப்போது விடியும். உறவென்று சொல்ல யார் இருக்கிறார்கள். எப்போதோ உறவுகளால் கைவிடப்பட்டு தெருவில் அநாதையாய் நின்றவர்கள். இவர்கள் இங்கு இருப்பதோ ஏன் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா என்றே அவர்கள் அறிந்திருக்கப் போவதில்லை. கடைசிவரை இந்த இல்லத்திலே வாழ்ந்து முடிக்க வேண்டியதுதான். எத்தனை கொடுமையானவேதனை இது.

''என்னம்மா! நான் சொன்னது எதுவும் தப்பாம்மா. எதுவுமே பேசாம வர்ற'' - ராசய்யா கேட்க வைதேகி அவசரமாய் யோசித்தாள். என்ன சொல்லி இவர் மனதை மாற்றி தேற்றலாம்.

''அம்மா வைதேகி. ஒன்னுமே பேசமாட்டேங்கிறியே. நான் பேசினது உன் மனசை காயப்படுத்திவிட்டதா சொல்லம்மா!'' - என்றவாறு நின்றார்.

வைதேகி மெதுவாய் கேட்டாள். ''ஏன் தாத்தா! நான்தான் உங்களை தாத்தாவாய் நினைக்கிறேனா. நீங்கள் என்னை பேத்தியாக நினைக்கவில்லையா?''

''அடி ராசாத்தி! என்னம்மா இப்படிக் கேட்டுட்டே.''

''பின்னே! நீங்க மட்டும் அப்படிப் பேசலாமா? தாத்தா எப்பவுமே நமக்கு மேலே உள்ளவங்களைப் பார்த்து ஏங்குறதைவிட நமக்குக் கீழே உள்ளவங்களைப் பார்த்து இவங்க கஷ்டத்தை விட நம்ம கஷ்டம் எவ்வளவோ மேல் அப்படின்னு நம்மை நாமே தேத்திக்கணும் தாத்தா...''

''இல்லம்மா! நான் வருத்தப்படலம்மா...''

''வருத்தம் இருக்கும் தாத்தா. ஆனா நம்ம மனசை தேத்திக்கணும். இப்போ உங்களுக்கு தொண்ணூறு வயசு. உங்களுக்கு உறவுன்னு யாருமே இல்ல, ஆனா எனக்கு இருபத்திமூணு வயசுதான் தாத்தா. இந்த வயசிலேயே தாயை இழந்து தகப்பன் நிழல்படாம வளர்ந்து சொந்தம் கூடப் பொறந்தவங்கன்னு யாருமே இல்லாம அநாதையா நிக்கிறேனே.



என்னைவிட உங்கள் நிலை பரவாயில்லைதானே.

பாலானை எடுத்துக் கொள்ளுங்கள். நானாவது என்தாயின் அன்பில் இத்தனை வருஷம் வாழ்ந்துவிட்டேன். ஆனால் பாலா! சின்ன வயசிலேயே அம்மா, அப்பா ரெண்டு பேரையும் இழந்து பசியோட தெருவில் அலைந்து நொந்து... அது எவ்வளவு கொடுமை. அவர் நிலையை விட என் வேதனை குறைவுதானே.... அதை நினைத்து நான் ஆறுதல் பட்டுக்கொள்ள வேண்டும்.

இப்படி எல்லாருக்குமே கஷ்டம் இருக்கு தாத்தா. அடுத்தவங்க கஷ்டத்தை நினைச்சு நம்ம கஷ்டத்தை குறைச்சுக்கலாம். நமக்குன்னு யாருமே இல்லன்னு ஏன் நினைக்கணும். என்னை பேத்தியா நினைங்க. பாலாஜியை பேரனா நினைங்க. லலிதாம்மாவை உங்க பொண்ணா பாருங்க. ராமமூர்த்தி சாரை உங்க சகோதரனா நினைங்க. எல்லாருமே உறவாகிடுவாங்க.


# LIC OF INDIA

LIC

GET REGULAR MONTHLY INCOME



- Bright career
- endless income
- Value added work
- Full time/ part Time
- All Segment Persons can join as an advisor
- No Risk - No Investment
- Convert Your Contacts in to Huge Regular monthly Income.

Contact:

**K. MOHANRAJ**

DEVELOP MENT OFFICER

98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com

இங்கிருந்து போன எல்லாருக்குமே உறவு குடும்பம் எல்லாம் இருக்கு தாத்தா. எதுவுமே இல்லாத நமக்கே இத்தனை வேதனை இருக்கிறது என்றால் எல்லாம் இருந்தும் இங்கே வந்து அநாதையாய் கிடந்தவர்களின் மனம் என்ன பாடுபடும். அதனாலதான் அவங்களை அவங்க குடும்பத்தோடு சேர்த்து வைத்தோம். அதை நாம சந்தோஷமா ஏத்துக்கணும் தாத்தா. புரியுதா?''

''உணர்ச்சி பெருக்குதல் அவர் கைகளால் துழாவி வைதேகியின் முகம் வருடினார். ''புரியுதும்மா! நல்லா புரியுது. இந்த சின்ன வயசில் உனக்கு இருக்கும் பக்குவமும் தெளிவும் எனக்கு இல்லாமல் போயிற்றே. எவ்வளவு அழகாய் சோகத்தைக் கூட சுகமாய் ஏற்றுக் கொள்கிறாய் கண்ணம்மா. நான் என்னவென்றால் எல்லோரும் நம்மைவிட்டு போகிறார்களே என்றல்லவா நினைத்தேன். அது எவ்வளவு பெரிய தப்பு. என்னை மன்னிச்சிடும்மா.

பெரிய வார்த்தையெல்லாம் வேண்டாம் தாத்தா. இனி இதேபோல் எப்போதும் நீங்கள் கவலைப்படக் கூடாது. நாம் எல்லோருமே ஒரே குடும்பம். உறவுகள்... நம்மிடையே எந்த வருத்தமோ கலக்கமோ இருக்கக் கூடாது. உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் உரிமையாய்க் கேளுங்கள். சொல்லுங்கள். நானும், பாலாவும் உங்களை எங்கள் தாத்தாவாகத்தான் நினைக்கிறோம்''

''எனக்குத் தெரியும்மா. உங்கள் உண்மையான அன்பைப் புரியாதவனா நான். ஏதோ மனசஞ்சலத்தை உன்னிடம் கொட்டிவிட்டேன். அதற்காக தீர்வும் கிடைத்துவிட்டது''

''எதையும் பேசிட்டா கஷ்டம் இடையாது தாத்தா. கோபமோ சோகமோ வருத்தமோ சம்பந்தப்பட்டவர்களிடம் பேசிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். என்னிடம் பேசியது நல்லதாகப் போயிற்று. இதையே பாலாவிடம் கேட்டிருந்தால் ரொம்ப வருத்தப்பட்டிருப்பார்''

அவனிடம் சொல்லிடாதேம்மா. எங்களுக்காகவே வாழ்கிறவன் அவன். அவன் மனதை வேதனைப்படுத்திய பாவம் எனக்கு வேண்டாம்''

''அதெல்லாம் சொல்லமாட்டேன். நீங்க நடங்க, இதையே சாக்காக வைத்துக் கொண்டு நின்றுவிட்டால் எப்படி? ம்... இன்னும் அரைமணி நேரமாவது நடக்க வேண்டும்... கமான்...''

''சிரித்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தார் ராசய்யா''

பாலா வந்தா என்னை வந்து பார்க்கச் சொல்லும்மா. மூட்டுவலி தைலம் தீர்ந்து போச்சு... வாங்கச் சொல்லணும்''

''சரி தாத்தா... இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவார். இன்னிக்கு சீக்கிரமா வந்துடுவேன்னு சொல்லிவிட்டுத்தான் போனார், அநேகமா வர்ற நேரம்தான்'' - அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஏதோ ஒரு வாகனம் வந்து நிற்கும் ஓசை கேட்க ஆவலாய் திரும்பிப் பார்த்தாள்.

வந்தது பாலாவின் ஆட்டோ அல்ல. சிவப்பு நிற கார். காரை திறந்து கொண்டு இறங்கியவனைக் கண்டதும் வைதேகி முகம் கறுத்தது. இவன் எதற்காக இங்கு வருகிறான்'' வெறுப்பாக பார்த்தாள். அவன் உற்சாகமாக வந்து, ''ஹாய் வைதேகி! ஐம் கார்த்திக். என்னை தெரிகிறதா? உங்கள் அப்பாவின் மைத்துனன்'' என்றான் கண்களின் சிரிப்போடு.

# [.....12.....]

**காலையில் தினமும் கண்விழித்தால்**

**நான் கைதொழும் தேவதை அம்மா**

**அன்பென்றாலே அம்மா – என்**

**தாய் போல் ஆகிடுமா இமைபோல்**

**இரவும் பகலும் எனைக் காத்த அன்னையே!**

ஆத்திரமாய் நிமிர்ந்தாள் வைதேகி. '' அப்பாவே இல்லை என்று சொல்லிவிட்டேன். பிறகென்ன மாமன் மச்சான் என்று சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். இப்போது எதற்கு வந்தீர்கள். யாரைப்பார்க்க வேண்டும்'' - சிடுசிடுப்பாகவே கேட்டாள்.

''ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள் வைதேகி. நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும்?''

''என்னிடம் பேச என்ன இருக்கிறது. நீங்கள் போகலாம்?''

''இப்படிச் சொன்னா எப்படி? நான் என்ன பேசறேன்னு கேளுங்க அதுக்கு அப்புறமா உங்க முடிவைச் சொல்லுங்க.''

''அதுதான் உங்களிடம் பேச ஒன்றுமில்லை என்கிறேனே?''

''எனக்கு இருக்கிறதே, என் மாமா கடைசியாக மூச்சுநிற்கும் முன் என்னிடம் கேட்ட உதவியைச் செய்ய வேண்டாமா. அதற்காகத்தான் வந்திருக்கிறேன். இதை நான் ராமமூர்த்தி சாரிட்டயே பேசிடலாம்.

பட். உங்களைப் பத்தி பேசும்போது நீங்களும் கூட இருந்தா நல்லா இருக்கும்னு நினைச்சேன்'' - என்றான் கார்த்திக் பீடிகையுடன்.

''என்னைப்பற்றியா? என்னைப்பற்றி என்ன பேசவேண்டும்?'' மெல்லக்குனிந்தான். ''அதை இப்படியெல்லாம் பொது இடத்தில் வைத்து பேசக்கூடாது. நான் ராமமூர்த்தி சாரைப் பார்க்கிறேன். நீங்களும் வரலாம். அங்கே வைத்துச் சொல்கிறேன்'' - ரகசியமாய் சொல்லிவிட்டு அவன் விலகி நடக்க, வைதேகி குழம்பிக் போனாள்.

அப்படியென்ன பேச்சு? வாசுதேவன் மாதிரி எதுவும் டொனேசன் கொண்டு வந்திருக்கிறானா? அப்படி இருந்தால் சாரிடம் தானே கொடுக்க வேண்டும். என்னை ஏன் அழைக்கிறான். புதிராக வேறு பேசுகிறானே. இங்கே நின்று குழப்புவதை விட நேரில் சென்று பார்ப்பது மேல் என்று தோன்ற, சற்று தொலைவில் நின்ற தெய்வானையை அழைத்தாள்.

'தெய்வாம்மா! நீங்க தாத்தாவ அழைச்சிட்டுப் போயி அவர் ரூம்ல விட்டுடுங்க. நான் இதோ வர்றேன்' - என்றவாறு அவனிடம் ராசய்யாவை ஒப்படைத்துவிட்டு அலுவலக அறையை நோக்கி நடந்தாள். காரணம் எதுவும் புரியாமலே நெஞ்சில் திக்திக் என அடித்துக்கொண்டது.

''வாம்மா! உங்கிட்ட இவர் ஏதோ பேசணுமாம். வா'' - என்றார் ராமமூர்த்தி. தயக்கமாய் நுழைந்து அவர் அருகே நின்று கொண்டாள்.

''என்ன விஷயம்?'' - என்றாள் அவனை நேராய்ப் பார்த்து.

''மிஸ் வைதேகி! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். இது உங்கள் அப்பாவின் கடைசி ஆசை''

''லுக் மிஸ்டர் கார்த்திக். உங்கள் மாமா என்று சொல்லுங்கள். எனக்கு அப்பா என்று யாரும் கிடையாது'' - இடைவெட்டினாள்.

''ஓ.கே.என் மாமாவின் கடைசி ஆசை என்னவென்றால் அவரது மகளான உங்களை நான் திருமணம் செய்து கொண்டு வாழவைக்க வேண்டும் என்பதுதான். தன் முதல் மனைவிக்கு அவர் செய்த பாவத்திற்கு இந்த உதவியை நான் செய்தே ஆகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். உங்களுக்கு சம்மதம் என்றால் உங்களை மணந்து கொள்ள நான் தயார். என்ன சொல்றீங்க?'' - எனக் கேட்டவனை கண்களில் நெருப்பை கக்க பார்த்தாள்.

''என்ன? செய்த பாவத்திற்கு விமோசனமா. வாழ்க்கையை பிச்சை போடுகிறீர்களோ? நான் யாரிடமும் எனக்கு மாப்பிள்ளை வேண்டும் என்று கேட்கவில்லையே.



''வைதேகி! நீங்க தப்பா புரிஞ்சிகிட்டு பேசறீங்க''

''நான் சரியாத்தான் பேசறேன். நீங்கதான் தப்பான இடத்துல வந்து பேசிட்டு இருக்கீங்க. நீங்க சொல்லுங்க. அந்த ஆள் செய்த தப்பிற்கு இவர் நிவர்த்தி செய்ய வருகிறாராம். நான்சென்ஸ்''

ராமமூர்த்தி நடுவே புகுந்தார். ''அம்மா வைதேகி. நீ இவர்கிட்ட கோபப்படாதேம்மா. கார்த்திக்கை எனக்கு நல்லாத் தெரியும். ரொம்ப நல்ல பையன். நல்ல மனசு உடையவன்.''

''இருக்கட்டுமே மாமா. அதற்காக ஊர்ல உள்ளவன் செய்த தப்பிற்காக இவர் எத்தனை பெண்களுக்கு வாழ்க்கைக் கொடுப்பார். எனக்கு தகப்பன்ற உறவே கசக்கும்போது அவர் வழி உறவை ஏற்றுக் கொள்வேன் என்று இவர் எப்படி எதிர்பார்க்கலாம்''. அவர் சொன்னார் என்று இவர் வரலாமா?''

''இல்ல வைதேகி. மாமா சொன்னதற்காக மட்டும் நான் வரல்ல. எனக்கு... எனக்கு ஏற்கனவே நீ இங்கு வந்தது முதலே உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. உன்னை பிடிச்சுத்தான் மணக்க கேட்கிறேன். அதோடு என் மாமாவின் கடைசி நேர வேண்டுகோளும் இதுதான். அதனால்தான் அவர் விருப்பததோடு என் விருப்பத்தையும் சேர்த்தே கேட்கிறேன். என்னை உங்களுக்கு பிடிக்கலையா? விஸ்வநாதனுடைய மைத்துனராய் பார்க்காமல் என்னை வெறும் கார்த்திக்காக பாருங்கள் வைதேகி. நிச்சயம் உங்களுக்குப் பிடிக்கும்.''

''உங்களை மட்டுமல்ல வேறு யாரையுமே எனக்குப் பிடிக்காது''

''அதுதான் ஏன்? இப்படியே காலம் பூரா சேவை செய்துட்டே இருப்பீங்களா? உங்களுக்கு என்ன மதர்தெரஸான்னு நினைப்பா?''

''நான் எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து விட்டுப் போகிறேன். அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்''

''எப்படி கவலைப்படாமல் இருக்கமுடியும். நீங்க யாரோ இல்லங்க என் உறவுக்காரராகி விட்டீர்கள். எப்படியோ போ என்று எப்படி விடமுடியும்? பிறகு என் மாமாவின் ஆன்மா எப்படி சாந்தி அடையும்? - அவன் விடாப்பிடியாய் நிற்க, வைதேகிக்கு தலையை வலித்தது. தலையை இருகைகளாலும் பற்றிக் கொண்டாள்.

''ஓ.கே.நீங்கள் யாரோ. உங்களிடம் ஏன் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் சொல்லாவிட்டால் பிரச்சனை தீராது போல இருக்கிறது. இதோ பாருங்கள் மிஸ்டர் கார்த்திக்! நான் பாலாஜியை

விரும்புகிறேன். அவரும் நானும் திருமணம் செய்து கொள்வதாக இருக்கிறோம். இது என் முழு சம்மதத்தோடு நடக்கப்போகிறது. இனி என்னைப் பற்றி கவலைப்படாமல் நீங்கள் போகலாம். முடிந்தால் திருமணத்திற்கு அழைக்கிறோம். வந்துவிட்டு போங்க. இப்போ நீங்க போலாம்'' - என்றாள் தெளிவாக.

ஆனால் அவன் அசைவதாக இல்லை! வைதேகி! என்ன முட்டாள்தனம் செய்கிறீர்கள்?''

''வ்வாட்?''

''என்னை ஒதுக்கவேண்டும் என்பதற்காக போயும் போயும் ஒரு ஆட்டோக்காரனையா செலக்ட் பண்ணுவீங்க? ஷிட்''

''லுக் மிஸ்டர்! இது இப்ப எடுத்த முடிவு இல்ல. இங்கே வந்ததுல இருந்து அவரைப்பார்த்து, அவரோட ஒவ்வொரு செயலையும் பார்த்து வளர்ந்த நேசம் இது. இந்த ஜென்மத்தில என் கணவர்னா அது பாலாதான்.

அதுல எந்த மாற்றமும் இல்லை. இதை யார் தடுத்தாலும் மாறாது. உங்க நேரத்தையும் என் நேரத்தையும் வீணாக்காம கிளம்புங்க.'' - தீர்மானமாய்ச் சொன்னவளைப் பார்த்து நெற்றியில் அறைந்து கொண்டான் கார்த்திக்.

''உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? அவனைக் கட்டிக்கொண்டு காலம் முழுக்க இந்த இல்லத்தில ஒரு வேலைக்காரியா இருக்கப் போறீங்களா?'' - கார்த்திக் கோபமாய்க் கேட்க, ராமமூர்த்தி மட்டுமல்ல வெளியே நின்ற பாலாஜியும் அதிர்ந்துதான் போனார்கள்.

''பாலாவோட அன்புல என் தாயைப் பார்க்கிறேன். அவரோட மனசுல தெய்வத்தைப் பார்க்கிறேன். நீங்க பணக்காரங்க. உங்களுக்கு என்னை மாதிரி ஒரு அநாதையோட மன உணர்வுகளை புரிஞ்சிக்க முடியுமா?

ஆனா என் பாலாவால முடியும். என்னோட ஒவ்வொரு முகமாற்றத்தையும் அவர் கண்டுபிடிச்சிடுவாரு. என் கண் கலங்கினா அவரால தாங்கமுடியாது. எம்மனசு நோகுற மாதிரி ஒருவார்த்தை பேசமாட்டார்.

மொத்தத்தில ஒரு தாய் தன் சேயைப் பாதுகாக்குற மாதிரி என்னை பாத்துக்குவார். இதைவிட ஒரு பொண்ணுக்கு வேற என்ன வேணும்?''

''இல்ல வைதேகி! நான்...''

''ப்ளீஸ் மிஸ்டர் கார்த்திக்! நான் நல்லா வாழணும்னு நிஜமாவே நீங்க ஆசைப்படுறீங்களா?''

''யெஸ்! அதுக்காகத்தானே இவ்வளவு வாதாடுறேன்''



''அந்த ஆசை இருந்தா இதுக்கு மேல என்னை கட்டாயம் பண்ணாதீங்க. எனக்கு ஆடம்பர வாழ்க்கை வேண்டாம். என் பாலாவும் இந்த இல்லமும் போதும். நீங்க கிளம்புங்க.''

''வைதேகி''

''தம்பி! நான் இவ்வளவு நேரம் அமைதியா இருந்ததே எம்மருமக வாயால அவ முடிவைச் சொல்லணும்னுதான். அவதான் தெளிவாச் சொல்லிட்டாளே.'' - ராமமூர்த்தி சற்று உரக்கவே சொல்ல, பெருமூச்சுடன் எழுந்து கொண்டான்.

''ஓ.கே. எப்படியோ சந்தோஷமா வாழ்ந்தா போதும். வைதேகி! உங்களுக்கு எப்ப எந்த உதவி தேவைப்பட்டாலும் தயங்காம என்னிடம் கேட்கலாம். எனக்கு உங்க மேல எந்த வருத்தமும் இல்லை. நான்... கிளம்புறேன்.''

''ம்''

''மிஸ்டர் பாலாஜி அதிர்ஷ்டசாலி. ஹேப்பி மேரீட் லைப். பை'' - என்றவாறே அவன் வெளியேற, நிம்மதி மூச்சோடு அறையை விட்டு வெளியே வந்தவள் லேசாய் திடுக்கிட்டாள். வெளியே மரத்தோடு மரமாய் உறைந்துபோய் நின்றான் பாலாஜி.

# [.....13.....]

முதியோர் இல்லங்கள்
மொத்தமாய் மூடப்படும்
தினம்தான் பெற்றோர்கள்
தினமாய் கொண்டாடப்பட
வேண்டிய தினம்!

வைதேகியின் பின்னால் வெளியே வந்த ராமமூர்த்தியும் பாலாவைக் கண்டு லேசாய் துணுக்குற்றார். வெறித்த பார்வையோடு நின்றவனின் கண்கள் கலங்கியிருக்க, அவன் நின்ற கோலமே உள்ளே நடந்த சம்பாஷணைகளை கேட்டுவிட்டான் என்று உணர்த்தியது.

வரவழைத்துக் கொண்ட புன்னகையோடு மகனை நெருங்கினார்.

''வாப்பா! இப்பத்தான் வர்றியா?''

பாலாஜியிடம் துளியும் அசைவில்லை. கலக்கமாய் வைதேகியைப் பார்க்க, அவர் பாலாஜியை நெருங்கினாள்.

''பாலா! என்னாச்சி பாலா?''

இப்போதும் அவன் அசையவில்லை என்றதும் பதறினாள்.

''பாலா! என்ன பாலா? ஏன் இப்படி நிற்கிறீங்க? என்னைப் பாருங்களேன்'' - என அவனது தோளைப் பற்றி அசைத்தாள்.

வைதேகியின் முதல் தொடுகையில் சிலிர்த்து, கனவிலிருந்து மீண்டவன் போல் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''என்ன பாலா?''

''வை...தே...கி...''

''சொல்லுங்க பாலா?'' - என்றவாறே அவனது முகத்தை நிமிர்த்தியவளின் கையை தன் இருகரங்களாலும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். சூடான கண்ணீர்பட பதறிப் போனாள் வைதேகி,

''பாலா! என்ன பண்றீங்க?''

''வைதேகி! நான் என்ன தவம் பண்ணினேன்? என்னை... என்னை உனக்கு பிடிச்சிருக்கா?''

''இது என்ன கேள்வி பாலா? எம்மனசு உங்களுக்கு தெரியாதா?''

''அதில்ல... என்னால... இந்த ஆட்டோக்காரனால உன்னை... சந்தோஷமா வாழவைக்க முடியுமா? எனக்கு பயமா இருக்கே வைதேகி!''

''முடியும் பாலா. என்னால உங்ககூட சந்தோஷமா வாழ முடியும்'' - நெகிழ்ச்சியாய் அவனது கண்ணீரைத் துடைத்தாள். மறுப்பாய் தலையசைத்தான்.

''இல்ல... நான் பணக்காரன் இல்ல... அன்றாடங்காய்ச்சி. எங்கிட்ட கார் பங்களான்னு எதுவும் இல்ல.''

''வேண்டாம் பாலா. அதையெல்லாம் விட உங்க மனசு பெரிசு பாலா. உங்க இதயமும், இந்த இல்லமும், இந்த உறவுகளும் போதும் பாலா. இதைவிட பெரிய சொத்து எதுவுமே இல்ல.''

''இல்ல. நீ என்னை சமாதானம் செய்யறதுக்காக இப்படிச் சொல்ற. என்ன இருந்தாலும் நான் வீடுவாசல் இல்லாத அநாதைப்பய தானே?''

''டேய்! என்னடா சொல்ற? அப்போ இத்தனை நாளா என்னை அப்பான்னு கூப்பிட்டதெல்லாம் பொய்யா?''

''இ... இல்லப்பா!''

''பிறகேன்டா இப்படியெல்லாம் பேசுற? நீ என் பிள்ளை. எனக்குப் பிறகு



இந்த வீடு... இந்த சொத்து எல்லாம் உன்னோடது.

உனக்கு வீடு வாசல் இல்லன்னு யாருடா சொன்னது?

''இல்லப்பா! அந்தக் கார்த்திக் சொன்னப்ப தான் எனக்கு என்னோட நிலை புரியுது. நான் வெறும் ஆட்டோக்காரன் தானே. என்னைக் கட்டிகிட்டு இவ ஏன் கஷ்டப்படணும்?''

''பாலா''

''சின்ன வயசில இருந்தே நிறைய கஷ்டப்பட்டுட்டேன் பாலா. உங்களைப் பார்த்த பிறகுதான் நான் சிரிக்க ஆரம்பிச்சேன். உங்ககூட பழகின பிறகுதான் எனக்கு வாழணும்ற ஆசையே வந்தது. எனக்கு நீங்க வேணும் பாலா. நீங்க மட்டும்தான் வேணும்''

கண்களில் நீரோடு. கம்மிய குரலில் சொன்னவளை அதற்கு மேலும் தாள முடியாமல் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். இருவரின் விழிகளும் நனைந்தன.

''பாரேன் இந்தப்பயலை. மனசுக்குள்ள இவ்வளவு ஆசையை வெச்சிகிட்டு பெரிய தியாகி மாதிரி அந்தக் கார்காரனுக்கு விட்டு தர்றமாதிரி சொல்றானே!'' - என்ற லலிதாவின் குரலில் இருவரும் சட்டென விலகிக்கொண்டனர்.

''லலிதாம்மா... நீங்க... எப்போ வந்தீங்க?''

''உங்க வாக்குவாதம் தொடங்கும் போதே நாங்க வந்திட்டோம். ஏன்டாப்பா! உன் மனசில வைதேகியும் அவ மனசில நீயும் இருக்கிறது எங்களுக்கே தெரியும். பெறகென்ன நீபாட்டுக்கு ஏதேதோ சாக்கு போக்கெல்லாம் சொல்ற?''

சீக்கிரம் கல்யாணச் சாப்பாடு போடுங்கப்பா... என்ற போது அங்கு மகிழ்ச்சி நிலவியது அப்போது

வெளியே குரல் கேட்டது. ஸார்!

''யாரு?'' - என்றவாறே அனைவரும் திரும்ப, ஒரு ஆடவன் வெளியே நின்றிருந்தான். அவனருகே சற்று வயதான அம்மாள் கையில் துணிப்பையோடு சற்று மிரட்சியாய் நின்று கொண்டிருந்தாள்.

''ஸார்! எம்பேர் நாராயணன். இது எங்க அம்மா''

''சரி''

''எங்க அம்மாவை இங்கே சேர்க்கலாம்னு வந்தேன். மாசம் எவ்வளவு ஸார் பணம் கட்டணும்.''

''ஏன்? உனக்கு வீடு இல்லையா?''

''இருக்கு ஸார்''

''பிறகெதுக்கு உங்க அம்மாவை இங்க விட்டுட்டு போக வந்திருக்க?''

''அது... வீட்ல எப்பவும் பிரச்சனை ஸார். நிம்மதியே இல்லை. மாமியார் மருமக சண்டையில் நான்தான் மாட்டிகிட்டு முழிக்கிறேன். அதான்...''

''அப்போ உங்க அம்மாவை விரட்டிட்டா நீ நிம்மதியா இருந்திடுவியா?''

''ஸார்...''

''ஏன்டா! வீட்ல பிரச்சனைன்னா உடனே அம்மாவை வெளியேத்திடுவியா? ஏன் பிரச்சனை வருது அதை எப்படி தீர்க்கிறதுன்னு யோசித்திடுவியா? ஆம்பிள்ளைதானே நீ?''

''ஸார்! தேவையில்லாம ஏன் பேசுறீங்க? உங்களுக்குத் தேவை பணம்தானே. எவ்வளவுன்னு சொல்லுங்க. நான் கட்டிடுறேன். அதைவிட்டுட்டு என் குடும்ப விஷயத்தில நீங்க நாட்டாமை பண்ணவேண்டாம்.

பெத்தவளுக்கு ஒரு பிடி சோறு போட துப்பில்ல. உனக்கு கோபம் வருதோ?''

''சும்மா பேசாதீங்க ஸார். இந்த மாதிரி வயசான ஆட்களை சேர்க்கிறதுதானே உங்க வேலை. அதுக்குத்தானே இவ்வளவு பெரிய போர்டை மாட்டி வெச்சிகிட்டு இதை நடத்துறீங்க?'' - வந்தவனும் சீற, பாலாஜி கையமர்த்தினான்.

''ஓ! இதுதான் உம் பிரச்சனையா? இந்த போர்டை கழற்றாம விட்டுட்டோமே'' - என்றவாறு வெளியே மாட்டியிருந்த மரப்பலகையால் ஆன போர்டை கழற்றி கீழே எறிந்தான்.

''இப்ப இது முதியோர் இல்லம் இல்ல. எங்க வீடு புரியுதா? கிளம்பு''

''ஸார்?''

''அடபோப்பா! நாங்களே எம்புள்ளைக்கு கல்யாணத்துக்கு நாள் குறிச்சிட்டு இருக்கோம். நீ வேற வந்து அவனை மூட்-அவுட் பண்ணாதே. போ...போ...'' -ராமமூர்த்தி அவனை விரட்ட, முணுமுணுத்தவாறே அவன் வெளியேறினான்.

அந்த அம்மாள் கண்களில் நன்றியோடு மகன் அறியாவண்ணம் அவரை கைகூப்ப, அனைவரும் புன்னகையோடு அவருக்கு கையசைத்தனர். ராமமூர்த்தியின் வீடு கல்யாணக்களை கட்டத்துவங்கியது. இனி அந்த இல்லத்தில் கண்ணீரோ கவலைகளோ இருக்காது. சந்தோஷம் மட்டுமே குடிகொண்டிருக்கும்.

- முற்றும் -